www.tamilarangam.net


# களத்தில்

திருவள்ளுவர் ஆண்டு 2028 (25.03. 1998) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (157) அன்பளிப்பு: 60 p


எமது புனித விடுதலைப் போராட்டத்தில் வரலாற்றுக் காவியமாகிவிட்ட எமது தியாகிகளில் அன்னை பூபதி ஓர் உன்னத இடத்தைப் பெறுகிறார். அவரது தியாகம் ஒப்பற்றது – உலக வரலாற்றிலேயே புதுமையானது.

*- தமிழீழத் தேசியத் தலைவர்*

# ஐந்து நிமிடத்தில் கொடிகாமப் பகுதியில் மினி முகாம் தகர்ப்பு

இம்மாதம் இருபதாம் திகதி வெள்ளிக்கிழமை மதியம் இரண்டரை மணியளவில், கொடிகாமம் கட்டையடைப்புப் பகுதியில் ஐந்தே ஐந்து நிமிடங்களில் சிறீலங்காப் படைகளின் சோதனை மினிமுகாம் ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளினால் தாக்கியழிக்கப் பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கொமண்டோ அணியொன்றினால் நடத்தப்பட்ட இத் துணிச்சல் மிகு தாக்குதலில் ஒரு பெண் இராணுவம் உட்பட ஆறு படையினர் கொல்லப்பட்டதாகவும் இரண்டு தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள் வீரச்சாவடைந்ததாகவும் தெரியவருகிறது. கடந்த மாதம் இதே தென்மராட்சி கொடிகாமம் பகுதியில் இராணுவப் பிரிகேடியர் சென்று கொண்டிருந்த வாகனத் தொடரணி மீது நடத்தப்பட்ட தாக்குதலில் வீரச்சாவடைந்த தென்மராட்சிக் கோட்டப் பொறுப்பாளர் மேஜர் ஆனந்தன் அவர்களின் நினைவாகவே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தளச்செய்தி தெரிவிக்கிறது. இந்தத் தாக்குதலில் தலாம் ஒவ்வொரு ஆர்.பி.ஜி, ஏ.கே.எல்.எம்.ஜி, என்பனவும் 4 ரி.56, 8 ஏ.கே.எல்.எம்.ஜிட்ரம் மகசீன்கள், 4 ரி.56 மகசீன்கள், 1.எம் சன்னங்கள் 250 உட்பட பெருந்தொகையான ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

**அம்பாறையில் அதிரடிப்படையினரின் நகர்வு முறியடிப்பு**

பத்தொன்பதாம் திக்தி காலை எட்டு மணி பத்து நிமிடம்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## அன்னை பூபதி 10ஆம் ஆண்டு நினைவுநாள்

ராஜீவ் காந்தி தலைமையிலான இந்திய அரசிடம் நீதி கோரி 1988ஆம் ஆண்டு பங்குனி மாதம் 19ஆம் திகதி அண்ணல் காந்தி காட்டிய அகிம்சை வழியில் உண்ணாவிரதப் போராட்டம் அன்னை பூபதியால் தொடங்கப்பட்டது. ஆயினும், காந்தி பெயர் சொல்லி பெருமைப்படும் பாரத அரசு, அன்னை பூபதியின் அகிம்சை வழி உண்ணாவிரதப் போராட்டத்தை ஒரு மாத காலமாக அலட்சியப்படுத்தியதால் அன்னை பூபதி தியாகச் சுடராக சித்திரை 19ஆம் திகதி மரணத்தைத் தழுவிக் கொண்டார். தியாகச் சுடராக அன்னை பூபதி தன் இன்னுயிரை தமிழீழத் திற்குத் தந்த பத்தாவது ஆண்டு நினைவுகள் தமிழீழ மெங்கும் மக்கள் விழாக்களாக ஆரம்பமாகியுள்ளன.

புதுக்குடியிருப்பில் இனியவன் தலைமையில் தியாகி அன்னை பூபதியின் நினைவு நாளும் நாட்டுப் பற்றாளர் நாளும் மாவீரர் மண்டபத்தில் 19–3–98 காலை 9 மணிக்கு ஆரம்பமாகியது.

தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் அவர்கள் ஈகைச் சுடரேற்றி வைக்க, தமிழீழத் தேசியக் கொடியை முல்லை மாவட்ட நிர்வாகச் சேவைப் பொறுப்பாளர் இளஞ்சேரன் ஏற்ற நினைவு விழா ஆரம்பமாகியது.

அன்னையின் புகழ் அஞ்சலிக் கூட்டங்கள், நினைவுதின விளையாட்டுப் போட்டிகள், பொது அறிவுப் போட்டிகள், சிரமதானப்பணிகள், அடையாள உண்ணாவிரதங்கள் என்பன 19.03.98 – 19.04.98 வரை தமிழீழமெங்கும் மிக எழுச்சியாக நடாத்தப்பட உள்ளன. ✳




**மலர் தூவி வணங்குகின்றோம்!**

அன்னை பூபதியே
அணையா விளக்கே
மண்ணை நேசித்து
விண்ணை அடைந்த
பெருமை உணர்ந்தே
மலர்தூவி
வணங்குகின்றோம்!

## தமிழீழத்தில், சர்வதேச பெண்கள் தின மாதத்தில் படைகளின் பாலியல் வன்முறைகள் உச்சம்

உலகம் சர்வதேச பெண்கள் தினத்தைக் கொண்டாடி மகிழும் மார்ச் மாதமாகிய இம் மாதத்தில் சிறீலங்காப் படைகள் தமிழீழத்தில் தமிழ்ப் பெண்களுக்கு மிகக் கொடுமையான பாலியல் வன்முறைகளைச் செய்துவருவதை அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் உறுதி செய்கின்றன.

வாய்பேச முடியாத செவிப்புலன் அற்ற 28 வயதான எஸ். செல்வராணி என்ற தமிழ்ப் பெண் ஒருவர் தனது சிநேகிதி ஒருவரைப் பார்க்கச் சென்ற இடத்தில், சிறீலங்கா இராணுவத் தினரின் ஈவிரக்கமற்ற பாலியல் வன்முறைக்குப் பலியாக் கப்பட்டுள்ளார். 16ஆம் திகதி பட்டப் பகல் பன்னிரெண்டு மணிக்கு இவரை வழிமறித்த சந்திரிகா படையினர், கூட்டாக பாலியல் வன்முறையில் இறங்கியதாகவும் இதற்குப் பலியான இளம்பெண் செல்வராணி, இந்த மிருகத்தனமான கொடுமையைத் தாங்க இயலாது துடிதுடித்து, வீட்டிற்கு வந்ததும் மண்ணெண்ணெய் ஊற்றி தனக்குத் தானே தீ மூட்டி தற்கொலை செய்து கொள்ள முயற்சித்த வேளை, இவரின் தாயாரால் தெய்வாதீனமாகத் தடுக்கப்பட்டு

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## இந்தியாவின் புதிய பிரதமராக வாஜ்பாய் பாதுகாப்பு அமைச்சராக ஜோர்ஜ் பேர்னாண்டஸ்

இந்தியக் குடியரசின் புதிய பிரதமராக திரு. வாஜ்பாய் அவர்கள் பதவியேற்றுள்ளார். இவரது பாராளுமன்ற மத்திய அமைச்சர்கள் 21 பேரில் உள் துறை அமைச்சராக திரு. அத்வானி அவர்களும் பாதுகாப்பு அமைச்சராக ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அவர்களும் இடம்பெற்றுள்ளார்கள். சோல்பரி அரசியலமைப்பை பிரித்தானியா இலங்கைத் தீவுக்கு அறிமுகப்படுத்த முயன்ற வேளைகளில்,

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

www.tamilarangam.net





# லண்டனில் தந்தை செல்வாவின் நூற்றாண்டு நிறைவுவிழா

தமிழீழத் தந்தை சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழா, லண்டன் வாழ் தமிழர்களால் லண்டன் ஈஸ்ட்காம் ட்ரினிட்டி மண்டபத்தில் 21.03.98இல் மிக எளிமையாக நன்றியுடன் கொண்டாடப்பட்டது. தந்தை செல்வாவின் செயற்திட்டங்களில் பெருமளவில் பங்கேற்று உழைத்தவரும் தமிழீழத் தொண்டருமான இ. முருகானந்தன் அவர்களின் பெருமுயற்சியால் அமைக்கப்பட்ட தந்தை செல்வா நூற்றாண்டு விழாக்குழுவால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்விழாவுக்கு வழக்கறிஞர் சிதம்பரப்பிள்ளை அவர்கள் தலைமை வகித்து தலைமையுரையாற்றினார்.

இவ்விழாவில் தந்தை செல்வாவுடன் நீண்ட காலமாக உழைத்த ஆவரங்கால் திரு. க. சின்னத்துரை, திரு. ஐ.தி. சம்பந்தன், செல்வி. செ. அங்கயற்கண்ணி ஆகியோர் உட்பட திருமதி. புவனேஸ்வரி நடராஜா, செல்வி. ம. துளசி, திரு. பொன். பாலசுந்தரம், திரு. வீர. இரத்தினம், திரு. பொ. சிவசுப்பிரமணியன், திரு. ச. சிற்றங்கன், திரு. சூ.யோ. பற்றிமாகரன் ஆகியோர் உரையாற்றினர். வரவேற்புரை திரு. வே. ஜெகேந்திரபோஸ் அவர்களால் நிகழ்த்தப்படடடது. திருமதி. த. இந்திராணி அவர்களால் தந்தை புகழ் பாடப்பட்டது. திரு. செ. நாகேந்திரன் அவர்கள் கவிதை வழங்கினார். தமிழீழத் தந்தை செல்வா அவர்களின் திருவுருவப் படம், தந்தை செல்வாவின் பெருமதிப்புக்குரிய தொண்டர்களில் ஒருவரான திரு. ஜே.எஸ். அழகையா ஆசிரியர் அவர்களால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டு, தமிழீழப் புலம் பெயர் மக்களால் நூறு விளக்கேற்றி அஞ்சலி செய்யப்பட்டது. தமிழீழத்தில் உயிரிழந்தோருக்கும் தமிழீழத்துக்காக உயிரை அர்ப்பணித்தோருக்கும் விழாவின் ஆரம்பத்தில் அமைதி வணக்கம் செய்யப்பட்டது. திரு. இ. முருகானந்தன் நன்றியுரை நிகழ்த்தினார்.

"தமிழீழத் தந்தை செல்வாவின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் உரிமை தமிழீழத்திற்காகப் பாடுபடுபவர்களுக்கு மட்டுமேயுண்டு. தமிழீழத் தேசத்தலைவர் பிரபாகரன் தலைமையில் தமிழீழத்தைப் மீளமைக்க உழைத்து, தமிழீழத்தை பெறுவதின் மூலமே தமிழீழத் தந்தை செல்வா அவர்களின் பணிக்கு தமிழீழ மக்கள் நன்றி செலுத்த முடியும் என்ற கருத்துக்கள் கூட்டத்தில் வலியுறுத்தப் பட்டது. தந்தையால் சுயநிர்ணய உரிமைப் பிரகடனத்தின் மூலம் அந்நிய அரசாகப் பிரகடனப் படுத்தப்பட்ட சிறீலங்கா அரசின் சட்டவாக்க- சட்ட அமுலாக்க -நிர்வாக முறைமைகளில் சேர்ந்து இயங்குபவர்கள் யாராக இருந்தாலும் தந்தை செல்வாவின் வழியில் இருந்து தவறியவர்களே என்ற கருத்து ஆழமாக எடுத்துரைக்கப் பட்டன. அத்துடன், தமிழர்கள் ஓரணியில் ஐக்கியப்பட்டு குரல் கொடுப்பதன் மூலமே, தமிழீழ தேச விடுதலையை வென்றெடுக்கலாம் எனவும் வலியுறுத்தப் பட்டது. ✳

## ஐந்து நிமிடத்தில் கொடிகாமப் பகுதியில் .......

அளவில் முன்னேறிக் கொண்டிருந்த விசேட அதிரடிப் படையினர் மேல் உக்கிரமான தாக்குதலை மேற்கொள்ளத் தொடங்கிய தமிழீழ விடுதலைப் புலிகள், எம்.ஐ 24 ரக உலங்கு வானூர்திகளின் தாக்குதல்களுக்கும் ஈடுகொடுத்து, மதியம் 2 மணிவரை பெரும் சண்டை செய்துள்ளனர். சிறீலங்காவுக்குப் பலத்த இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளதாக அறியப்படும் இத் தாக்குதலில்? விடுதலைப் புலிகள் தரப்பில் மூன்று போராளிகள் வீரச்சாவெய்தியுள்ளதாகவும் தெரிகிறது.

## திருகோணமலைத் துறைமுகத்துள் அதிவேக ரோந்துப் படகு மூழ்கடிப்பு

இம்மாதம் பதினொராம் திகதி, பலத்த கட்டுப்பாடுகள் மிகுந்த திருகோணமலைத் துறைமுகத்துள் சிறுத்தைப் படையணியின் கரும்புலிகள் ஊடுருவி நள்ளிரவு 12.30 மணிக்கு நடாத்திய துணிகரத் தாக்குதலில் சிறீலங்காவின் அதிவேக ரோந்துப் படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டது. சிறீலங்காவின் அதிஉச்சப் பாதுகாப்புடன் கூடிய இப்பகுதியில் நடாத்தப்பட்ட இத் தாக்குதலில், தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் கப்டன் இசையாளன்(கந்தராஜ் ரவிராஜ்- கிளிநொச்சி), கப்டன் ஆர்வலன் (செபஸ்ரியன் அகஸ்ரின்- நுவரேலியா ) ஆகிய இரு கரும்புலிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

## புல்மோட்டைக் கடல் பரப்பில் மூன்று டோராக்கள் சேதம்

இம்மாதம் 9ஆம் திகதி இரவு 10.30 மணிக்கு திருகோணமலையில் புல்மோட்டைக் கடல் பரப்பில் ஐந்து மணித்தியாலங்களுக்கு மேலாக நடந்த கடற்போரில், சிறீலங்கா கடற்படையின் மூன்று டோராக்கள் சேதமாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் தரப்பில் மேஜர் கருணாகரன்(தங்கவேலாயுதம், யாழ்மாவட்டம்) கப்டன் கோமளன்(அரசலிங்கம் சிவக்குமார், யாழ் மாவட்டம்) ஆகிய இரு போராளிகள் வீரச்சாவெய்தினர்.

மேலும், இதே தினம் அதிகாலை 2.30 மணிக்கு மூதூர் பச்சனூரில் 60 விசேட பயிற்சி பெற்ற பொலிஸ் கொமாண்டோக்களைக் கொண்டிருந்த சிறீலங்காப் பொலிஸ் முகாம் பத்து நிமிட கடும் சண்டையில் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியுற்றமை குறிப்பிடத் தக்கது.

தாயக விடுதலையைத் தாகமாகக் கொண்டு ஆக்கிரமிப்புப் படைகளுக்கெதிராகக் களமாடி தமது இளைய, இனிய உயிரை ஈகஞ்செய்த இம் மாவீரர்களுக்கு எமது வீர வணக்கங்கள். ✳

## இந்தியாவின் புதிய பிரதமராக.....

இலங்கையில் உள்ள தமிழர் நலன்களில் அக்கறை காட்டிய இந்திய அரசு, தனது காலனித்துவ செயலாளர் மூலம் குறிப்புக்களை பிரித்தானிய அரசுக்கு வழங்கி வந்தது. அத்துடன் சோல்பரி அரசியலமைப்பு தமிழர்களை பாதுகாக்கத் தவறிவிட்டது எனவும் சுட்டிக்காட்டி வந்தது. இதனால் சோல்பரி குழுவின் அறிக்கை, இலங்கை, இந்தியா, இங்கிலாந்து ஆகிய தேசங்களில் ஏககாலத்தில் வெளியிடப்பட்டமை குறிப்பிடத் தக்கது. ஆனாலும், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பிரச்சினைகளை அவையே தீர்க்கக்கூடிய விதத்தில் காலனித்துவம் மேற்கொண்ட சமார்த்தியமான செயற்பாடுகள் இந்திய நலன்களைக் கருதி, இலங்கைத் தீவில் இந்தியாவின் அழுத்தங்களைத் தளர வைத்தது.

இருந்தபோதிலும், ஈழத்தமிழர் பிரச்சினை என்றுமே இந்தியாவில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது என்பதை உணர்ந்த இந்திரா காந்தி அம்மையார், தமிழர்கள் இனத்துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படுவது குறித்து சர்வதேச மட்டத்தில் குரல் கொடுக்கத் தொடங்கினார். இதனால் ஆத்திரத்துடனும் பின்னர் தந்திரமாகவும் அதை அணுக முற்பட்ட சிறிலங்கா, மிகத் தந்திரமான முறையில் ராஜீவ் – ஜே.ஆர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தி இந்தியாவை தனது தமிழின ஆக்கிரமிப்புக்கு இனக்கொலைகளுக்கு சாதகமான போக்கை காட்டக் கூடிய நாடாக மாற்றிக் கொண்டது. அன்று முதல் இன்றுவரை இந்தியாவின் போக்கினால் தமிழீழ மக்கள் மேலும் மேலும் துன்பங்களை அனுபவிக்க வேண்டி நேர்ந்தமை தமிழீழ வரலாறாக உள்ளது.

இந்த வரலாற்றுத் தவற்றினைத் திருத்தி, தமிழீழ மக்களது நியாயமானதும் தவிர்க்கப்பட முடியாததுமான சுயநிர்ணய கோரிக்கையை இந்தியா ஏற்று, தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை அங்கீகரித்து, தமிழீழ மக்களின் பாதுகாப்பான அமைதிக்கு சிறிலங்கா மேல் தனது அழுத்தங்களை மேற்கொள்ள வேண்டுமெனப் புலம்பெயர் தமிழர்கள் விரும்புகின்றனர். ✳

## தமிழீழத்தில், சர்வதேச பெண்கள் தின ...........

சாவகச்சேரி மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கு முதல்நாள் திருநெல்வேலியில் மூன்று குழந்தைகளின் தாயும் மூன்று மாத மகப்பேறுநிலை அடைந்தவராகவும் இருந்த பாலச்சந்திரன் பிரேமலதா என்ற தமிழ்த் தாயை, கோப்பாயைச் சேர்ந்த சிறீலங்காப் பொலிஸ் ஒருவன் பாலியல் வன் முறைக்குட்படுத்த முற்பட்ட வேளை அயலவர்களால் விரட்டிச் செல்லப்பட்டு மரவள்ளித் தோட்டத்தில் வைத்து பிடிக்கப்பட்டு நையப் புடைக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிறீலங்காப் படையினரின் துணைப்படையாகத் தொழிற்படும் தமிழ்க்குழுக்களும் இந்தப் பாலியல் வன்முறை விடயத்தில், சிறீலங்காப் படையினருக்குத் தாங்களும் சளைத்தவர்கள் அல்ல என நிரூபித்து வருகின்றனர். ஈ.பி.டி.பி குழுவைச் சேர்ந்த கோ. சிவநாதன், 21 வயதான எஸ். புஸ்பலதா என்ற தமிழ்ப்பெண்ணைத் தடுத்து வைத்திருந்த வேளையில் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியுள்ளார். இவர்களின் பிடியிலிருந்து தப்பிய இத் தமிழ்ப் பெண் சிறீலங்கா நீதிமன்றத்தில் தனக்கு நேர்ந்த இக்கொடுமை குறித்து முறையீடு செய்ததை அடுத்து, ஈ.பி.டி.பி உறுப்பினர் சிவநாதனை கைது செய்யும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போதிலும் சிவநாதன் இராணுவத்தினரின் உதவியுடன் தலைமறைவாகி ஒளிந்து வாழ்ந்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ✳

# வட்டுக்கோட்டையில் சாதிச்சண்டை

## தமிழர் பிரச்சினையை திசை திருப்பும் சிறீலங்காவின் சதி

தமிழ் மக்களிடையே சாதிச் சண்டைகளை உருவாக்கி, தமிழினத்தின் தேசிய ஒற்றுமையைச் சிதைத்தல் என்பதும் அதனைச் சாட்டாக வைத்துத் தமிழரிடையே ஊடுருவல்களை மேற்கொள்ள முயற்சிப்பதும் சிறீலங்கா அரசுகளின் அதிலும் குறிப்பாக சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் தமிழின ஒடுக்குமுறை நிகழ்ச்சி நிரல்களில் ஒன்று. 1970 களில் சாதி பேதங்களை மையமாக வைத்து, தமிழரிடையே பௌத்த மதத் திணிப்பை மேற்கொள்வதற்கு புத்தூரில் சிறீமாவோ ஆட்சியின் போது சிறீலங்கா சுதந்திரக்கட்சி செய்த சதி முயற்சிகளை நாடறியும். அத்துடன் சாதிபேதங்களை ஊக்குவித்து, சலுகை வழங்கும் ஆட்சியாளர்களாகத் தம்மையும் சலுகைபெறும் சந்ததியாகத் தமிழ் மக்களையும் என்றும் நடாத்தலாம் என்பது சிங்கள பேரினவாதிகளின் சதிச்சிந்தனையாக இருந்து வந்துள்ளமையைச் சரித்திரம் விளக்கி நிற்கிறது. இந்த அவதந்திரப் புத்தியை சந்திரிகா மீளவும் நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ளதை யாழ்குடா நாட்டில் சிறீலங்கா வளர்க்கத் தொடங்கியுள்ள சாதிச் சண்டைகள் வெளிப்படுத்துகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆட்சியில் சட்டத்தின் மூலமும் கொள்கை விளக்கங்கள் மூலமும் தடைசெய்யப்பட்டிருந்த சாதிச் சண்டைகள், வட்டுக்கோட்டையிலும் இருபாலையிலும் மீண்டும் தலை தூக்கியுள்ளன. மனித மாண்புக்கும் மனிதாயத்திற்கும் மதிப்புக் கொடுத்து விடுதலைப் புலிகளால் தமிழர் சமுதாயத்திடை இருந்து விரட்டியடிக்கப்பட்ட சாதிச் சண்டைகளும் மழுங்கடிக்கப்பட்ட சாதிய உணர்வுகளும் சந்திரிகாவின் இராணுவ ஆட்சியில் வளர்க்கப்பட்டு வருவது கண்டு, தமிழ் மக்கள் ஆழ்ந்த கவலையும் வேதனையும் அடைந்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற பெரிய அளவிலான சாதிச் சண்டையில் பெண்கள் குழந்தைகள் உட்பட 14 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர் எனக் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதே வேளை, கடந்த மாதம் இருபாலையில் நடந்த சாதிச்சண்டையில் ஆறுபேர் காயமடைந்தமையையும் தை மாதத்தில் ஆனைக்கோட்டை சவக்காட்டிலும் சாதிச்சண்டை இடம்பெற்றமையையும் அப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ✳

www.tamilarangam.net





# செயலால் முறியடிப்போம்!

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவின் ஒவ்வொரு செயற்திட்டங்களும் தமிழர்களை – தமிழர் தாயகத்தை சுட்டுப் பொசுக்குவதை மையமாகக் கொண்ட தீப்பொறிகளாகவே உள்ளன. அச் செயற்திட்டங்கள் அனைத்தினதும் வெளியடக்கம் பார்வைக்கு மிக அழகாக இருக்கும். உச்சரிப்பில் இனிமை காணக்கூடிய பெயர்களும் சூட்டப்படும். ஆனால், உள்ளடக்கமோ தமிழினத்தையே இலங்கைத் தீவிலிருந்து வேரோடு சுட்டெரிக்கக் கூடிய கந்தகக் குவியல்கள். தமிழீழத் தேசத்தையே சிதறடிக்கும் சிந்தனைகளால் அமைக்கப்பட்ட வெடிமருந்துப் பெட்டகங்கள். தமிழர்களுக்கு, சமாதானப் பேச்சுவார்த்தை – சமாதானத்திற்கான யுத்தம் – தமிழ் மக்களை விடுவிப்பதற்கான சண்டை – பாதை திறப்புக்கான போர் என்றெல்லாம் எத்தனையோ இனிப்பான வார்த்தைகளைப் பேசி, சர்வதேச உலகத்தின் முன் தமிழர் நலனில் அக்கறை உள்ள அரசாக நாடகம் ஆடுகின்றது சிறீலங்கா அரசு. அதேவேளை, முன்னைய சிங்கள அரசுகளை விட மோசமான முறையில் தமிழின அழிப்பை – தமிழீழ தேச உட்கட்டுமானக் குலைப்பை வேகமாக நடைமுறைப்படுத்துவதையே நடைமுறைக் கொள்கையாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றார் சந்திரிகா.

"ஒரு குண்டையேனும் தமிழர் தலைமீது இனிமேல் விழவிடேன்" என ஆவேசமாகப் பேசி பதவிபிடித்து, சமாதானப் பேச்சு என நடித்து உலகின் கவனத்தைத் திசைதிருப்பி தமிழர் தலைகளின் மேல் குண்டுக்குளியல் நடத்தும் இரட்டை வேடமிடும் அதிஉத்தமியாக சந்திரிகா விளங்குகின்றார். சமாதானமே உயிர் மூச்சு எனக் கூறும் சந்திரிகா, இலங்கைத் தீவு எங்குமே தமிழ் மக்களை அவர்களது வீடு வாசல்களில் கூட நிம்மதியாகப் படுத்துத் தூங்க விடாது, தனது படைபலம் கொண்டு வாட்டி வதைக்கும் இராணுவச் சர்வாதிகாரியாக பேயாட்சி நடாத்திக் கொண்டு இருக்கிறார். எந்த நேரம் சந்திரிகா படை நுழையும், எவரை இழுத்துச் செல்லும், யாரைச் சுட்டுத் தள்ளும், யாரை பாலியல் வன்முறைக்குட்படுத்தும் என்ற ஏக்கத்துடனேயே தமிழ் மக்கள் வாழ்கின்றனர். மனித உரிமை சாசனத்தின் பொன்விழாவை உலகு பெருமையுடன் கொண்டாடும் இக்கால கட்டத்தில்கூட தமிழீழ மக்கள் இலங்கைத்தீவில் இக்கொடுமைகளால் தவித்துக் கொண்டிருக்கின்றனர். ஒரு மக்களுக்கு பாதுகாப்பையும் அமைதியையும் ஒரு அரசால் ஏற்படுத்த இயலாது இருக்கும் பொழுது, ஐக்கிய நாடுகள் சபைக்கு அம்மக்கள் சார்பாக தலையிட சட்டபூர்வமான உரிமையும் கடமையும் உண்டு. இதனை ஐக்கிய நாடுகள் சபைக்கும் சர்வதேச சமூகத்திற்கும் வலியுறுத்த வேண்டிய பொறுப்புள்ளவர்களாக – கடமையுள்ளவர்களாக புலம்பெயர் தமிழர்கள் சர்வதேச நாடுகளில் வாழ்கின்றனர். இந்தப் பொறுப்பை சர்வதேசங்களில் வாழும் புலம் பெயர் தமிழர்கள் நிறைவேற்றுவதைத் தடுப்பதன் மூலமே, சர்வதேச நாடுகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிப்பதைத் தடுக்கலாம் என்பதே சந்திரிகாவின் திட்டம். இதனால் இன்று புலம்பெயர் தமிழர்களின் செயற்பாடுகளை தடுக்கும் முயற்சிகளில் சந்திரிகா அரசு மும்முரமாக ஈடுபட்டு வருகிறது. இவை இரண்டு முக்கிய தலைப்புக்களில் செயற்படுத்தப்படவுள்ளன. ஒன்று, புலம்பெயர் தமிழர்களை பொருளாதார அகதிகள் என மகுடம் சூட்டுவதன் மூலம் அவர்களது நற்பெயருக்கும் பணிகளுக்கும் குந்தகம் ஏற்படுத்துவது. அடுத்தது, விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கம் எனப் பச்சைகுத்துவிப்பதன் மூலம், புலம்பெயர் தமிழர்களது செயற்பாடுகளைத் தடைப்பட வைப்பது. தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் பிரித்தல் என்ற சந்திரிகாவின் சிந்தனையின் சர்வதேச விரிவாக்கமாகவே இதனை எடுத்து நோக்க வேண்டியுள்ளது.

தமிழ் மக்களை இனத்துன்புறுத்தலுக்கு உள்ளாக்குவதன் மூலம் இனங்காணக் கூடிய அச்சத்தை ஏற்படுத்தி, அவர்களது அரசியல் பணிவைப் பெறுதல் என்பதே சிறீலங்காவின் நோக்கும் போக்குமாகும். அதேபோன்று, தமிழர்களின் பொருளாதாரத்தைச் சிதைப்பதன் மூலம், தமிழர்கள் தேசஇனமாக வாழ்வதை அழித்தொழிக்கலாம் என்பதும் சிறீலங்கா அரசுகள் ஆரம்ப காலம் முதல் கடைப்பிடித்து வரும் கொள்கையாகும். ஆயினும், தமிழீழ மக்களின் விடுதலை உணர்வுக்கும் மன உறுதிக்கும் முன் சிறீலங்காவின் இந்த அச்சுறுத்தல்கள் எடுபடவில்லை. விடுதலைப் புலிகளைக் காட்டுக்கு அனுப்பி விட்டோம் என முரசறைந்த சந்திரிகா அரசாங்கம் இன்று பார்க்கும் இடமெல்லாம் விடுதலைப் புலிகள் நிற்பதாக அஞ்சி நடுங்கி பதைபதைத்துக் கொண்டிருக்கிறது. இதனால் உலகத் தமிழர்களின் பொருளாதாரத்திற்கும் சுதந்திரமான செயற்பாடுகளுக்கும் தடைகளை ஏற்படுத்துவதன் மூலமாகவாவது, தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பின்னடைய வைக்கலாம் எனும் செயற்திட்டத்திற்கு சந்திரிகா அரசாங்கம் முன்னுரிமை கொடுத்து செயற்படத் தொடங்கி உள்ளது. இதனை, நாம் வாழும் நாடுகளிலுள்ள விடுதலைப் புலிகளின் பணிமனைகளுடனான எமது ஒருங்கிணைந்த செயற்பாடுகளின் மூலம் முறியடிக்க வேண்டியவர்களாக உள்ளோம். காலந்தாழ்த்துவோமானால், எமது நாளாந்த வாழ்விலும் சிறீலங்கா பல சிக்கல்களை ஏற்படுத்தலாம். ✳

# இனப்பிரச்சினைக்கு நல்ல தீர்வு அமையும்வரை

"சிறீலங்கா கீழைத்தேசத்தின் சுவிற்சலாந்தாக விளங்கும் என்ற நல்நம்பிக்கை நிறைவேறவில்லை. உலகில் 18 வறிய நாடுகளில் ஒன்றாக மாறிவிட்டது." என ஆதங்கப்படுகின்றார் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் முக்கிய அமைச்சர்களில் ஒருவரான மங்கள சமரவீர. அமைச்சரின் இவ் ஆதங்கமானது, சிறீலங்கா இன்று எதிர்நோக்கும் நெருக்கடியை வெளிக் காட்டும் ஓர் அறிவிப்பு என்று கூடக் கூறலாம்.

சுவிற்சலாந்து என்பது தனியாக ரம்மியமான காட்சிகளும், சுவாத்தியமும் உள்ள பிரதேசம் மட்டுமல்ல – பல இனங்கள் ஐக்கியமாகவும் சமாதானமாகவும் வாழும் நாடுமாகும். ஆனால், கீழைத்தேய சுவிற்சலாந்தாக சிறிலங்காவை மாற்றுவோம் என ஆட்சிக்கு வந்தவர்கள் பேச்சளவில் மட்டுமே சுவிற்சலாந்தை உதாரணம் காட்டினரே தவிர, உள்ளத்தளவில் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. இவர்கள் இலங்கையில் மக்களின் ஐக்கிய வாழ்விற்கோ அமைதிக்கோ வித்திட வில்லை.

1964 இல் சிங்கப்பூர் சுதந்திரம் பெற்றபோது, அன்றைய அதன் பிரதமர் இலங்கை போன்று சிங்கப்பூரும் வளர்ச்சியடைய வேண்டும் என இலங்கையை முன்னுதாரணம் காட்டினார். ஆனால் இன்று 34 ஆண்டுகளின் பின் நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. ஏனெனில், சிங்கப்பூர் இன்று முன்னுதாரணமாகவும், இலங்கை இன்று ஓர் தவறிற்கான படிப்பினையாகவும் மாறியுள்ளது.

அவ்வாறானால், இவ் 34 ஆண்டு காலத்தில் சிங்கப்பூரில் நிகழ்ந்ததென்ன? சிங்கப்பூர் எவ்வாறு வளர்ச்சியடைந்த நாடுகளின் பட்டியலில் இணைந்து கொண்டது? இதற்குப் பல காரணங்கள் இருப்பினும், அடிப்படையாக இருந்த ஒரே காரணம் – நிலையான ஆட்சியாகவும், நேர்மையான ஆட்சியாகவும், மக்களின் சமஉரிமையை உறுதி செய்த அரசாகவும் – ஆட்சியாளர்களும் சிங்கப்பூரில் இருந்ததே ஆகும்.

**சிங்கப்பூர் சுதந்திரம் பெற்றபோது, அதன் பிரதமர் இலங்கை போன்று சிங்கப்பூரும் வளர்ச்சியடைய வேண்டும் என்றார். இன்று நிலைமை தலைகீழ். காரணம் என்ன? சிங்கப்பூர் வளர்ச்சிக்கு பல காரணங்கள் இருப்பினும் அடிப்படையாக இருந்த ஒரே காரணம் – நிலையான ஆட்சியாகவும், நேர்மையான ஆட்சியாகவும், இனப்பாகுபாடற்ற மக்களின் சமஉரிமையை உறுதி செய்த அரசும் – ஆட்சியாளர்களும் சிங்கப்பூரில் இருந்ததே ஆகும்.**

சிங்கப்பூரில் மலேயர், சீனர், தமிழர் என பல இன மக்கள் வாழ்ந்த போதும் ஆட்சியாளர்கள் அங்கு இன பாகுபாட்டுடன் ஆட்சி அதிகாரம் செய்யவில்லை. சகல இன மக்களும் ஒரே அந்தஸ்துடன் நடத்தப்பட்டதோடு சகலருக்கும் சம வாய்ப்புகளும் கொடுக்கப்பட்டது. இதனால் சகல இன மக்களும் சிங்கப்பூர் தமது நாடு – தமது தேசம் என்ற ரீதியில் கடின உழைப்பின் மூலம் தமது நாட்டைக் கட்டி எழுப்பினர்.

ஆனால், இலங்கையில் நடந்ததென்ன?

50 ஆண்டு ஆட்சியில் மாறி மாறி ஆட்சிக்கு வந்தவர்கள் பலமான நிலையிலும் சரி, பலவீனமான நிலையிலும் சரி, பல்லின மக்கள் கொண்ட இலங்கையை தனியாகப் பௌத்த – சிங்களவருக்கே உரியதாகக் கருதினார்கள். ஏனைய இனங்களை சம அந்தஸ்துடனோ, சம உரிமையுடனோ நடத்துவதற்கு தயாராக இருக்கவில்லை. ஏனைய இனங்களை அடிமைகள் போலவே நடத்தினர்.

இது இலங்கையின் வளர்ச்சிக்கு வழிவகுப்பதாக இருக்கவில்லை. மாறாக, இலங்கையில் இனக் கலவரங்களுக்கும்– நீண்டதொரு உள்நாட்டுப் போர் ஒன்றுக்குமே வழிவகுத்தது. இது நாட்டின் பொருளாதாரத்தைப் பல்வேறு

## சிறீலங்காவின் ஆசை நிறைவேறாது!

வகையில் பாதிப்பதாகவும், அழிவுக்கு உட்படுத்துவதாகவும் அமைந்தது. ஒரு புறம் இனக்கலவரங்களும், போரும், பொருளாதாரத்தை அழிப்பவையாக இருந்தன. மறுபுறம் போரிற்கு பெரும் தொகை நிதியை அரசு செலவீடு செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கியது. இதன் காரணமாக அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் முடக்கம் அடைந்தன.

இதே சமயம், சிறீலங்கா அரசின் பொருளாதாரக் கொள்கைக்கு பெரும் முட்டுக்கட்டையாகவும் அது எழுந்துள்ளது. அதாவது, திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு அடிப்படையாக உள்ள வெளிநாட்டு மூலதன வருகை போரின் தீவிரத்தினாலும், குண்டு வெடிப்புகளினாலும் பெரிதும் பாதிப்பிற்குள்ளாயின. அத்தோடு, அரசு பெரும் நம்பிக்கை கொண்டிருந்த உல்லாசப் பயணத் துறையும் பெருமளவு பாதிக்கப்பட்டது. இதனை மூத்த அமைச்சர்களில் ஒருவரான தர்மசிறி சேனநாயக்காவே சில தினங்களின் முன் உறுதி செய்திருந்தார்.

இந் நிலையில், 'கீழைத்தேய சுவிற்சலாந்து' என்ற நம்பிக்கை கலைந்து போனமைக்கு காரணம் இல்லாமல் இல்லை. இதனைக் கலைத்தவர்கள் சிறிலங்காவில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசியல் வாதிகளே. ஆனால், இன்று கூட இவ்வாறனதொரு அவலம் ஏற்பட்டு விட்டது எனச் சிலர் கூறுகின்றார்களே தவிர, அதனை நிவர்த்தி செய்ய அவர்கள் முயற்சிகளை மேற்கொள்வதாக இல்லை. மாறாக, தமது தவறை மூடிமறைக்க மற்றவர்கள் மீது பழி கூறிக் காலத்தைத் தள்ளிச் செல்கின்றனர். ✳

www.tamilarangam.net



# உலகப் புகழ்பெற்ற என்காற்ரா-98 கணனிக் கலைக்களஞ்சியத்தில் கேணல் கிட்டு

இன்று கணனி யுகத்தில் அதிவேகமாக விற்பனையாகும் மைக்கிரோசொவ்ட் நிறுவனத்தின் என்காற்ரா-98, தமிழீழ மூத்த தளபதிகளுள் ஒருவரான உலகில் புகழ்க்கொடி பரப்பி, பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பொறுப்பாளராக அரும்பணியாற்றி தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு சர்வதேச அக் கறையைத் தேடிக் கொடுத்து தாயகத்திற்கு அமைதிப் பயணம் ஒன்றை மேற்கொண்டவேளை, இந்திய பிராந்திய மேலாண்மை சக்தி, அவரைச் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்ய முயற்சிக்கையில், தன்னையே தற்கொடையாக்கிய தமிழீழ மக்களின் அன்புத் தளபதி கேணல் கிட்டுவின் உருவப்படத்தை பிரசுரித்துள்ளது.

தங்கமாமணித் தமிழீழத்தின் வீரத் தளபதி கேணல் கிட்டு தன்னால் பயிற்சி கொடுக்கப்பட்ட விடுதலைப் புலிகளுடன் நிற்கின்ற கம்பீரமான இப்படத்தின் கீழ் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் பற்றிய சுருக்கமான கட்டுரை ஒன்றையும் என்காற்ரா-98 கணனித் தகவல் கலைக் களஞ்சியம் பிரசுரித்துள்ளது.



# தமிழர் பிரச்சினையில் சிறீலங்காவின் அணுகுமுறைகள்

இன்றைய சிறீலங்கா அரசு தனது தேர்தல் பரப்புரைகளில், 'சமாதானம்' என்ற கோசத்திற்கு முதலிடம் அளித்தே ஆட்சியைக் கைப்பற்றிய்து என்பது உலகறிந்த விடயம். ஆனால், இச் சிறீலங்கா அரசாங்கம் நடைமுறையில் முன்னைய சிறீலங்கா அரசை விட அதிக அளவிலான இராணுவ முனைப்பை வெளிப்படுத்தி நிற்பதைக் காண்கிறோம். இதற்குக் காரணம், சந்திரிகா 'சமாதானம்' என்ற புனிதமான சொல்லை, கேவலமான முறையில் அப்பாவிப் பொதுமக்கள் மீதான யுத்தம் ஒன்றை திணிப்பதற்கும் நியாயப்படுத்துவதற்கும் இராணுவ பலத்தைப் பெருக்குவதற்குமான ஒரு கருவியாகப் பயன்படுத்திய நரித்தந்திரமேயாகும். அவருடைய இச்செயற்பாடுகளின் நோக்கை அவர் கடந்த மாதம் 'ரைம்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் மிகத்தெளிவாகக் காணலாம்.

இரு பகுதியுமே வெல்ல முடியாத யுத்தம் என நீங்கள் கூறினீர்களே! எனக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதில் அளித்த சந்திரிகா, "நான் முன்னொரு காலத்தில் – கடந்த அரசாங்கத்தின் காலத்தில்– இரு பகுதியுமே வெற்றி பெறமுடியாத யுத்தம் எனக்கூறினேன்: அவர்கள் சமாதானத்திற்கான திட்டங்கள் எதையும் கொண்டிருக்கவில்லை. தமிழர்கள் அனைவரையும் அவர்கள் இராணுவ ரீதியாக கொண்டு குவிப்பதினால் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்கலாம் என நினைத்தனர். நாங்கள் அவர்களது இந்த வாய்ப்பாட்டை மாற்றியுள்ளோம். நாங்கள் தமிழ்மக்களை தமிழீழ விடுதலைப் புலிகளிலிருந்து வேறானவர்களாகப் பார்த்தோம். பின்னர் தமிழ் மக்கள் ஆரம்பம் முதல் பெரும்பான்மை இனத்துடன் நீதியுடனும் சமத்துவத்துடனும் வாழ கேட்டவற்றைக் கொடுத்தோம்" என, அண்டப்புளுகு ஆகாசப்புளுகு என்று கூறுவார்களே அப்படி ஒரு புளுகை அவிட்டு விட்டுள்ளார். ஆனாலும் அந்தப் புளுகில்கூட தமிழர்களையும் விடுதலைப் புலிகளையும் தனிமைப்படுத்துவதுதான் தனது நோக்கே தவிர, தமிழர் பிரச்சினை க்குத் தீர்வு அல்ல என்பதை மிகத் தெளிவாக எடுத்துரைக்கத் தவறவில்லை.

இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாகத் தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு என்பதற்கு முதலிடம் அளிக்காது, விடுதலைப் புலிகளை தமிழ் மக்களிடமிருந்து தனிமைப்படுத்துதல் என்ற கோசத்திற்கு முன்னுரிமை கொடுத்ததுடன், சலுகைகள் பேசி தமிழ் மக்களைக் கவர்தல், பதவிகள் கூறி புலிகளை மடக்கல் என்ற தந்திரத்தைச் சந்திரிகா கையாளத் தொடங்கினார். இந்த வலையில் மக்கள் விழுந்தால் புலிகளை மக்களிடமிருந்து பிரித்துத் தனிமைப் படுத்தலாம். புலிகள் விழுந்தால், தமிழீழத்திற்குத் தேசிய பாதுகாப்புக் கொடுக்கும் அவர்களது ஆற்றலை அழித்தொழித்து விடலாம் என்பதே சந்திரிகாவின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டு மீள நிறுவப்பட்ட தமிழீழப் பகுதிகளை எப்படி மீண்டும் சிறீலங்காவுடன் இணைப்பது என்பதுதான் சந்திரிகாவின் சிந்தனையே தவிர, தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு என்ற ரீதியில் அவர் என்றுமே சிந்திக்கத் தலைப்பட்டதில்லை. இதனாலேயே தமிழ் மக்களின் நாளாந்த வாழ்வுக்கு உயிர், உடல் அச்சத்தை விளைவிக்கும் பூநகரி இராணுவ முகாம் பாதைப் பிரச்சினையைத் தீர்க்கும்படி விடுதலைப் புலிகள் கேட்டதுமே சந்திரிகாவின் வேடம் அம்பலமானது. உடனே தமிழ் மக்கள் மீது, தான் நடாத்தத் திட்டமிட்டிருந்த யுத்தத்தை சந்திரிகா முடுக்கி விட்டார். ஆனாலும், இந்தச் சம்பவங்களைத் திரிபுபடுத்தி சர்வதேச சமூகத்திற்கு முன்னால் விடுதலைப் புலிகளது நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தவும் தனது அப்பட்டமான ஆக்கிரமிப்புக்களுக்கு நியாயம் கற்பிக்கவும் கடுமையான பரப்புரைகளை ஆரம்பித்தார். இந்த அணுகுமுறையைச் சந்திரிகா அன்று முதல் இன்று வரை தொடர்ந்து கொண்டேயிருக்கின்றார். இதனால் பல்லாயிரக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்துள்ள சந்திரிகா, சிங்களத் தேச மக்களையும் யுத்தகளத்தில் குவித்து அநியாயமாகப் பலியாக்கிக் கொண்டிருக்கின்றார். இதனுடைய பலாபலனை சந்திரிகாவே தனது பேட்டியில், "உலகில் தற்கொலையிலும், போதையிலும் சிறீலங்காவே முதலாம் இடம் வகிக்கிறது" எனப் பெருமையுடன் கூறியுள்ளார்.

அதேவேளை, யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதும் புலிகளை காட்டுக்கு அனுப்பிவிட்டதாகச் சொன்ன சந்திரிகா அரசாங்கம், அந்நிய நாடொன்றைக் கைப்பற்றிய உணர்வுடன் மக்களற்ற வெற்றுப் பூமியில் கொடியேற்றி, பின் கொழும்பில் சிங்களப் பேரினவாதிகள் முன் வெற்றிவிழாக் கொண்டாடி மகிழ்ந்தது. சிங்கள அரசுக்கு அரசியல் பணிவைக் கொடுக்க மறுத்து இடம் பெயர்ந்து, பின் தமது சொந்தப் பிரதேசங்கள் நோக்கிப் புறப்பட்ட தமிழீழ மக்களை இராணுவ வலிமை கொண்டு திறந்த வெளிக் கைதிகளாக குடாநாட்டுக்குள் சிக்கவைத்து, எவ்வித மனித உரிமைகளையும் அனுபவிக்க விடாது வாட்டி வதைத்து வருகின்றது. குடாநாட்டில் மட்டுமல்ல, தமிழீழத் தாயகம் முழுவதும் தமிழ் மக்களைக் கொன்று குவித்தும், பாலியல் வன்முறைகளால் தமிழ்ப் பெண்கள் மானம் கெடுத்தும், உணவு – மருந்து மறுத்தும், தனி மனித சுதந்திரம் (Privacy) என்பதே இல்லாதவர்களாக வீட்டு விறாந்தையிலும் வேலிக்குப் பின்னாலும் படுக்கையறையிலும் பள்ளிக்கூடத்திலும் கோவிலுக்குள்ளும் குளிக்கும் இடத்திலும் தனது இராணுவத்தை நிறுத்தியும் எத்தனை வழிகளால் ஒரு மனிதனை வதைக்க முடியுமோ அத்தனை வழிகளிலும் தமிழ் மக்களை வாட்டி வதைக்கும் சந்திரிகா, தான் ஏதோ தமிழ் மக்கள் கேட்டதைக் கொடுத்து விட்டதாக அப்பேட்டியில் எவ்வளவு துணிச்சலுடன் பொய்யுரைத்துள்ளார்.

அது மட்டுமல்ல, பேச்சுவார்த்தை எனும் இனிப்புக்காட்டிய காலத்தில் சந்திரிகா சாரி, சந்திரிகா வளையல் எனக்கூறி விற்ற தமிழ் மக்களை இப் பேட்டியில் கிண்டல் செய்த சந்திரிகா, "ஒரு தமிழ்ப் பையன் விளையாட்டுப் பிளேனைத் தூக்கிக் காட்டி இதிலேதான் சந்திரிகா எங்களுக்கு சமாதானம் கொண்டு வந்து இறங்கப் போவதாகக் கூறினான். இவ்வாறு தமிழர்கள் எல்லாமே நடக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். அதனால் தான் அவர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்" என உதாரணம் காட்டியும் பேசி உள்ளார். சிறீலங்கா இரு தசாப்தங்களாக நடாத்தி வரும் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தால் அவலப்படும் தமிழ் மக்கள் அமைதியை, சமாதானத்தை ஆவலுடன் எதிர்பார்த்ததைக் கூட சிறுமைத்தனமாக விமர்சிக்கும் சந்திரிகாவின் பேச்சு, தமிழீழ மக்களுக்கு சிறீலங்கா அந்நிய அரசு என்பதைத் தெட்டத் தெளிவாக்கிறது.

**- சூ. பற்றிமாகரன் -**

அது மட்டுமல்ல, "இனி விடுதலைப் புலிகளின் தலைமையை நம்பலாம் என நான் நினைக்க வில்லை: ஆனால் அவர்களுடைய இராணுவத்தில் வலுக்கட்டாயமாக இணைக் கப்பட்டுள்ள இளவயதினருடைய மனங்களை மாற்றலாம்" என அருள் வாக்குரைத்துள்ள அம்மையார், தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதல்ல தமிழர் படையை – தமிழீழ விடுதலைப் புலிகளை உடைப்பதே தனது பகற்கனவு என்பதை தெளிவுபடுத்தியுள்ளார். அம்மையாரின் பகற்கனவு நீண்டு செல்கிறது, "புதிய அரசியல் அமைப்பைக் கொண்டு வருவேன்: அதனை புலிகள் ஏற்று நடக்காவிட்டால் போரைத் தொடர்வோம். இதனால் அவர்களது மக்களே, அவர்கள் மேல் அழுத்தங்களை ஏற்படுத்தத் தொடங்குவர். அப்பொழுது புலிகள் தனிமையடைவர். ஒதுக்கப்படுவர். அதனால் அவர்கள் தாங்களாகவே பேச்சுவார்த்தைக்கு வரவேண்டி நேரும்" என, தனது கனவுகளை பேட்டியில் கூறிச் சென்ற சந்திரிகா அம்மையாரிடம் விடுதலைப் புலிகளை உங்களால் வெல்லமுடியுமா? எனக் கேட்டதற்கு, "அவர்கள் எங்கள் சமாதானக் கரத்தை ஏற்க மறுத்தால் இராணுவத்தால் வெல்லுவோம். வெளிநாட்டுப் பத்திரிகை யாளர்கள் கூறுவது போல அவர்கள் அவ்வளவு வலிமை பொருந்தியவர்கள் அல்ல" என, சந்திரிகா எழுந்தமானமாகப் பதிலளித்துள்ளார். வெளிநாட்டுப் பத்திரிகை யாளர்களின் நியாயமான மதிப்பீடுகளைத் தூக்கி வீசிய சந்திரிகாவின் இப்பதில், தமிழீழ மக்களுடைய விடுதலை உணர்வையும், போராட்ட வலிமையையும், மனஉறுதியையும் எவ்வளவு தூரத்திற்கு வெளியுலகிற்கு மூடி மறைத்து சிறுமைப்படுத்த முயற்சிக்கிறார் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

சந்திரிகாவின் இந்தப் பேட்டி, இன்றைய சிறீலங்கா அரசாங்கம் தமிழர் பிரச்சினையை ஒரு விடுதலைப் போராட்டமாக எடுத்து நோக்காது, பெரும்பான்மை இனத்திடம் சிறுபான்மையினம் சலுகை பெற நடாத்துகின்ற சலுகைப்போராட்டமாக நோக்குவதைத் தெளிவாக்கிறது. இதனால், தம்மைக் கொடுப்பவர்களாகவும் தமிழரை, கொடுப்பதைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அடிமைகளாகவும் சிறீலங்கா கருதுகிறது. "முதல் கோணல், முற்றும் கோணல்" என்பார்களே அதுபோல, சிறீலங்காவில் தாம் ஆள்பவர்கள், தமிழர்கள் ஆளப்பட வேண்டியவர்கள் என்ற கருத்து சிங்கள ஆட்சியாளர்களிடம் உள்ளவரை தமிழர்களின் தாயக உரிமை மட்டுமல்ல, உயிர் வாழும் உரிமைகூட சிங்களவர்களால் வழங்கப்படும் கருணைச் செயலாகக் கருதப்படுமே தவிர, சமத்துவத்துடன் எடுத்து நோக்கப்பட மாட்டாது. இதனால், தமிழர்கள் தமது தாயகத்தையும் தமது உயிரையும் வாழ்வையும் போராடியே பாதுகாத்துக் கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர்.

இந்தத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் தவிர்க்கமுடியாத தேவைகளையும் அதனை அழித்தொழிக்க சிங்கள சிறீலங்கா கையாளும் அணுகுமுறைகளையும் உலகறிய வைத்து விடுதலைப் போராட்டத்தை வெற்றிபெறச் செய்யவேண்டிய பொறுப்பு புலம் பெயர் தமிழராகிய நம்முடைய கைகளிலேயே தங்கியுள்ளது. ✳

www.tamilarangam.net



# தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான சிறீலங்கா இனவாத அரசின் போராட்டம்

**பூங்குன்றன்.**

"சிங்கள இனவாத அரசு எமக்கெதிராக ஒரு ஆயுதப் போரை மட்டும் நடத்தவில்லை. அது ஒரு கருத்துப் போரையும் நடாத்தி வருகிறது. உண்மை என்ற ஆயுதம் ஏந்தி நாம் பொய்மைக்கு எதிராகப் போராட வேண்டும்" என தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் விடுதலைப் புலிகளின் குரல் வானொலிச் சேவையின் 7ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு வானொலியில் பணியாற்றும் கலைஞர்கள் எழுத்தாளர்கள் மத்தியில் உரை யாற்றும்போது குறிப்பிட்டுள்ளார். எமது மக்கள் மத்தியில் தேசிய விழிப்புணர்வையும் பேணி வளர்ப்பது எமது மக்கள் தொடர்பு ஊடகங்களின் முக்கியமான பணியாகக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்ட தலைவர் பிரபாகரன் அவர்கள், கலை இலக்கியப் படைப்பாளிகளின் பணியைத் தெளிவுபடுத்தியதுடன், இதனை ஒரு உன்னதமான விடுதலைப் பணியாகக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழீழ மண்ணை நாலாபுறமும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் சிறீலங்காவின் சிங்கள இராணுவத்தின் பாரிய படையெடுப்புக்கு முகம் கொடுத்துக் கொண்டு எதிரிப் படையை விரட்டியடிக்கும் போர் நெருக்கடிக்குள்ளும் விடுதலைப் புலிகளின் குரல் வானொலிச் சேவையின் 7ஆம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு சிறீலங்கா அரசின் கருத்துப் போருக்கு எதிராக தமிழ் எழுத்தாளர்களும் கலைஞர்களும் கருத்துப் போராட்டத்தை நடத்த வேண்டியதின் அவசியத்தை தலைவர் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டதன் மூலம் ஆயுதப் போராட்டம் போலவே கருத்துப் போராட்டத்துக்கும் தலைவர் முக்கிய இடம்கொடுக்கிறார் என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.

ஆட்பல வசதியையும், பணத்தை தண்ணீராக இறைக்கக்கூடிய பலத்தையும் கொண்ட சிங்கள – பௌத்த இனவாத அரசின் மக்கள் தொடர்பு ஊடகங்களோடு மட்டுமல்ல, அந்த அரசுக்கு பக்கபலமாக தமிழீழப் போராட்டத்துக்கு எதிராக அணிவகுத்து நிற்கும் சிங்களவர்களுக்கு சொந்தமான மக்கள் தொடர்பு ஊடகங்கள், சிங்கள அறிவாளர்கள், பௌத்த மத பீடாதிபதிகள், சிங்கள எழுத்தாளர்கள் இவர்களது கருத்துப் போராட்டத்துக்கு எதிராக ஆட்பலமும் பணபலமும் அற்ற தமிழ்த் தேசிய இனம் முகம் கொடுப்பது எளிதான காரியமல்ல.

**தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் கூறியதுபோல, எமது மக்கள் மத்தியில் தேசிய விழிப்புணர்வை பேணி வளர்ப்பது எமது மக்கள் தொடர்பு ஊடகங்களினதும், புலம்பெயர் எழுத்தாளர்களதும், கலைஞர்களினதும் முக்கிய பணி. இதனை ஒரு உன்னதமான விடுதலைப் பணியாகக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்றும் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.**

சிறீலங்காவின் வெளிநாட்டுத் தூது வராலயங்கள் ஒவ்வொன்றும் வெளிநாட்டவர்கள் மத்தியில் விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கமெனச் சித்தரிப்பதில் முழுமூச்சாக செயல்படுகின்றன. இந்தப் பிரசாரத்தை வெற்றிகரமாக நடாத்த சிறீலங்கா அரசு, அனுபவம் வாய்ந்த சிங்களப் பத்திரிகையாளர்களை முக்கிய நாடுகளின் தலைநகரங்களான இலண்டன், வாசிங்டன், ஒட்டாவா, பாரிஸ் ஆகிய இடங்களில் வேலைக்கு அமர்த்தியுள்ளது.

சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சு விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஆங்கில மொழிக் கட்டுரைகள், செய்திகளை புத்தகங்களாக அச்சடித்து மலிவான விலையில் வெளியிட்டுள்ளது.

இன்றைய நவீன தொடர் வலையங்களையும் சிறீலங்கா அரசு விட்டுவைக்கவில்லை. கணனிகளின் ஊடாக நூற்றுக்கணக்கான செய்தித் தளங்களை உருவாக்கி அதன் ஊடாக விடுதலைப் புலிகளுக்கும், தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கும் எதிராகப் பிரச்சாரம் செய்கின்றது. இதில் சிறீலங்கா அரசுக்குத் துணையாக பல்கலைக் கழகங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனிப்பட்ட சிங்களவர்கள் செயல்படுகிறார்கள்.

சிறீலங்காவில் உள்ள மக்கள் தொடர்பு ஊடகங்களை எடுத்துக் கொண்டால், 90 விழுக்காடு சிங்களவர்களுக்குச் சொந்தமாக அல்லது ஆட்சியில் இருக்கும் சிங்கள அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதைக் காணலாம். வானொலிகளை எடுத்துக் கொண்டால் அவை நூற்றுக்கு நூறு சிங்களவர்களது கட்டுப்பாட்டில் இருக்கிறது. தொலைக்காட்சியை எடுத்துக் கொண்டால் அவையும் சிங்களவர்களது கையில் இருக்கிறது. தப்பித் தவறி கொழும்புத் தமிழர்களது கட்டுப்பாட்டில் இருக்கும் தொலைக்காட்சியும் அரசோடு முரண்படாமல் அரசோடு ஒத்துப் போகிற, அரசோடு அனுசரித்துப் போகிற விதத்தில் செயல்படுகின்றன.

சிறீலங்காவின் மக்கள் தொடர்பு ஊடகங்கள், தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்துவதிலும், தமிழ் மக்களின் நியாயபூர்வமான அபிலாசைகளை மறுத்து உரைப்பதிலும் தீவிரமாகப் பணியாற்றுகின்றன. குறிப்பாகச் சொல்லப் போனால், தலைவர் பிரபாகரன் அவர்கள் குறிப்பிட்டதுபோல், தமிழினம் ஒரு தேசிய இனம் என்பதையோ, அவர்களுக்கென ஒரு பாரம்பரிய தாயகம் இருப்பதையோ, அவர்களுக்கு தன்னாட்சியுரிமை உள்ளதையோ இந்த மக்கள் தொடர்பு ஊடகங்கள் முற்றாக மறுத்து எதிர்ப்பிரச்சாரமும் செய்கின்றன.

> “சிறீலங்காவின் வெளிநாட்டுத் தூது வராலயங்கள் ஒவ்வொன்றும் வெளிநாட்டவர்கள் மத்தியில் விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கமெனச் சித்தரிப்பதில் முழுமூச்சாக செயல்படுகின்றன. இந்தப் பிரசாரத்தை வெற்றிகரமாக நடாத்த சிறீலங்கா அரசு, அனுபவம் வாய்ந்த சிங்களப் பத்திரிகையாளர்களை முக்கிய நாடுகளின் தலை நகரங்களான இலண்டன், வாசிங்டன், ஒட்டாவா, பாரிஸ் ஆகிய இடங்களில் வேலைக்கு அமர்த்தியுள்ளது.”

இதில் அதிசயம் என்னவென்றால், சனாதிபதி சந்திரிகாவின் தலைமையிலான அரசைத் தீவிரமாக எதிர்ப்பவர்கள், இனப்பிரச்சினையில் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படும் அந்த அரசோடு கைகோர்த்துக் கொள்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டுவதில் அரசு காட்டும் தீவிரம், அரசு எடுக்கும் எத்தனம் கொஞ்சமும் காணாது என்று கண்டிக்கவும் செய்கிறார்கள்.

சிங்கள அறிவாளர்கள் தமிழர்களின் சரித்திரத்தை திரிப்பதில் முன்னணி வகிக்கிறார்கள். இலங்கைத் தீவை இரண்டு தேசிய இனங்கள் அநாதி காலம் தொட்டு தங்களுக்குள் பங்குபோட்டு வைத்திருந்தது என்றும் இதில் தமிழ் மக்கள், மேற்கே சிலாபம் தொடங்கி கிழக்கே கும்புக்கன் ஆறு மட்டும் உள்ள நிலப்பரப்பை தங்கள் தாயகமாகக் கொண்டிருந்தார்கள் என்று பிரித்தானியாவின் காலனித்துவ செயலாளராகக் கடமையாற்றிய கியூ கிளக்கோர்ன் (Hugh Cleghorn) 1799ஆம் ஆண்டு எழுதி வைத்துப்போன குறிப்பு ஆணித்தரமாக எடுத்துச் சொல்கிறது. ஆனால் சிங்கள அறிவாளர்கள், கியூ கிளக்கோர்ன் இலங்கையில் சொற்பகாலமே இருந்தார் என்றும் அவர் நாட்டின் வரலாற்றை சரியாகப் படிக்காமல் இந்தக் குறிப்பைத் தப்பாக எழுதி வைத்துவிட்டார் என்று கதையளக்கிறார்கள்.

சிறீலங்கா இனவாத அரசும் அதன் கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் தொடர்பு ஊடகங்களும் எப்படி ஒரு தலைப்பட்சமாகவும் தமிழ் விரோதப் போக்குடனும் நடந்து கொள்கின்றன என்பதற்கு அண்மையில் கண்டி தலதா மாளிகை மீதான குண்டுத் தாக்குதல் பற்றி வெளிவந்த செய்திகள் நல்ல உதாரணமாகும். குண்டுத் தாக்குதலுக்கு உள்ளான தலதா மாளிகையின் பிரதான வாசல் சனாதிபதி சந்திரிகா சிங்கள மக்களுக்கு சுதந்திர தின பொன்விழாச் செய்தியை அறிவிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் என்பதை பத்திரிகைகள் மறைத்துவிட்டன. அது மட்டும் அல்லாமல் அந்த மாளிகையில் வசிக்கும் மல்வத்தை பௌத்த மதபீடாதிபதி, போரின் மூலம் விடுதலைப் புலிகளை அழித்தொழிக்க வேண்டுமென்று ஓயாது கூக்குரல் கொடுத்து வந்தவர் என்பதும் இருட்டடிப்புச் செய்யப்பட்டது. தலதா மாளிகை தாக்கப்பட்டதன் எதிரொலியாக கட்டுகலை சிறீசெல்வ விநாயகர் ஆலயம் சிங்களக் காடையர்களால் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டது. கோவில் வழிபாட்டு விக்கிரகங்கள் தாக்கி உடைக்கப்பட்டன. கோவிலுக்கு ஏற்பட்ட சேத மதிப்பு 2.2 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதைவிட கண்டி இந்து பண்பாட்டு மையம் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டது. தலாத்து ஓயாவிலுள்ள முத்துமாரியம்மன் கோவில் சித்திரைத் தேர் எரியூட்டப்பட்டது. ஆனால் எல்லா சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளும் பேசிவைத்தாற்போல் இந்தக் தாக்குதலையிட்டு ஒப்புக்குத்தன்னும் செய்தி வெளியிடாது இரும்புத்திரை போட்டுவிட்டன. இதற்கு முன்னர் வடக்கிலும் கிழக்கிலும் இந்துக் கோவில்களும் கிறிஸ்தவ கோவில்களும் குண்டு போட்டுத் தகர்க்கப்பட்டபோதும் எறிகணைத் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டபோதும் இந்தப் பத்திரிகைகளும் ஏனைய மக்கள் தொடர்பு ஊடகங்களும் கண்டுகொள்ளாமல் இருந்துவிட்டன.

சிங்கள அல்லது ஆங்கிலப் பத்திரிகையாளர்கள் கைதாகும்போது சிறிலங்கா அரசை, மனிதவுரிமை மீறல்களுக்காகக் காரசாரமாகக் கண்டிக்கும் பத்திரிகைகள், ஆயிரக்கணக்கில் தமிழர்கள் அவர்கள் 'தமிழர்கள்' என்ற ஒரே காரணத்திற்காக சிங்களப் பொலிசாரால் கொழும்பிலும் மலைநாட்டிலும் கைது செய்யப்பட்டு காவல் நிலையங்களுக்கு விலங்குகள் போல் இழுத்துச் செல்வதையோ, சிறையில் விசாரணையின்றி ஆண்டுக் கணக்கில் அடைக்கப்பட்டு வைத்திருப்பதையோ அவை கண்டு கொள்வதும் இல்லை கண்டிப்பதும் கிடையாது.

இதேபோல் வடக்கு –கிழக்கிலும் நாளும் பொழுதும் நடைபெறும் கைதுகள், கைது செய்யப்பட்டவர்கள் கொலை செய்யப்படுதல் –காணாமல் போதல், இளம் தமிழ்ப் பெண்கள் சிங்களப் படைகளால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுதல் போன்ற மனித உரிமை மீறல்களைப் பற்றி இந்தப் பத்திரிகைகள் கொஞ்சமும்

தொடர்ச்சி 6 ம் பக்கம்.....

www.tamilarangam.net



# பொய்யை நோக்கிய பொய்யரின் பயணம்!

பொய்யும் புனைகதைகளுமாய் ஆகிவிட்டது சிறீலங்காவின் அரசியல். மெத்தக் கெட்டிக்காரத்தனங்கள் என்பதெல்லாம் யாரும் எதுவித தயக்கமுமின்றி கண்மூடித்தனமாக பொய்யுரைப்பது என்பது போலாகி விட்டது. அடிமட்டத்தில் இருந்து முளைவிட்டு அதிகாரிகள் மட்டத்தில் செழுமையுற்று ஆட்சியாளர்கள் வரையில் அது முழுமை பெற்று சிறீலங்காவில் பொய்மை, அரசபீடம் ஏறியிருக்கின்றது. இதற்கொரு நீண்ட வரலாறு இருக்கின்றபோதும் அதன் முழுமையான ஆக்கிரமிப்பு இன்றுபோல் என்றும் இருந்ததில்லை. ஒரு இனஅழிப்பையே சமாதானத்துக்கான நகர்வு என உலகத்தை நம்பவைக்க சந்திரிகா அரசின் பொய்மையால் முடிகிறது. இந்த மாயத் தோற்றத்தை போலித்தனத்தை எதிர்ப்பவர்கள், சமாதானத்தின் விரோதிகளாக இனங்காணப்படுகின்ற நிலையில் இருந்து, இந்தப் பொய்மையின் வீச்சத்தில் விழி இழந்தவர்கள் தொகையைக் கணக் கிட்டுக் கொள்ளலாம்.

தமிழினத்தில் கூர் பார்த்த இந்த இட்டுக் கட்டப்பட்ட பொய்மைப் பிரச்சாரம் இன்று, அவர்கள் மத்தியில் உரசுப்படும் வாளாகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதே விசித்திரம்.

சந்திரிகா அரசின் பொய்மைப் பிரச்சாரத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறீலங்காவின் எதிர்க்கட்சியினர் இன்று கூப்பாடு போடுகின்றனர். அண்மையில் 'எம்பாவல' என்ற இடத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்புப் பேரணிமீது, ஆளும் கட்சியினரால் வன்முறை பிரயோகிக்கப்பட்டது. கல்வீச்சும், சோடாப் போத்தல் வீச்சும், பெற்றோல் குண்டுகள் வீச்சும் இடப்பெற்றன. கைகலப்பு இடம்பெற்றது. நகரே அல்லோல கல்லோலப்பட்டது.

இந்த வன்முறைக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும் என எதிர்க்கட்சியினர் கண்டனம் தெரிவித்தனர். இதற்குப் பதிலளித்த சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா, அங்கு பெரிதாக எதுவும் நடந்து விடவில்லை. ஒரு கல்லு மாத்திரம் வீசப்பட்டது என்று வழமைபோல ஏதும் நடவாததுபோல அலட்சியமாகக் கூறினார். எதிர்க் கட்சியினருக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது. கூய்யோ முறையோ என்று கூவினர். இறுதியில் அது சந்திரிகா மீதான கண்டன அறிக்கையாக வெளிவந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் காமினி அத்துக் கொரளேயினால் வெளியிடப்பட்ட அந்த அறிக்கை, சந்திரிகாவை பொய்மையின் முழுவடிவமாகச் சித்தரித்தது. பொய்மைக்கு இலக்கணமாகத் திகழ்ந்த, கிட்லரின் பிரச்சாரமந்திரி கோயபல்சை மிக வேகமாகக் கடந்து செல்லுகின்றார் சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா என அந்த அறிக்கை ஒரு பிடிபிடித்துள்ளது.

இதுவே தற்போதைய சந்திரிகா அரசின் பிரச்சாரத்தின் உண்மைத் தன்மையைப் படம்பிடிக்கப் போதுமானது. இந்த மதிப்பீடுகள் அல்லது ஒப்பீடுகள் அவர்களுக்குள்ளேயிருந்து வருவதால் கூடுதல் தகுதியைப் பெறுகின்றன. எதிர்க்கட்சியாய் இருந்தும் இப்படியொரு தகுதியை யாரும் யாருக்கும் அண்மைக் காலங்களில் வழங்கியதாகத் தெரியவில்லை. ஆனால் கோயபல்சுடன் சிறீலங்கா சனாதிபதி ஒப்பிடப்பட்டுள்ளார் என்பது தற்போதைய சிறப்புச் செய்தி.

'தனக்குத் தனக்கு என்றால்தான் சுளகு படக்குபடக்கு' என்று அடிக்கும் என்பதுபோல சந்திரிகா அரசின் பொய்ப் பிரச்சாரத்தில் தமிழர்கள் தவித்திருக்க, அதனை கண்டுகொள்ளாமல் உள்ளூரக் களித்திருந்த எதிர்க்கட்சியினர், தம்மை நோக்கி அந்த ஆயுதம் திருப்பப் படுகின்றபோது அதன் வலியுணர்ந்து ஓலக்குரல் எழுப்புகின்றனர்.

> “ கிட்லரின் பிரச்சாரமந்திரி கோயபல்சை மிக வேகமாகக் கடந்து செல்லுகின்றார் சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா என ஐ.தே.க அறிக்கை ஒன்று ஒரு பிடிபிடித்துள்ளது. இதுவே தற்போதைய சந்திரிகா அரசின் பிரச்சாரத்தின் உண்மைத் தன்மையைப் படம்பிடிக்கப் போதுமானது. இந்த மதிப்பீடுகள் அல்லது ஒப்பீடுகள் அவர்களுக்குள்ளேயிருந்து வருவதால் கூடுதல் தகுதியைப் பெறுகின்றன. ”

இதன்மூலம், ஐக்கியதேசியக் கட்சி உண்மையின் வடிவமாக அவதரிக்க ஒருபோதும் முடியாது. தமிழர்களும் சிங்களவர்களும் அண்ணன் தம்பிகளாக சித்தரிக்கப்பட்டு, தோட்டாக்களை தமிழர்களுக்காக அனுப்பியவர்கள் அவர்கள். இனப்பிரச்சினை தீர்க்கப் பட்டாகிவிட்டது, இனி இருப்பது 'புலிப்பிரச்சினை' என்ற இலட்சிய வரிகளை வரிந்துகொண்டு இன வேட்டைக்குப் புறப்பட்டவர்கள் அவர்கள். போர்க் கள நிலவரங்களை தலைகீழாக மாற்றி பிரச்சாரம் செய்யும் வித்தையையும் ஐக்கிய தேசியக் கட்சியே ஆரம்பித்து வைத்தது. அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட, புலிகள் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சகம் கணக்குக் காட்டக் கற்றுக் கொண்டது, ஐக்கிய தேசியக்கட்சி காலத்திலேதான். தமிழர்களின் வாழ் விடங்களும் வணக்கத்தலங்களும் குண்டுபோட்டு சிதறடிக்கின்ற இன்றைய கொடுமையின் ஊற்றுக்கண் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் இருந்தே புறப்பட்டது. இன்றைக்கும் பாது காப்பமைச்சின் பேச்சாளராய் இருக்கும் சரத்முனசிங்காவின் சரடுக் கதைகளுக்கு பயிற்சிக் காலம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலமே.

சரத் முனசிங்காவை தெரிந்திருக்காமல் இருக்க நியாயமில்லை. சந்திரிகா ஆட்சிக்கு முன்னர் அவரது கற்பனைக் கதைகளை வைத்தே, சிறீலங்காவின் பிரச்சாரபீடம் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தது. சந்திரிகா ஆட்சியில் அவருக்கு சிறிது ஓய்வு. அவரது சேவையின் தேவையை உணர்ந்த சந்திரிகா, மீண்டும் அதே பேச்சாளர் பதவியில் கொண்டுவந்து அவரை அமர்த்தியுள்ளார். நித்திரையில் ஒரு கதை, கண் திறந்தால் ஒரு கதை, சாப்பிடும்போது ஒரு கதை, நீராடும்போது ஒரு கதை என, அவர் கற்பனைக்கு காலமும் இல்லை எல்லையும் இல்லை என்றாகிவிட்டது. இந்த தை மாதத்தில் இருந்து இன்றுவரை மாங்குளத்தில் விடுதலைப் புலிகளின் நிலைகள் எத்தனை, சிறீலங்கா விமானப்படை விமானங்களால் அழிக்கப்பட்டிருக்கின்றன என்பதை எண்ணிப்பார்த்தாலே ஆச்சரியப் படவேண்டிவரும். அதற்கொரு அறிக்கை வடிவம் இருக்கும். இடம் காலத்தை மாத்திரம் மாற்றிவிட்டு, புலிகளின் தொகையையும் அப் போதைக்கு அப்போது கூட்டிக் குறைத்து குறிப்பிட்டு அறிக்கையை தயார் செய்ய வேண்டியதுதான். இதற் காகவே காத்திருக்கின்ற செய்தி நிறுவனங்கள் அவற்றை வெளிவிடும். அதற்குள் இந்தப் பொய்யை நம்பவைக்கும் இடைச் சேர்க்கையாய், தொழில்நுட்பரீதியாக அதிசிறப்புப்பெற்ற தன்னியக்க உளவு விமானங்கள் கொடுத்த தகவலையடுத்து புலிகளின் தளங்கள் தாக்கியழிக்கப்பட்டன என்ற கதைவிடுகை. இதற்குள், இன்னொரு சோடனை அதாவது, புலிகளுக்கு பாரிய சேதமென நம்புகின்றோம். புலிகளின் வானொலித் தொடர்பை ஒட்டுக்கேட்டதில் அவர்கள் மருத்துவ உதவிக்கு அவசரமாக வேண்டுகோள் விடுத்துள் ளனர் என்பன போன்றவை தேவைக்கு ஏற்ப சரடுகள் விடப்படும்.

**- சுப்பு -**

சந்திரிகா அரசும் சரி முன்னைய ஆட்சியும் சரி, ஒரு பொய்மையான பாதையொன்றிலேயே பயணத்தை மேற்கொண்டிருக்கின்றன. அரசியல் செயற்பாட்டிற்கும் இராணுவச் செயற் பாட்டிற்கும் அவை பொய்மையையே நம்பியிருக்கின்றன. பொய்மையை நோக்கி பொய்மையின் பாதையில் பொய்யரின் பயணம் – பொய்மையில்தான் முடிவடையும். உண்மை மறுமுனையில்.

இதில் சிறீலங்கா சனாதிபதியை மாத்திரம் கோயபல்சுடன் ஒப்பிடுவது தவறு. இதற்குள் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர்களும் சேர்த்தியே. ✳

> சந்திரிகா அரசின் பொய்ப் பிரச்சாரத்தில் தமிழர்கள் தவித்திருக்க, அதனை கண்டு கொள்ளாமல் உள்ளூரக் களித்திருந்த எதிர்க்கட்சியினர், தம்மை நோக்கி அந்த ஆயுதம் திருப்பப்படுகின்றபோது அதன் வலியுணர்ந்து ஓலக்குரல் எழுப்புகின்றனர்.

## தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு..........

கவலைப்படுவதில்லை. அது மட்டுமல்லாது, அவர்கள் எல்லோரையும் ஏதோவொரு விதத்தில் விடுதலைப் புலிகளுடன் தொடர்புபடுத்தி அந்தக் கைதுகளையும், கொலைகளையும் நியாயப் படுத்திவிட முயற்சிக்கின்றன.

களுத்துறைச் சிறையில் சிங்களக் கைதிகளால் அடித்துக் கொலை செய்யப்பட்ட மூன்று தமிழ் இளைஞர்களை இந்தப் பத்திரிகைகள் கடைசிவரை விடுதலைப் புலிகளோடு முடிச்சுப் போட்டு செய்தி வெளியிட்டன.

ரிவரச, சத்ஜெய, ஜெயசிக்குறு போன்ற இராணுவ நடவடிக்கைகள் தமிழ் மக்களை விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து விடுவிக்கவே என சிறிலங்கா அரசு சொல்கின்றது. ஆனால் ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையின் போதும் இராணுவத்திடம் பிடிபடாமல் இருக்க, தமிழ் மக்கள் கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு ஓடித்தப்பினார்கள். கடந்த பெப்ரவரி முதலாம் திகதி தாக்குதல் மூலம் கிளிநொச்சியை விடுதலைப் புலிகள் மீட்பதற்கு முன்னர் அங்கு எந்த மக்கள் நடமாட்டத்தையும் பார்க்க முடியவில்லை. மாறாக, அங்கு கட்டாக்காலி நாய்கள் திரிவதைத்தான் பார்க்க முடிந்தது என அங்கு சென்ற கொழும்பு பத்திரிகை நிருபர்கள் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்தில் நான்கு தமிழ்க் குடும்பங்கள் மட்டும் இருந்ததாகவும் பின்னர் ஒரேயொரு குடும்பம் மட்டும் எஞ்சியிருந்ததாக ஒரு இராணுவ அதிகாரி கூறியதாகவும் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் பத்திரிகைகள், இராணுவத்தின் பிடியில் தமிழ் மக்கள் நிம்மதியாக, மகிழ்ச்சியோடு வாழ்கிறார்கள் என்ற சிறிலங்கா அரசின் பிரச்சாரத்தை மறுப்பதற்குப் பதில் அரசோடு ஒத்து வாசித்தன.

தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான பிரச்சாரத்தில், பணம் கொடுத்துக் கூலிப்படையை இராணுவத்துக்கு உதவியாக வைத்திருப்பதைப் போல, பணம் கொடுத்து கூலி எழுத் தாளர்களையும் சிறிலங்கா அரசு வைத் திருக்கிறது. இதில் கொழும்பில் இருந்துகொண்டு இயங்கும் யாழ்ப்பாண 'பல்கலைக் கழக மனிதவுரிமை ஆசிரியர் சங்கம்' ஒன்றாகும். இது ஆசிரியர்கள் இல்லாத ஆசிரிய சங்கம் என்ற அமைப்பாகும். ராஜன் கூல் என்ற அரைத் தமிழருக்கு மட்டுமே சொந்தமான சங்கம். விடுதலைப் புலிகளால் மனிதவுரிமை மீறல்கள் செய்யப்படுவதாகக் கூறி, அவற்றை பூதக்கண்ணாடியின் துணைகொண்டு உண்மைக்குப் புறம்பான செய்தியாக்கும் ராஜன் கூல், தனக்கு கூலி தரும் சிறீலங்கா அரசின் மனிதவுரிமை மீறல்களை கொஞ்சமும் கண்டு கொள்வதில்லை. அவற்றை வசதியாக மறைத்துவிடுகிறார்.

கனடாவில் தமிழீழ மக்களுக்கு ஆதரவான செயல்பாடுகள் அனைத்தையும் கொச்சைப் படுத்துவதற்கென்றே கொழும்புப் பத்திரிகை யொன்று ஒரு முழுநேர நிருபரை வேலைக்கு அமர்த்தியுள்ளது.

எனவே, இனவாத சிறிலங்கா அரசும் மற்றும் சிங்கள – பௌத்த பேரினவாதிகளும், தமிழ்க் கைக்கூலிகளும் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை மட்டுமல்ல, தலைவர் பிரபாகரன் அவர்கள் தெளிவாகச் சொல்வதுபோல், ஒரு கருத்துப் போராட்டத்தையும் பலமுனைகளில் நடாத்தி வருகிறார்கள். இந்தக் கருத்துப் பொய்மைப் போராட்டத்தை முறியடித்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதில் தமிழீழத்தில் தேசப்பற்றுடன் பணிபுரிந்துவரும் எழுத்தாளர்கள் கலைஞர் களைப் போலவே, புலம்பெயர்ந்து வாழும் எழுத்தாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் பெரும் பங்குண்டு. தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் அறிவுரையை மனதில் இருத்தி, இவர்கள் முன்னரைவிட வேகமாகப் பணியாற்ற வேண்டியது காலத்தின் கட்டாயமாகிவிட்டது. ✳

•••••••

www.tamilarangam.net



# பகை சிலிர்க்கும் நெஞ்சுரம்

கல்முனையில் பிரதான இடம். பாடசாலை உபகரணங்களுக்கும் அலங்காரப் பொருட்களுக்கும் பேரான கடை. அந்தக் கடையை அண்மித்து, விசேட அதிரடிப் படையின் ஒரு 'ட்ரக்' வண்டி நின்று கொண்டிருந்தது. நான்கு பக்கமும் மூடப்படாமல் திறந்திருந்தாலும், அவ் வண்டியின் ஒரு பக்க இருக்கையில் அழுக்குத்துணி ஒன்றினால் போர்த்தியபடி – ஒரு முண்டம்



அத் துணிக்குள் மறைந்திருப்பது, இதுவரைக்கும் எவருக்குமே தெரிய வரவில்லை.

1985ஆம் ஆண்டில் ஒருநாள்– காலை 7.00 மணியிலிருந்து இயக்க உறுப்பினர்களைத் தேடிக்கொண்டு, கடையருகில் வாகனத்தை நிறுத்திவிட்டு கடையினுள் சாதாரண உடையில் விசேட அதிரடிப் படைமினர் பதினைந்து பேர் வரை மறைந்திருக்கின்றார்கள் என்பது மட்டும் உண்மை.

தேசத்துரோகியின் சொற்படி அதிரடிப் படையினர், தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்மாறை மாவட்ட – கல்முனைப் பிராந்திய அமைப்பாளராக இருந்த விஸ்வத்தின் வரவை எதிர் பார்த்து இருக்கின்றார்கள் என்பது யாருக்குத்தான் தெரியும்?

விஸ்வம் – ஆம்! அவன் மிகவும் வறுமையான குடும்பத்தில் பிறந்தவன். தாய் இவன் சிறுவனாக இருக்கும்போதே இறந்துவிட்டாள். தந்தை சகோதரர்கள் உண்டு. கண்டவர் மெய் மறந்து நிற்குமளவுக்கு ஓவியம் வரைவதில் இவனுக்கு நிகர் இவனே.

இவன் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலம் – 1976ஆம் ஆண்டு – தன் வீட்டில் வைத்து தேசியத் தலைவரை அழகாக வரைந்து விட்டான். அன்று கல்முனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்த எஸ். நவரட்ணராஜா, இவனது பக்கத்து வீட்டிற்கு குற்றவாளி ஒருவரைப் பிடிக்கப் பொலிசாருடன் நடந்து வந்தபோது, இவன் வரைந்திருந்த தேசியத் தலைவரின் படம் அவனது கண்களில் தென்பட்டு, அப்படத்தை எடுத்துச் செல்லுமுன், படம் வரைந்த கருணாநிதியை (விஸ்வம்) பொலிஸ் நிலையம் வரும்படி கட்டளையிட்டு விட்டுச் செல்கின்றான்.

மறுநாள், கல்முனைப் பொலிஸ் நிலையம் சென்ற விஸ்வம், பொலிஸ் நிலையம் பொறுப்பதிகாரி நவரெட்ணராஜாவால் எச்சரிக்கப்படுகின்றான். தான் ஓவியன் என்றும் தான் வரைந்த ஓவியங்கள் பல இடங்களில் இருப்பதாகவும், தினசரிப் பத்திரிகையொன்றில் வந்த இப்படத்தை வரைய நினைத்து வரைந்ததாகவும் எடுத்துக் கூறுகின்றான் விஸ்வம். பின் வெளிவருகின்றான்.

அன்று இவன் ஓவியம் வரைந்தே தன் குடும்பத்தின் கஸ்ரத்தைப் போக்கியவன். விடுதலைப் புலிகளில் டேவிட் ஐயா மூலம் இணைந்தான். காலை 7.00 மணியிலிருந்து 8.00 மணி வரையில் விடுதலைப் புலி ஆதரவாளர்கள், உறுப்பினர்களை கல்முனையில் உள்ள உணவகத்தில் சந்தித்து உரையாடிய பின்தான், ஏனைய கிராமங்களுக்குச் செல்வது இவனது அன்றாட வழக்கம்.

அன்று கல்முனைப் பொது நூலகத்தில் மட்டு – அம்பாறை அரசியல் பொறுப்பாளராக இருந்த கப்டன் பிரான்சிசை அழைத்து, கருத்தரங்குகள் மூலம் விளக்கம் கொடுப்பதும் புதிய உறுப்பினர்களை அழைத்து அவர்களுக்கு விளக்கமளிப்பதும் இவனது இடைவிடாத சேவைகளில் ஒன்று.

நாட்கள், மாதங்களையும் கடந்து வருடத்தையும் கடந்து கொண்டிருக்கின்றன.

இளைஞன் ஒருவனின் கழுத்தில் கறுப்பு அல்லது சிவப்பு நாடாவைக் கண்டால், அவன் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவன் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். பொத்துவில், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளுக்குச் சென்று, அங்குள்ள பொறுப்பாளர்களிடம் ஆலோசனை கேட்பதும் வழக்கம். அதுவும் பேரூந்தில் இவனது பயணம் தொடரும்.

அன்றாடம் வாகனங்களையும் பிரதான பாதையூடாக வருவோரையும் விசேட அதிரடிப் படையினர் பிடித்துச் சோதிப்பது வழக்கம். இவன் மிகச் சாதுவானவனாகவும் இயக்கத்தைப் பற்றி தனக்கு எதுவுமே தெரியாது என்பவனைப் போலவும் தன்

## கல்முனை நகரில் நடந்த உண்மைச் சம்பவம்

முகபாவங்களைக் காட்டியவனாக நடப்பான். அதிரடிப் படைமினர் இவன் சந்தேகத்திற்குரியவன் எனப் பார்ப்பதில்லை! ஆனால் எந்த நேரத்திலும் தான் எதிரியிடம் பிடிபடலாம், அப்படிப் பிடிபட்டால் இயக்கத்தின் சட்டதிட்டப்படி சயனைட் அருந்தவும் தயங்காதவன். அதற்கேற்றாற் போல் டேவிட் ஐயா கொடுத்த 'சயனைட்'டை தன் சட்டைத் தலைப்பில் மறைத்து வைத்திருந்தான். அதனை எந்தச் சிரமமுமின்றி உபயோகப்படுத்தவும் வசதியாக அமைத்திருந்தான்.

## 1985ஆம் ஆண்டின் ஒருநாள்!

கல்முனைப் பிரதான பாதையில் அனைத்தும் வழமைபோல் நடைபெறுகின்றன. தொழிலாளர்கள், வியாபாரிகள், பாடசாலை மாணவ – மாணவிகள் தங்கள் தங்கள் அன்றாடச் செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். அம்பாறை மத்திய முகாம் பகுதியிலிருந்து தனது அக்காவின் மகளைத் தன் சின்ன மிதிவண்டியில் ஏற்றி வந்து, கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலை முன் இறக்கிவிட்டுச் செல்வான் விஸ்வம். ஆனால் அன்று சின்ன 'வான்' ஒன்றில் வந்து பாடசாலை முன் வாசலில் இறங்கிய விஸ்வம் நடந்து வருகின்றான். பாதையில் வரும் மக்களுடன் இவனது வரவை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கின்றனர் விசேட அதிரடிப் படையினர். காட்டிக்கொடுப்பவனும் வீதியால் போவோர் வருவோர் மீது தன் பார்வையைச் செலுத்திக் கொண்டிருக்கிறான். விஸ்வத்தின் வழமையான நடை.

"அடோவ் நில்லடா"

எதிரிதான் அழைக்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட விஸ்வம், அதைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து நடக்கின்றான்.

மறுகணம் சாதாரண உடையில் இருந்த பதினைந்து விசேட அதிரடிப் படையினரும் விஸ்வத்தை சுற்றி வளைத்து கை, கால், துப்பாக்கிகளால் தாக்கத் தொடங்கினார்கள். வீறுகொண்ட வேங்கையல்லவா! அதுவும் தாக்கத் தொடங்கியது.

இவனது வலது கை, இவன் பாரிய வேலைகளைச் செய்தால் தோள்மூட்டில் இருந்து விலகிவிடுவது வழக்கம். இன்னொருவர் இவனது கையைப்

**அன்று, அந்தக் களம் வென்ற வேங்கை விஸ்வத்தின் உயிரற்ற உடல், கல்முனைப் பொலிஸ் நிலையத்தின் பின்னால் ரயருடன் சேர்ந்து எரிந்து கொண்டிருந்தது.**

பிடித்து உதவினால் சரியாகிவிடும்.

ஆனால் அந்த நிலை அதிரடிப் படையினரின் மத்தியில் இவனுக்கு ஏற்பட்டுவிட்டது. இவனுக்கு உதவ யாருள்ளார்? கல்முனை நகரில் இக்காட்சியை மக்கள் வெள்ளம் காண்கின்றது. இவனை வளைத்தவர் எதிரிகள். விஸ்வம் தன் காலால் எதிரியொருவனின் கையிலிருந்த துப்பாக்கிக்கு அடிக்கிறான். எதிரியின் கையிலிருந்த துப்பாக்கி மேலெழுந்து விழுகின்றது.

எதிரிகள் இவனது கால், கைகளில் பிடித்து அவர்களின் 'ட்ரக்' வண்டியில் வீசி எறிகிறார்கள். வாகனத்தினுள் விழுந்து, எழுந்த விஸ்வம் அங்கிருந்த முகமூடிக்காரனின் முகத்திரையைக் கிழித்து, "தங்கமணி! தங்கமணி! எதிரிக்கு என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டான் தங்கமணி!" எனப் பல தடவைகள் உரத்த குரலில் சத்தமிடுகின்றான்.

விஸ்வத்தின் வீட்டிற்கு பின் வீடு தங்கமணியின் வீடு. இவன் அரச உத்தியோகத்தன். இவர்களின் பொதுவேலியில் இவனது அக்காவிற்கும் தங்கமணிக்கும் ஏற்பட்ட வாய்ப்பேச்சில் குறுக்கிட்டுப் பிரச்சினையைத் தீர்த்தவன் விஸ்வம். "நீ, எல்.ரி.ரி.ஈ, உன் அதிகாரத்தைக் காட்டுகிறாய்! ஆனால் நான் யாரென்றும் நீ, அறிவாய்" என அன்று கூறிய தங்கமணிதான், இன்று இப்படிப் பழிவாங்க வந்தானோ விஸ்வத்தை!

ஆத்திரம் கொண்டு வாகனத்தினுள் துள்ளிக் குதித்த அதிரடிப் படையினர், மீண்டும் விஸ்வத்தை தாக்கத் தொடங்கினர். இவர்களின் பிடியில் இருந்து தப்பமுடியாது என உணர்ந்த விஸ்வம், தன் சட்டைத் தலைப்பில் மறைத்து வைத்திருந்த 'சயனைட்'டை உட்கொண்டு மான மறவர் போரில் மகிழ்ந்து மடியும் வேங்கை என்பதை வெளிக்காட்டுகின்றான்.

'சயனைட்' கடித்த விஸ்வத்தைக் கண்ட எதிரிகள், அவனது தொண்டையைப் பற்றிப் பிடிக்கின்றனர். விஸ்வம் வென்றுவிட்டான்!

மறுகணம், எதிரியின் வாகனம் மின்னல் வேகத்தில் கல்முனை அரசினர் வைத்தியசாலையை எட்டியது. ஆனால் விஸ்வத்தைக் காப்பாற்ற எதிரியால் முடியவில்லை.

உயிரற்ற விஸ்வத்தின் உடல்மீது மீண்டும் எதிரிகள் தாக்குதலை ஆரம்பிக்கின்றனர். இறுதியில் கல்முனைப் பொலிஸ் நிலையத்தின் முன் சனத்திரள்.

தலைவிரி கோலத்துடன் அக்கா அழுதுகொண்டு! உயிருக்காகக் போராடிக் கொண்டு நிற்கும் தந்தை! "எங்கள் மகனின் பிணத்தையாவது தந்துவிடுங்கள்" கெஞ்சிக் கேட்கிறார் விஸ்வத்தின் தந்தை. ஆத்திரத்துடன் இருந்த பொலிஸ் பொறுப்பதிகாரி இரத்னாயக்க, "இவன் பயங்கரவாதி என்று கையொப்பமிட வேண்டும்: அத்தோடு ரூபா 500 கட்டி பிரேதத்தை எடுத்துக் கொண்டு போ" எனக் கட்டளையிடுகின்றான் உரத்த குரலில்!

அன்றாடம் ஒருவேளைச் சாப்பாட்டுக்கே வழியின்றிக் கஸ்ரப்பட்டுக் கொண்டிருந்த விஸ்வத்தின் தந்தையோ. சகோதரியோ ரூபா 500க்கு எங்கே போவார்கள்? "அட கொலைகாரப் பாவிகள்! ஒரு விஸ்வம்தான் இன்று செத்தான். ஆனால் நூறு விஸ்வங்கள் பிறந்து, உன்னையும் உன் கூட்டத்தையும் இந்தப் பொலிஸ் நிலையத்தையும் தரைமட்டமாக்கத்தான் போகிறார்கள் – அதை நான் இறப்பதற்கு முன் காணத்தான் போகிறேன்!" என்று அன்று கல்முனைப் பொலிஸ் நிலைய முன் வாசலில் கையால் அடித்து அவர் சத்தியம் செய்தார். அது 1990.06.11 ஆம் திகதி நிறைவேறியது விடுதலைப் புலிப் போராளிகளால்!

அன்று, அந்தக் களம் வென்ற வேங்கை விஸ்வத்தின் உயிரற்ற உடல், கல்முனைப் பொலிஸ் நிலையத்தின் பின்னால் ரயருடன் சேர்ந்து எரிந்து கொண்டிருந்தது. அந்தப் புகை மண்டலம் சூரிய ஒளியையும் மறைத்து அன்று காலை 10.30 மணிக்கு கல்முனை நகரையே இருளாக்கியது.

ஆனால், அவன் எரிந்த இடத்தில் 1990.06.11 ஆம் திகதி, விடுதலைப் புலிப் போராளிகள், மேஜர் கஸ்ரோவின் தலைமையில் இரண்டு நிமிட நேரம் விஸ்வத்திற்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

கல்முனைச் சந்தியில் நீ!
கடமையில் நிற்கும்போது
பொல்லாத நரி எட்டப்பன்
போர்வைக்குள் வந்தான் – உன்னை
நில்லென்றார் பிடித்திழுத்தார்
நிமிர்ந்தவன் போர்வை பிய்த்தாய்!
கல்லொத்த உனது தோளால்
கயவர்களை அடித்து வீழ்த்தி
எல்லோருக்கும் வீரம் காட்டி
இறவாது புகழ் படைத்தாய். ✳

www.tamilarangam.net



# குண்டுகள் இலக்கை அடையாது விடினும் அரசிற்கான நெருக்கடி தவிர்க்க இயலாது

வீதியில் சுதந்திரமாக அச்சமின்றி நடமாட முடியாத ஒரு நாட்டை, ஒரு உல்லாசப் பயணியோ தனது மூலதனம் எப்பொழுது அழிவுறும் – தொழில் முயற்சிக்காக வெளியில் சென்று பாதுகாப்புடன் மீண்டும் காரியாலயம் வரமுடியுமா என்ற நிலை நிலவும் ஒரு நாட்டை, ஒரு முதலீட்டாளனும் எவ்வாறு தமக்கு உகந்த இடமாகத் தெரிவுசெய்ய முடியும் என்ற வினாவாக எழுந்துள்ளது. குண்டுகள் இலக்கை அடையாது விடினும், அரசிற்கான நெருக்கடி தவிர்க்க இயலாது.

பெப்ரவரி 6ஆம் திகதிக்கும் மார்ச் 5ஆம் திகதிக்கும் இடையிலான ஒருமாத காலப் பகுதிக்குள் கொழும்பு நகரில் 2 பாரிய குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. இவ்விரண்டு குண்டு வெடிப்புச் சம்பவங்களும் தற்கொலைப் படையாளிகள் இலக்கை எட்டமுன்னர் நிகழ்ந்துவிட்டன என்றே இராணுவ ஆய்வுகளும் சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சும் தெரிவிக்கின்றன. இதில் பெப்ரவரி 6ஆம் திகதி இடம்பெற்ற முதலாவது குண்டு வெடிப்பானது, கொழும்பில் ஆயுதப் படையினரின் அலுவலகங்கள் நிரம்பிய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் வீதி சோதனை நிலையம் ஒன்றில் இடம்பெற்றது. பெண் தற்கொலைப் போராளி ஒருவரை சோதனையிட ஆயுதப் படையினர் முயற்சித்த போது, இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றது. இக்குண்டு வெடிப்பின் போது 8 படையினர் கொல்லப்பட்டுள்ளதோடு, பலர் காயங்களுக்குள்ளாகினர். பல வாகனங்கள் சேதத்துக்குள்ளாகின. இந்த நிலையில் இத்தற்கொலைப் படையாளியின் இலக்கு என்னவென்பது குறித்து பல ஊகங்கள் எழுந்த போதும், அப்பாதையால் விமானப் படைத்தளபதி செல்வதை வழமையாகக் கொண்டிருந்தமையால் அவரே இலக்காக இருந்திருக்க முடியும் என்ற ஊகமும் பலமாகவே இருந்தது. இதனை உறுதிப்படுத்துவதுபோல விமானப்படைத் தளபதியும் நடந்து கொண்டுள்ளார். அண்மையில் கருத் தரங்கொன்றில் பேசிய அவர், "5 நிமிடங்கள் தாமதித்திருந்தால் இன்று நான் உயிருடன் இருந்திருக்க மாட்டேன்" எனக் குறிப்பிட்டிருந்தார்.

> **பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்த கூறியிருப்பதுபோல், பொலிசார் எடுத்த உடனடி நடவடிக்கையால் பெரும் அழிவு தவிர்க்கப்பட்டது எனக் கூறுவது பொருத்தப்பாடானதொன்று அல்ல. ஏனெனில், கொழும்பில் இலக்குகளைச் சென்றடையாத நிலையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள், குண்டு வெடிப்புக்கள் அழிவுகளையும் விளைவுகளையும் சிறீலங்கா அரசிற்கு ஏற்படுத்தாமல் இல்லை. ஒருவகையில் இவ்வழிவுகளும் விளைவுகளும், குறிப்பிட்ட இலக்கைச் சென்றடைந்து வெடித்திருப்பதைவிட கூடுதலானவையாகவும் இருக்கலாம்.**

இந்த வகையில் இக்குண்டுதாரியின் இலக்கு, ஒரு இராணுவ இலக்கு என கச்சிதம் செய்யக் கூடியதாக இருந்திருப்பினும்கூட, கடந்த வியாழக் கிழமை மார்ச் 5ஆம் திகதி மருதானையில் இடம்பெற்ற இக்குண்டு வெடிப்பின் இலக்கினை இராணுவ வட்டாரங்களால் அனுமானங்கள் எதையுமே செய்ய முடியாத நிலையே உள்ளது. நிச்சயமாக இச்சம்பவம் இடம்பெறும் பகுதியில் இக்குண்டு வெடிப்பு நிகழ்த்துவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கவில்லை என்பதை சிறீலங்கா வட்டாரங்கள் தெளிவாக ஊர்ஜிதம் செய்கின்றன. அதேவேளை, அதற்கு அப்பால் எதுவித ஊகத்தினையும் அவற்றால் செய்ய முடியவில்லை என்றே கொள்ளலாம். அதாவது, இக்குண்டுத் தாக்குதலின் இலக்கு இன்னும் கண்டறியப்படாத நிலையிலேயே உள்ளது. இந்த நிலையில் இக்குண்டு தாக்குதல்களின் இலக்கு எட்டப்படாமல் போனமை குறித்து சிறீலங்கா ஆயுதப்படை வட்டாரங்கள் திருப்திப்பட்டுக் கொள்வதற்கோ அன்றி பெருமைப்பட்டுக் கொள்வதற்கோ எதுவுமே இல்லை.

அதாவது, பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்த கூறியிருப்பதுபோல், பொலிசார் எடுத்த உடனடி நடவடிக்கையால் பெரும் அழிவு தவிர்க்கப்பட்டது எனக் கூறுவது பொருத்தப்பாடானதொன்று அல்ல. ஏனெனில், கொழும்பில் இலக்குகளைச் சென்றடையாத நிலையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள், குண்டுவெடிப்புக்கள் அழிவுகளையும் விளைவுகளையும் சிறீலங்கா அரசிற்கு ஏற்படுத்தாமல் இல்லை. ஒருவகையில் இவ்வழிவுகளும் விளைவுகளும், குறிப்பிட்ட இலக்கைச் சென்றடைந்து வெடித்திருப்பதைவிட கூடுதலானவை யாகவும் இருக்கலாம். ஏனெனில், இதனைவிட பாரிய குண்டுவெடிப்புச் சம்பவங்கள் கொழும்பிலும் தென் இலங்கையிலும் இடம்பெற்றுள்ளன. இச்சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் தொகையோ, காயமடைந்தவர்களின் தொகையோ குறைவானதாகவே இருந்துள்ளது. குறிப்பாக சுட்டிக் காட்டுவதானால், கடந்த வருடம் ஒக்டோபரில் இடம்பெற்ற உலக வர்த்தக மையம் மீதான பாரிய குண்டுத் தாக்குதலையும், இவ்வாண்டு ஜனவரியில் கண்டியில் தலதா மாளிகையில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலையும் குறிப்பிடமுடியும்.

அதாவது, தற்கொலைப் படையாளிகளின் இலக்குகள் ஒரு இராணுவ இலக்காக இருந்திருப்பின் இத்தாக்குதல்கள் பெரும் இராணுவ சாதனையாக மட்டுமே சொல்லப்படக் கூடியவையாகும். இதில் பொது மக்களுக்கு ஏற்படும் இழப்புகள், பாதிப்புகள் என்பன ஒப்பீட்டு ரீதியில் இலக்குத் தவறி மருதானையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களைவிட குறைவானதாக இருப்பதற்கும் வாய்ப்புண்டு. அதாவது 37 பொதுமக்கள் கொல்லப்படவோ அன்றி 260 பேர் காயமடைய வேண்டிய பெரும் எண்ணிக்கையான நிலையோ, பெரும் எண்ணிக்கையான வாகனங்களும், வர்த்தக நிலையங்களும் பாதிப்புக் குள்ளாகும் நிலையோ தவிர்க்கப்பட்டு இருப்பதற்கு வாய்ப்புக்கள் இருந் திருக்கும். அத்தோடு இராணுவ இலக்குகள் மீது இடம்பெறும்

> **சந்திரிகா அரசாங்கமோ இன்று வெளிநாட்டு மூலதனத்தையும் உல்லாசப் பயணத்துறை மூலம் கிடைக்கும் அந்நியச் செலவாணியையுமே பெரியளவில் நம்பிக்கொண்டிருக்கின்றது. வெளிநாட்டு மூலதனத்தையும் உல்லாசப் பயணிகளையும் வரவழைப்பதற்காக அரசாங்கம் பெரும் பிரயத்தனங்களின் அடிப்படையில் பாரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையில் வீதிகளிலும், முக்கிய பகுதிகளிலும் குண்டுவெடிப்புக்கள் இடம்பெறுவதானது, இவ்விரு விடயங்களுக்கும் ஆரோக்கியமான தொன்றாக இருக்க முடியாது.**

**– ஜெயராஜ் –**

குண்டுவெடிப்பிற்கு அரசியல் தலைமைப் பீடத்தில் பொதுவாகக் குறைகூற முற்பட்டாலும்கூட, ஆயுதப் படைத் தரப்பினர் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தவறிவிட்டனர் என்ற குற்றச்சாட்டே அதிகமாக இருக்கும். பெரும்பாலும், அரசியல் தலைமைப் பீடத்தின் மீதான குற்றச்சாட்டு வலுவற்றதாகவே இருக்கும். ஆனால், இலக்கை எட்டமுடியாத குண்டு வெடிப்புக்கள் அரசாங்கம் மக்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டையே எழுப்பவைக்கும். ஒருவகையில் ஆட்சியாளர்கள் தம்மைச் சுற்றி எழுப்பியுள்ள பலமான ஏற்பாடுகளினாலேயே வீதிகளில் இக்குண்டுவெடிப்புக்கள் உருவாகின்றன என்று யாரும் சிந்திக்க முற்பட்டாலும் அது தவறானதாக நோக்கப் படமாட்டாது.

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் ஒருபுறம் இருக்க, இதனால் விளையும் பாதிப்புக்கள், ஓர் இலக்கினை அதிலும் குறிப்பாக இராணுவ இலக்கினை அடைவதைவிட அரசியல், பொருளாதார ரீதியில் பெரும்பாதிப்பை விளைவிப் பதாகவே நிச்சயம் இருக்கும்.

சந்திரிகா அரசாங்கமோ இன்று வெளிநாட்டு மூலதனத்தையும் உல்லாசப் பயணத்துறை மூலம் கிடைக்கும் அந்நியச் செலவாணியையுமே பெரியளவில் நம்பிக்கொண்டிருக்கின்றது. வெளிநாட்டு மூலதனத்தையும் உல்லாசப் பயணிகளையும் வரவழைப்பதற்காக அரசாங்கம் பெரும் பிரயத்தனங்களின் அடிப்படையில் பாரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையில் வீதிகளிலும், முக்கிய பகுதிகளிலும் குண்டுவெடிப்புக்கள் இடம்பெறுவதானது, இவ்விரு விடயங்களுக்கும் ஆரோக்கிய மானதொன்றாக இருக்க முடியாது. அதாவது, குண்டுவெடிப்புக்கள் இன்று எந்தப் பகுதியிலும் எந்த வேளையிலும் நிகழலாம் என்னும் நிலை ஒன்று நிலவும் பட்சத்தில், உல்லாசப் பயணத்துறையோ அன்றி வெளிநாட்டு மூலதனமோ சிறீலங்கா வந்தடைவது பெரும் பாதிப்பிற்கு உள்ளாவது தவிர்க்க முடியாதது. இதனை அண்மையில் சிறீலங்கா அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் பிரதிபலித்துள்ளார். "பாரத்தினால் கீழே தாழ்ந்து நிற்கும் ஒரு மனோநிலையிலேயே நாங்கள் இருக்கின்றோம். இதைத்தான் எமது நாட்டில் முதலீடு செய்யக் காத்திருப்பவர்களும் கூறுகின்றார்கள். இலங்கை மீது இன்று கவிழ்ந்துள்ள இந்த கருமேகங்கள் மட்டும் அகன்றுவிட்டால், இதன் பின்னர் இலங்கையின் உயர்வைத் தடுத்து நிறுத்தவே முடியாது" என முதலீட்டாளர்கள் கூறுகின்றார்கள் என்று தெரிவிக்கின்றார்.

இந்த நிலையில், கொழும்பில் இடம்பெறும் குண்டுத் தாக்குதல்கள் இலக்கை அடையத் தவறிவிட்டது என அரசாங்கம் பெருமைப்பட்டுக் கொள்வதிலோ அன்றி அரசியல் தலைமைப்பீடமோ, படைத்துறைத் தலைமைப்பீடமோ பாதிப்புக்குள்ளாக வில்லை எனப் பெருமைப்பட்டுக் கொள்வதிலோ அச்சம் எதுவும் நீங்கப்போவதில்லை. வீதியில் அச்சமின்றி நடமாட முடியாத நாட்டை ஒரு உல்லாசப் பயணியோ அல்லது தனது மூலதனம் எப்பொழுது அழிவுறும், தொழில் முயற்சியாக வெளியில் சென்று பாதுகாப்புடன் மீண்டும் காரியாலயம் வரமுடியுமா என்ற நிலை நிலவும் ஒரு நாட்டை ஒரு முதலீட்டாளரும் எவ்வாறு தமக்கு உகந்த இடமாகத் தெரிவு செய்யமுடியும்? ✳

www.tamilarangam.net



# இனவெறி கக்கும் பிக்குகள்!

## ஒரு வெளிநாட்டுச் செய்தியாளரின் அனுபவம்

'மற்போன்' என்ற பெயருடைய ஒரு வெளிநாட்டுச் செய்தியாளர் சிறிலங்காவுக்கு விஜயம் செய்து, "இனவெறிபிடித்த பிக்குகளின் அரசியற் செயற்பாடுகளை, வெறித்தனமான கருத்துக்களை" தென்சீன 'மோணிங் போஸ்ற்' என்ற பத்திரிகையில் (08-10-97) கட்டுரையாக எழுதியிருந்தார். அதில் இருந்து சில பகுதிகளை இங்கே தருகின்றோம்.

'மடுலுவேவெ சோபித' என்ற இந்த இனவெறிப் பிக்கு சிறீநாக விகாரையின் தலைமைக்குரு. சிறிலங்காவின் பௌத்த மதபீடத்தில் உள்ள தீவிரவாத பிக்குகள் மத்தியில் இவரின் புகழ் மேலோங்கி வருகின்றது. அண்மையில் ஹொங்கொங் சீனாவிடம் கையளிக்கப்பட்ட நிகழ்ச்சியில் பௌத்த சமூகத்தின் பிரதிநிதியாக சோபித தேரர் கலந்து கொண்டிருந்தார். அந்தளவுக்கு அவரின் அரசியல் செல்வாக்கு உள்ளது. இனப்பிரச்சினை பற்றி இச் செய்தியாளருடன் தேரர் உரையாற்றினார். இது தமிழ் பிரச்சினையோ!




இனப்பிரச்சினையோ! அல்ல. இது ஒரு பயங்கரவாதப் பிரச்சினை. "ஜே.வி.பியை எப்படி முன்னைய அரசாங்கம் அழித்ததோ, அதே வழிமுறையைக் கையாண்டு இதையும் ஒழிக்க வேண்டும்" சில நூற்றுக்கணக்கான ஜே.வி.பி.யினரை அழிக்க 30,000 சிங்களவர்களை அரசாங்கம் கொன்றது. அந்த வழிமுறையை வட- கிழக்கில் அமுல்படுத்தும்படி தேரர் கேட்கின்றார். தமிழர்கள் பாரபட்சமாக நடத்தப்படுகின்றார்கள் - அடக்கப்படுகின்றார்கள் என்ற பொதுவான உண்மையைக்கூட இந்த வெறிபிடித்த பிக்கு சோபித தேரர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் கூறுகின்றார், "தமிழர்கள்தான் பிரச்சினையைத் தொடக்கினார்கள்: அதனால் பாதிக்கப்பட்டவர்கள் சிங்கள பௌத்தவர்கள் மட்டுமே. ஏராளமான சிங்களவர்களை, பிக்குகளை தமிழர்கள் கொன்றார்கள். 23,000 சிங்களவர்களை அகதிகளாக்கினர். ஆனால், தமிழர்களுக்கு நாங்கள் எந்தத் தீங்கும் இழைக்கவில்லை." வேறொரு பிக்குவும் இவ்விதம் செய்தியாளருடன் அரசியல் கதைத்துள்ளார். "சிறிலங்காவை ஒரு பல்லினநாடு, பல மதங்களையுடைய நாடு என்று யாராவது அழைத்தால் எனக்கு கோபம் பொத்துக் கொண்டு வருகின்றது: உண்மையில் சிறிலங்கா ஒரு பௌத்த சிங்கள நாடு. இது ஒரு நாடு. ஒரு மக்களாகவே இருந்து வருகின்றது" என்ற சந்திரிகா அம்மையாரின் தற்போதைய அரசியல் சுலோகத்தை பிக்கு ஆதரித்துப் பேசியுள்ளார். தற்போதைய இனப்பிரச்சினைக்கான தீர்வாக, தீவிரவாத பௌத்தபிக்குகள் வைத்திருக்கும் திட்டமானது, "அதிகளவு பிள்ளைகளைப் பெற்று, சிங்கள இனத்தின் ஆதிக்கத்தை அதிகரித்துக் கொள்ளும்படி சிங்களப் பெற்றோருக்குப் போதிப்பதேயாகும்" என்று கட்டுரை ஆசிரியர் எழுதியுள்ளார். பௌத்த மதத்தைப் பாதுகாத்து வளர்ப்பதற்காக கௌதம புத்தரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாகவே சிங்களவர் தம்மைக் கருதுகின்றனர். மகாவம்சத்தில் இதற்கென ஒரு கதையும் உண்டு. புத்தர் மரணப்படுக்கையில் கிடக்கும் போது, விஜயன் என்ற ஆரிய இளவரசன், வங்காள விரிகுடா ஊடாக இலங்கைக்குப் பிரயாணம் செய்து கொண்டிருந்தானாம். அதை மனக் கண்களால் கண்டுணர்ந்த புத்தபிரான், "ஓ கடவுளே இலங்கையில் எனது மதம் பரவி செழித்தோங்குமா!" என்று கேட்டதாக மகாவம்சம் கூறுகின்றது. மகாவசம்சம் இவ்விதம் சொல்ல முற்படுவது பற்றி செய்தியாளர் ஒரு சிங்களம் புத்திஜீவியிடம் கருத்துக் கேட்டார். "இது ஒரு முட்டாள்த் தனமான கருத்து. இதற்கு வரலாற்று ரீதியாகவோ அகழ்வாராட்சி ரீதியாகவோ சாட்சியங்கள் இல்லை." பேராசிரியர் மகிந்த பலிகவகன என்ற அறிவுஜீவி கூறுகையில், "இலங்கைத் தீவு முழுவதும் ஒருவருடைய ஆட்சியின் கீழ் மிக அரிதாக ஒன்று, இரண்டு தடவைகள் மட்டுமே இருந்துள்ளது. வரலாற்றின் எல்லாக் காலத்திலும் இலங்கைத் தீவானது பல இனங்களினதும் பண்பாடுகளினதும் ஒரு கொதி உலையாக குமுறிக் கொண்டே இருக்கிறது" என்று இலங்கையின் பண்டைய ஆட்சியின் வரலாற்றை அவர் தெளிவாகக் கூறியுள்ளார். இந்தப் பேராசிரியர் மேலும் கருத்துக் கூறுகையில், "புத்தபிரானால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாகவே - சிங்களவர் தம்மைக் கருதுவது போல, பல்வேறு நாடுகளிலும் வாழும் பௌத்தர்களும் தம்மையே புத்தபிரான் பௌத்தத்தைக் காக்க தேர்ந்தெடுத்தார் என்று ஒரே கதையையே அவர்களும் கூறுகின்றனர் என்று தகவல் சொன்னார். இந்தக் கதை ஒரு மத ஐதீகமாக இருந்து விட்டுப் போவதில் தவறில்லை. ஆனால், அதையே வரலாறாக்கும் போது மக்கள் உணர்ச்சி மயமாகின்றனர். இலங்கைத்தீவின் தற்போதைய அரசியல் பிரச்சினைக்கும் அதுதான் காரணம்" என்று இவர் விளக்கினார். வெளிநாட்டில் வசிக்கும் ஸ்ரான்லி ஜெயவீர என்றொரு சிங்கள புத்திஜீவி, பௌத்த சித்தாந்தங்களின் அடிப்படையில் இத்தகைய இனவெறி பிடித்த பிக்குகளைச் சாடியுள்ளார். "பௌத்தர்கள் என்று இவர்கள் எப்படித் தம்மை அழைக்க முடியும். சகல அடையாளங்களையும் இழக்கும் படியல்லவா புத்தரின் போதனைகள் கூறுகின்றன. அப்படியிருக்க, சிங்கள - பௌத்தர்கள் என்று எப்படி இவர்கள் தங்களை வசப்படுத்தி அழைக்க முடியும். ஏன் மறுபிறப்புப் பற்றி பௌத்தம் கூறுகின்றதே... அப்படியாயின், இந்த சோபித தேரர் அடுத்த பிறப்பில் ஒரு தமிழனாக அல்லது ஒரு தவளையாகவும் பிறக்கக்கூடுமே", என்று கூறியுள்ளார். 1983 தமிழினப் படுகொலையில் 3,000 தமிழர்கள் கொல்லப்பட்டனர். கொழும்பில் வாழ்ந்த 60 வீத தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டனர். தமிழர்களுக்கு எதிராக பிக்குகளும் வன்செயல்களில் ஈடுபட்டதை வெளிநாட்டுப் பிரஜைகள் நேரில் கண்டு - பகிரங்கப்படுத்தியுள்ளனர். வில்லியம் மக்கோவன் என்ற வெளிநாட்டுச் செய்தியாளர் எழுதிய நூல் ஒன்றில், "சகோதரிகளான இரண்டு தமிழ் யுவதிகள் சிங்களக் காடையர்களால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு -



சிதைக்கப்பட்டுக் கொண்டிருந்த போது அங்கு நின்ற பிக்குகளின் குழுவொன்று, எல்லாத் தமிழர்களையும் கொல்லுங்கள் என்று பைத்தியம் பிடித்தவர்கள் போலக் கத்திக் கொண்டிருந்தனர்" என்று எழுதியிருந்தார்.

இதை ஒரு பிக்கு மறுத்தார் எனக் கட்டுரையாளர் எழுதியுள்ளார். அந்த, பிக்கு சொன்னதாராம்... "தங்களுடைய தலையை மழித்துக் கொண்டு - மஞ்சள் அங்கியை அணிந்தபடி எவரும் பிக்கு போல வேசமிடலாம்" என்று கூறி அராஜகத்தில் ஈடுபட்ட பிக்குகளைப் பாதுகாக்க முயன்றுள்ளார். இது தொடர்பாக சோபித தேரரின் கருத்து, இனவெறியின்



உச்சமாக உள்ளது. "சிங்களவர்கள் ஆத்திரமூட்டப்படுகின்றனர். இராணுவத்தின் மீதான தாக்குதல்களை இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது. அதற்கெதிராக, சிங்கள வர்கள் போராடுவார்கள்" என்று கர்ச்சித்துள்ளார். ✳

> "சிறிலங்காவை ஒரு பல்லினநாடு, பல மதங்களையுடைய நாடு என்று யாராவது அழைத்தால் எனக்கு கோபம் பொத்துக் கொண்டு வருகின்றது. உண்மையில் சிறீலங்கா ஒரு பௌத்த சிங்கள நாடு. இது ஒரு நாடு. ஒரு மக்களாகவே இருந்து வருகின்றது"
>
> - ஜனாதிபதி சந்திரிகா அம்மையார்

> "சகோதரிகளான இரண்டு தமிழ் யுவதிகள் சிங்களக் காடையர்களால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு - சிதைக்கப்பட்டுக் கொண்டிருந்த போது அங்கு நின்ற பிக்குகளின் குழுவொன்று, எல்லாத் தமிழர்களையும் கொல்லுங்கள் என்று பைத்தியம் பிடித்தவர்கள் போலக் கத்திக்கொண்டிருந்தனர்"

> "தமிழர்கள்தான் பிரச்சினையைத் தொடக்கினார்கள்" அதனால் பாதிக்கப்பட்டவர்கள் சிங்கள பௌத்தவர்கள் மட்டுமே. ஏராளமான சிங்களவர்களை, பிக்குகளை தமிழர்கள் கொன்றார்கள். 23,000 சிங்களவர்களை அகதிகளாக்கினர். ஆனால், தமிழர்களுக்கு நாங்கள் எந்தத் தீங்கும் இழைக்கவில்லை."
>
> -மடுலுவேவெ சோபித தேரர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் இருபத்தியொன்று

(தொடர்ச்சி)

"1917 இன் பல்போர் பிரகடனம்தான் பலஸ்தீனத்தின்.." என்ற வசனம் எழுதப்பட்ட கரும்பலகை மேல் கிற்றி சாய்ந்து கொண்டாள். அவளுடைய ஆடையின் தோள்பட்டையில் சிறிது வெண்சாந்து அப்பிக் கொண்டது. பென் கானான் சொல்வது சரி. அவளுக்கும் அது தெரிந்திருந்தது. டொவ் லன்டவ் இலகுவில் தொடர்பு கொள்ள முடியாதவன். ஆனால் அவன் கரேனில் மிகுந்த விசுவாசம் காட்டினான். மார்க் சொன்னது சரிதான். தான்தான் முட்டாளாக இருந்து விட்டாள்."ஒரே யொரு வழிதான் இருக்கிறது.." அரி சொல்லிவிட்டுத் தொடர்ந்து, "அந்தப் பெண்ணிடம் போய் அவளைப் பற்றிய உன் உணர்வுகளை வெளிப்படுத்து. ஏன் அவள் சைப்பிரசில் இருக்க வேண்டும் என நீ விரும்புகிறாய் என்று சொல்" என்றான்."என்னால் முடியாது" கிற்றி முணுமுணுத்தாள். "என்னால் முடியாது" மீண்டும் பென் கானானைப் பரிதாபமாக நோக்கியபடி சொன்னாள்."இது மாதிரி ஏதாவது நிகழ்வதை நான் விரும்பவில்லை" என்ற அரி தொடர்ந்தும், "என்னை மன்னித்து விடு கிற்றி" என்றான். இதுதான் அவன் முதல் தடவையாக அவளைக் கிற்றி என்று அழைத்தது."என்னை மார்க்கிடம் திருப்பி அழைத்துச் செல்லுங்கள்" அவள் சொன்னாள்.அவர்கள் மண்டபத்தினுள் சென்றனர். அரி, டேவிட்டைப் பார்த்து "டொவ்விடம் போய் அவன் நிபந்தனைக்கு நாங்கள் ஒத்துக் கொள்கிறோம் என்று தெரிவித்துவிடு" என்றான்.இந்தச் செய்தி கிடைத்ததும் கரேனின் கூடாரத்திற்கு ஓடிச்சென்ற டொவ், அவசர அவசரமாக உள்ளே நுழைந்து சத்தமாகச் சொன்னான். "நாங்கள் பலஸ்தீனம் போகிறோம்."ஓ என் அன்பே...ஓ!...என் அன்பே அவ்வளவுதான் அவளால் சொல்ல முடிந்தது. நாங்கள் இதை அமைதியாக வைத்திருக்க வேண்டும். பிள்ளைகளிடையே, உனக்கும் எனக்கும்தான் இந்த விசயம் தெரியும்.."எப்பொழுது நாங்கள் போகப் போகிறோம்?"இன்னும் சில நாட்கள் பென்கானான் சில ட்ரக்குகளைக் கொண்டு வரப் போகிறார். எல்லோரும் பிரிட்டிஸ் சிப்பாய்களைப் போல் சீருடை அணிந்திருப்பார்கள். அவர்கள் லார்நாகாவுக்கு அருகில் உள்ள முகாமுக்கு எங்களை அழைத்துச் செல்லப் போவதாகப் பாவனை செய்யப் போகிறார்கள்."அவர்கள் இருவரும் ஒருவர் கையை ஒருவர் பற்றியபடி, கூடாரத்துக்கு வெளியே சென்றார்கள். அவர்கள் அக்காசியா மரங்களுள்ளேயும், வெளியேயும் போய்க் கொண்டிருந்த நேரத்தில் கன்வஸ் கூடாரங்கட்கு மேலாகத் தன் பார்வையைச் செலுத்தினான். அவர்கள் மெதுவாக நடந்து, பிள்ளைகள் குழுவொன்றிற்கு கத்தியால் சண்டையிடும் முறைகளைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த விளையாட்டு மைதானத்தை நோக்கிச் சென்றனர். டொவ் லன்டவ் தனியாக, முட்கம்பி வேலி அருகோடு தொடர்ந்து நடந்து போனான். பிரிட்டிஸ் சிப்பாய்கள் முன்னும் பின்னும் நடைபயின்று கொண்டிருந்ததை டொவ் கண்டான். நீண்ட முட்கம்பி வேலியின் முடிவில் ஒரு காவற் கோபுரமும், இயந்திரத் துப்பாக்கியும் தேடுதல் விளக்கும் இருந்தன.முட்கம்பி – துப்பாக்கிகள் – சிப்பாய்கள்.நான் எப்போ முட்கம்பி வேலிக்கு வெளியால் இருந்தேன்? அது மிக நீண்ட காலத்துக்கு முன் என்பதால் ஞாபகப்படுத்திக் கொள்வது மிகக் கடினமாக இருந்தது. முள்ளுக்கம்பி – துப்பாக்கிகள் – சிப்பாய்கள். இவற்றிற்கப்பாலும், ஏதும் நிஜமானதான வாழ்க்கை இருக்கிறதா? டொவ் அங்கேயே நின்று பார்த்துக் கொண்டேயிருந்தான். அவ்வளவு தூரத்துக்குப் பின் நோக்கி ஞாபகப்படுத்திக் கொள்ள முடியுமா? அது எவ்வளவோ நீண்ட காலத்துக்கு முன்.... எவ்வளவோ நீண்ட காலத்துக்கு முன்னுள்ள கதை........

### அத்தியாயம் இருபத்தியிரண்டு

வார்சோ, போலந்து – 1939 கோடைகாலம்.மென்டல் லன்டவ் ஒரு அமைதியான வார்சோ பேக்கரி உரிமையாளர் டாக்ரர் ஜோகான் கிளமென்ரோடு ஒப்பிடுகையில் சமூக, நிதி, அறிவு ரீதியாக மறு கோடியிலிருந்தார். உண்மையாகப் பார்க்கப் போனால் இருவரும் யூதர்கள் என்பதைத் தவிர வேறு பொதுவான எதுவும் அவர்களிடையில் இருக்கவில்லை.யூதர்களாக இருந்தபடியால் இவர்கள் ஒவ்வொருவரும் தனக்கும், சூழ இருந்த சமூகத்துக்கும் இடையிலான உறவுகளைப் பற்றிய கேள்விகளுக்குத் தங்கள் தங்கள் சொந்தப் பதில்களைத் தேடிக் கொள்ள வேண்டியிருந்தது. டாக்ரர் கிளமென்ற் இறுதிவரை சமூகத்தோடு இரண்டறக் கலந்துவிடும் கொள்கையில் பிடிவாதமாகவிருந்தார். மென்டல் லன்டவ் ஒரு எளிமையான மனிதனாக இருந்தாலும், இப்பிரச்சினையைப் பற்றி அவரும் சிந்தித்திருந்தார். ஆனால், முற்றாக வேறான ஒரு முடிவுக்கு வந்திருந்தார். கிளமென்ற் மாதிரியில்லாமல் மென்டல் லன்டவ், தன் சமூகத்திலேயே ஒரு புறத்தியானைப் போல் உணரச் செய்யப்பட்டிருந்தார். எழுநூறு வருடங்களாகவே பாகுபாடாக நடத்தப்படுவதற்கும், தொகையாகக் கொலை செய்யப்படுவதற்கும் இடைப்பட்ட ஏதோ ஒரு வகைத் துன்புறுத்தலுக்கும் போலந்தில் யூதர்கள் ஆட்பட்டிருந்தனர்.ஆரம்பத்தில் யூதர்கள், சிலுவை யுத்த வீரர்களின் துன்புறுத்தல்களில் இருந்து தப்புவதற்காகவே போலந்தினுள் வந்தனர். அவர்கள் பரிசுத்த தூய்மைப்படுத்தலுக்கு (Holy Purification) அஞ்சியே யேர்மனி, ஆஸ்திரியா, பொகீமியா போன்ற இடங்களில் இருந்து போலந்துக்குள் தப்பி ஓடி வந்தனர். மற்ற எல்லாப் போலந்து யூதர்களையும் போலவே முதன் முதலில் வந்த யூதர்கள் நடத்தப்பட்ட விதம் பற்றி மென்டலும் அறிந்திருந்தார். அவர்கள் நரப்லி கொடுப்பவர்களாகவும், பில்லி சூனியக் காரர்களாகவும் குற்றம் சாட்டப் பட்டதோடு, வியாபாரத்தில் போட்டிக்கு வந்தவர்களாகவும் கணிக்கப் பட்டார்கள்.முடிவில்லாத துன்பங்களின் உச்சக்கட்டமாக ஒரு ஈஸ்டர் வாரத்தில் வெறிகொண்ட கும்பல்கள் வீதிகளில் ஓடி, ஒவ்வொரு யூதனையும், அவன் குடும்பத்தினரையும் வீடுகளுக்கு வெளியே இழுத்து வந்தனர். கட்டாய ஞான தீட்சையை ஏற்றுக் கொள்ளாதவர்கள் ஸ்தலத்திலேயே கொல்லப் பட்டனர்.யூதர்களுக்கெனப் பிரத்தியேகமான வரி விதிக்கப்பட்டிருந்தது. அவர்களைப் பிறிதான இனமாக அடையாளம் காணும் விதத்தில், மஞ்சள் அடையாளப் பட்டியொன்று அணியவேண்டும் என்ற விதியிருந்தது. யூதர்களைச் சிறுமைப் படுத்தும் ஆயிரத்துக்கு மேற்பட்ட சட்டங்கள், சட்டப் புத்தகங்களில் இருந்தன. யூதர்கள் பிறிதான சேரிக்குள் அனுப்பப்பட்டு, அவற்றைச் சுற்றிச் சுவர்கள் எழுப்பிச் சூழ இருந்த சமூகத்தில் இருந்து அவர்களைத் தனிமைப்படுத்தி இருந்தார்கள். இந்த யூத சேரிகளில் புதுமையான விடயமொன்று நிகழ்ந்தது.



லியோன் யூறிஸ்

தொடரும்...

தங்கள் தாயகத்தை விட்டு அடித்துத் துரத்தப்பட்ட யூதமக்கள் 100 க்கு மேற்பட்ட நாடுகளில் குடியேறியிருந்தார்கள். ஆனால் 2000 ஆண்டுகளாக, அடுத்த செடார் திருநாளை ஜெருசலேத்தில் கொண்டாடுவோம் என்ற வசனத்தை அவர்களது வருடாந்த செடார் பண்டிகையின் போது பிரார்த்தனையின் இறுதியில் கூறி வந்தார்கள்.

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை வரையுங்கள். உங்கள் ஆக்கங்களை **24- 04 - 1998** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.



கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**

**Eelam House, 202Long Lane, London SE1 4QB.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சிறுகதை

பாடசாலை மணி அடித்து ஓய்ந்தது தான் தாமதம். மாணவ, மாணவிகளின் கலகலப்பும் ஆரவாரமும் பாடசாலை யையும் சுற்றுப்புறத்தையும் இரண்டு படுத்தின.

வெள்ளைச் சீருடையில் பாடசாலையை விட்டுக் கலைந்துபோய்க் கொண்டிருந்த மாணவர் கூட்டம் சோளகக் காற்றில்



# முகாள வரும் உணர்வுகள்

### மலரன்னை

அள்ளுண்டு போகும் மல்லிகை மலர்களை என் நினைவில் நிறுத்த, என் கால்களோ அவசரமாக 'சைக்கிள் பார்க்கை' நோக்கி நடைபோட்டன.

கால்சட்டைப் பையில் கையை விட்டுத் துழாவி திறப்பைத் தேடியெடுத்து, எனது 'சைக்கிளை' இனங்கண்டு எடுத்துக்கொண்டு வெளியே வந்து கொண்டிருந்தேன்.

"என்ன 'மாஸ்டர்' அவசரமாய் வெளிக்கிட்டிட்டியள்?"

சகாதேவன் 'மாஸ்டரின்' கேள்வி எனக்குள் எரிச்சலைத் தோற்றுவித்தது.

"பிள்ளைகள் என்ன பாடோ தெரியேல்ல, அம்மாவும் வயதுபோன நேரத் திலை.....பாவம்"

மனதில் உள்ளதை வெளிப்படையாகச் சொல்லிவிட்டு அவசரமாகச் 'சைக்கிளில்' ஏறி மிதிக்கத் தொடங்கினேன். சுமார் பன்னிரண்டு கிலோ மீற்றர் தொலை வில்தான் எனது தற்போதைய வதிவிடம் அமைந்திருக்கிறது.

எனது 'சைக்கிள்' வீடு நோக்கி முன்னேறிச் செல்ல, என் சிந்தனையோ பின் நோக்கிப் பாயத்தொடங்கியது.

தேவகி, ஆறு வருடங்களின் முன் காதலித்துக் கைப்பிடித்த என் 'சகதர்மினி.' சகல சௌகரியங்களிலும் என்னுடன் சமமாகப் பங்கேற்றவளை நான் வேறு எப்படித்தான் வர்ணிப்பது? எங்கள் தாம்பத்திய வாழ்க்கையின் சின்னங்களாய் ரவியும் ராகினியுமாய் இரு செல்வங்களுடன் அமைதியாகப் போய்க் கொண்டிருந்தது வாழ்க்கை.

தென்றல் தவழ்ந்த எம்மண்ணில் ஆக்கிரமிப்புப் புயல் அனலாய்க் கிளம்பி அழிவை ஏற்படுத்த முயன்ற வேளையில், நாங்கள் எம் இருப்பிடங்களைத் துறந்து கையில் கிடைத்ததை எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டோம்.

தேவகிக்கோ, எனக்கோ வீட்டை விட்டுப்புறப்படுவதில் துளிகூட இஷ்ட மிருக்கவில்லை. எங்கள் வீடும், வீட்டைச் சுற்றியுள்ள தென்னை மரங்களும், வீட்டு முற்றத்திலே இதமான நிழலைத் தரும் வேப்பமரமும், அந்த மரத்தில் ஓடியாடிக் கொண்டிருக்கும் அணிற் பிள்ளைகளும், வேப்பங் கிளையிலிருந்து தலையைப் பக்கமாகச் சரித்துக் கரைந்துகொண்டிருக்கும் காகங்களும், வளவின் வலது புறத்தில் அமைந்திருந்த கிணறும் கிணற்றைச் சுற்றிப் பசுமையாக வளர்ந்திருந்த வாழைகளும், தென்னஞ் சோலையுமாக விளங்கிய அந்த அழகிய நந்த வனத்தைவிட்டுப் பிரிய யாருக்குத்தான் மனம் வரும்.

நாங்கள் கிளாலிக் கடலைக் கடந்த அந்த இரவு இன்றும் என் நெஞ்சைவிட்டகலா நினைவாக உறை ந்து போய்க்கிடக்கிறது.

கிளாலிக் கடலில் நாங்கள் பயணித்த அந்தப் படகு, தத்தளித்து மேலும் கீழுமாய் ஆடிக்கொண்டே நகர்கிறது. அலைகளின் ஒவ்வொரு மோதலும் படகை உலுப்பி அசைத்தபோது எங்கள் படகில் இருந்தவர்கள் பயத்தினால் ஒருவரை ஒருவர் பிடித்துக் கொண்டார்கள். ரவி பயம் மேலிட என் நெஞ்சில் சாய்ந்துகொண்டான். நான் அவனை இறுக அணைத்துக் கொண்டவனாய் அருகிலிருந்த தேவகியைப் பார்த்தேன். அவள் கைக்குழந்தை ராகினியை அணைத்த வாறு சிலையாக இருந்தாள். இருளில் அவளது கண்களை ஊடுருவிப் பார்க்க முயன்று நான் தோற்றுப்போனேன்.

கடலின் அலைகள் சிதறி உவர் நீர் துள்ளியெழுந்து படகிலுள்ளவர்களை நனைத்தது. நான் துவாயினால் ரவியைப் போர்த்திவிட்டேன். தேவகி, ராகினியைத் தனது நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். திடீரென அலைகளின் இரைச்சலையும் மிஞ்சியதாய் ஓர் பேரிரைச்சல் வான் பரப்பை நிறைத்தது. இப்போது படகிலிருந்த அத்தனை பேரின் கவனமும் அதை நோக்கித் திரும்பியது.

இராட்சத பறவையொன்று தொடர் சங்கிலியாக நகர்ந்து கொண்டிருந்த எமது படகுகளைக் குறிவைத்துப் பறந்து வருவதைக் கண்டு படகுகளில் பயணித்தவர்கள் அனைவருமே நிலை குலைந்துபோயினர். அவலக்குரல்களினால் அல்லோல கல்லோலப்பட்டது படகு.

"எல்லோரும் விழுந்து படுங்கோ"

படகோட்டியின் எச்சரிப்புக் குரல் கேட்டு அனைவரும் உசாராகினர். நான் தேவகியை எச்சரித்துவிட்டு ரவியைக் கீழே படுக்கவைத்து அவன் மேல் போர்வையாகக் கவிழ்ந்து கொள்கிறேன். தேவகி ராகினியை அணைத்தவாறே கீழே சரிந்துகொள்கிறாள்.

மின்னல் வேகத்தில் யாவும் நடைபெறுகின்றன. இதற்கிடையில் எமது வள்ளத்தையே குறியாகக் கொண்டு இராட்சதப்பறவை 'றொக்கட்டுகளை' ஏவ, பெரும் வெடிச்சத்தங்களுடன் தீப்பொறிகளாக அவை காற்றினூடு இருளினுள் சிவந்து, நெளிந்து எம் சுற்றாடலைத் தாக்குகின்றன. எங்கும் நெருப்புச் சுவாலை கள். என் இதயத்தின் படபடப்பு துல்லியமாகச் செவிகளுக்குக் கேட்ட வாறிருக்க எதுவுமே பேசத் திராணியற்றவனாக அப்படியே செயலற்றுக் கிடக்கிறேன்.

இத்தனை அவலத்தினூடும் படகோட்டி படகினைச் செலுத்திக்கொண்டே இரு ந்தான். குண்டுச் சத்தங்கள் ஓய்ந்துபோன பின்னர்தான் அலைகளின் பேரிரைச்சல் எம் செவிகளைத் தீண்டுகின்றன.

"அவன் போயிட்டான் எல்லாரும் எழும்புங்கோ"

குரல்கேட்டு ஒவ்வொருவராக எழுந்து தம்மைச் சுதா கரித்துக் கொள்ளுகின்றனர். நானும் மெதுவாக எழுந்து ரவியையும் தூக்கிவிடுகிறேன். தேவகி இன்னமும் எழும்பவில்லை. தேவகியைத் திரும்பிப் பார்த்துக்கூறினேன்.

"தேவகி! பிள்ளையை என்னட்டைத் தந்திட்டு நீர் எழும்பும்"

அவளோ வாய டைத்துக் கண்கள் குத்திட்ட நிலையில் அப்படியே சரிந்து கிடந்தாள். நான் குழ ந்தையைத் தூக் கிக்கொண்டு அவ ளது தோளைப்பற்றி உலுப்பினேன்.

அவளது அமைதி எனதுள்ளத்தில் கிலி யை ஏற்படுத்தவே, மெதுவாகத் தலை யைத் தொட்டுத் திருப்பினேன். கையில் எதுவோ பிசுபிசுத்தது. குனிந்து பார்த்தேன். ஆ!........இரத்தம் தேவகி....!

எனது அவலக்குரல் ஆழ்கடலின் நடுவே பேரொலியை எழுப்பி ஓய்ந்துபோனது. அவ்வளவுதான். தேவ கி என்னைவிட்டுப் பிரிந்துவிட்டாள்.

சடுதியாக எனது கண்களை நீர்த்திரை மறைக்கிறது. ஒரு கையால் 'ஹான்டிலைப்' பிடித்துக்கொண்டு வலது கையினால் ஜீன்ஸ் பையில் இருந்த கைக்குட்டையை எடுத்துக்கண்களை அழுந்தத் துடைத்துக்கொள்கிறேன். தெருவில் செல்பவர்களது கண்கள் என்னையே மொய்ப்பதாக ஒரு பிரமை என்னுள் ஏற்படுகிறது.

அப்படியே கைக்குட்டையால் முகம், கழுத்து என வியர்வையைத் துடைக்கிறேன். ஆனால் கட்டுக் கடங்காத என் கவலை........அது துடைத்துப் போக்கக் கூடியதொன்றா?

வீட்டு வாசலிலேயே அம்மா எனக்காகக் காத்திருந்தாள். அவளது கைகளில் இருந்த ராகினி, என்னைக் கண்டுவிட்டாள்.

"அ.......ப்.........பா!"

அவளது மழலையில் எனது கவலை மறைந்துபோனது. 'சைக்கிளை' உருட்டிப் போய் வீட்டுத் தாழ்வாரத்தில் நிறுத்திவிட்டு, ராகினியை நோக்கிக் கைகளை நீட்டினேன். பிஞ்சுக் கரங்களை நீட்டி, என்னிடம் தாவினாள் ராகினி. அவளது உச்சியில் முத்தமிட்ட நான், தலைக்கு மேல் அவளை உயர்த்தி, ஒரு சுற்றுச் சுற்றி விட்டு அம்மாவிடம் நீட்டினேன். அவளிடம் போக மறுத்து. ராகினி என்னைக் கட்டிக் கொண்டாள். அம்மா அவளைச் சமாதானப்படுத்தினாள்.

"ராகினி அப்பம்மாட்டை வாங்கோ குஞ்சு அப்பா பாவம் பசி போய் முகமக்முழுவி சாப்பிட்டு வந்து பிள்ளையோட விளையாடுவார்"

ஒருவாறு மனமில்லாமல் அப்பம்மாவிடம் போனாள் ராகினி. எனது கண்கள் ரவியைத் தேடிச் சுழன்றன. அம்மா அதைப் புரிந்துகொண்டாள்.

"தம்பி! ரவி நித்திரையாய்ப் போனான். கொஞ்ச நேரமாய் அவன் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணி என்னைப் பாடாதபாடு படுத்திப்போட்டான்"

"ஏனம்மா அழுதவன் பிள்ளை......."

"அதையேன் ராசா கேட்கிறாய், என்னவென்று வாயைத் திறந்து சொன்னாத்தானே. நானும் என்னவோ ஏதொ வென்று பயந்துபோனன். அப்படியே களைச்சுப் போய் நித்திரை யாயப் போயிட்டான் பிள்ளை"



தாயை இழந்தபின் ரவியின் போக்கில் இப்படியான சில மாற்றங்கள் தென்படுவதை நான் பல தடவைகள் அவதானித்திருக்கிறேன். அசட்டுப் பிடிவாதமும் அடங்காத சுபாவமுமாய்,

தொடர்ச்சி 12 ம் பக்கம்.....

www.tamilarangam.net



# ஊரழிப்பு

**பொலநறுவை - மன்னம்பிட்டி கிராமத்தில் நடந்த உண்மைச் சம்பவம்.**

மன்னம்பிட்டி ஒரு சிறிய கிராமம். பொலநறுவை மாவட்டத்தின் எல்லையோடு அது அமைந்துள்ளது. பிரதான வீதியில் ஒரு பக்கம் சிங்களக் கிராமத்தையும், அடுத்த பக்கம் ஒரு முஸ்லிம் கிராமத்தையும் கொண்டிருந்த தமிழ் ஊர் அது. 1992ஆம் ஆண்டின் துவக்கப் பகுதியில் ஓர் இரவு. சனங்கள் உறங்கினார்களோ இல்லையோ ஊர்



பேச்சு மூச்சற்றுக் கிடந்தது. சிங்கள - முஸ்லிம் காடையர்களோடு இராணுவத்தினர் இரு பக்கங்களாலும் நுழைந்தனர். துப்பாக்கிகளை விட அவர்களுக்கு அதிகம் பிடித்தமான கத்திகள், வாள்கள், அலவாங்குகள், பொல்லுகள் கைகளில் கிடந்தன. நாய்களின் வெறித்தனமான குரைப்பு ஊரைத் துடித்தெழச் செய்தது.

அன்று நடந்த கோரத்தின் அதிர்ச்சியிலிருந்து இன்றும் மீளாத ஒரு சிறுவன், எரிந்து சாம்பரான அந்த இரவின் கதையைச் சொன்னான்.

தாய்மாரைக் கட்டிப்பிடித்தபடி ஆழ்ந்து தூங்கிய பச்சிளங் குழந்தைகளை, கால்களில் பிடித்து பிடிங்கி இழுத்தார்கள். பதறி எழுந்து "ஐயோ!.... என் குழந்தை...." அன்னை சொல்லி முடிக்கமுன், வீறிட்டுக் கத்திய மழலையின் பிஞ்சுமுகத்தைச் சுவரோடு ஓங்கி அறைந்து சிதறடித்து "இந்தா....பிடி....." எனத் தாயின் மடியில் எறிந்து விட்டுப் போனார்கள்.

கணவனை இழுத்து பெற்றோலைத் தலையில் ஊற்றித் தீப்பெட்டியைத் தட்டியபோது, "ஐயோ அவரை விடுங்கோ..." எனக் கதறியோடி வந்து கட்டிப்பிடித்த துணைவியையும் சேர்த்துக்கட்டி, "நீயும் அவரோடயே போ" என்று தீ மூட்டிய வெறியர்கள், மரண ஓலமிட்டு - துடித்துத் துடித்து மெல்ல அடங்கி கருகி முடியும்வரை கும்மாளமிட்டுச் சிரித்தார்கள்.

பயந்தொடுங்கி, பெற்றோருக்கிடையில் பதுங்கி ஒளித்த பெண் பிள்ளைகளை, வெளியில் இழுத்தார்கள். பெற்றவர்கள் நிற்கவே, உடைகளைக் கிழித் தெறிந்தார்கள். உடல் சோர்ந்து, உணர்வு சோர்ந்து, உயிர் சோர்ந்து சாகும்வரை அவர்கள் மீது காமவெறியாடிய காடையர் கூட்டம் - போகும்போது - பிள்ளைகளின் பிணத்தைத் தூக்கிப் பெற்றவர்களின் கையில் கொடுத்துவிட்டு, எக்காளச் சிரிப்போடு வெளியேறியது.

மூன்று நாட்கள் நரவேட்டைக்குப் பிறகு வயல்கள், வீடுகள், குடிசைகள், ஆலயம், பாடசாலை என அந்தச் சின்னக் கிராமம் முற்றிலுமாகக் கருகிப் போய்க் கிடந்தது. மனித சஞ்சாரமே அற்று மன்னம்பிட்டி வெறிச்சோடிப் போயிருந்தது.. வீதிகளில் இழுபட்ட பிணங்களை நாய்கள் நரிகளோடு, பறவைகளும் உணவாக்கின. துல்லியமான புள்ளிவிபரங்கள் இல்லையாயினும், கொல்லப்பட்டவர்களது தொகை 250இற்கு அதிகம் என்பது பிழைக்காது. இத்தொகை 450 - 500 வரை கூட இருக்கலாம். 1,500 குடும்பங்கள் வரை வாழ்ந்த அந்தக் கிராமத்தின் அத்தனை குடிகளும் விரட்டியடிக்கப்பட்டன.

பாடசாலையின் தளபாடங்களை முஸ்லிம், சிங்கள அயல் கிராமங்கள் பங்கிட்டுக் கொண்டன. வீடுகளை உடைத்து கதவுகள், சாளரங்கள், ஓடுகளைச் சேதாரமில்லாமல் கழற்றி, பத்திரமாக எடுத்து, பக்கத்துக் கிராம வீடுகளுக்காக வாகனங்கள் ஏற்றிச் சென்றன. மேனி உருக்கிச் சேனை செய்து எம்மக்கள் சேர்த்து வைத்த நெல் மூட்டைகள், உழவு இயந்திரத் தொடுப்பிகளில்



அடுக்கி அப்புறப்படுத்தப்பட்டன. கொண்டு செல்ல வசதியற்று எஞ்சிய பொருட்கள் எல்லாம் நெருப்புக்குக் கொடுக்கப்பட்டன.

அறுவடைக்குத் தயாராயிருந்த வயல்களின் வரம்புகளைத் தாவிக் கடந்த படை வண்டிகள், சூடடித்து விட்டுப் போயின.

பரிபூரணமாக ஒரு ஊரழிப்பு நடந்து முடிந்தது. ✳

**தாய்மாரைக் கட்டிப்பிடித்தபடி ஆழ்ந்து தூங்கிய பச்சிளங் குழந்தைகளை, கால்களில் பிடித்து பிடிங்கி இழுத்தார்கள். பதறி எழுந்து "ஐயோ!.... என் குழந்தை...." அன்னை சொல்லி முடிக்கமுன், வீறிட்டுக் கத்திய மழலையின் பிஞ்சுமுகத்தைச் சுவரோடு ஓங்கி அறைந்து சிதறடித்து "இந்தா....பிடி....." எனத் தாயின் மடியில் எறிந்துவிட்டுப் போனார்கள்.**

# முளைவிடும் .....

## *(சிறுகதை)*

மூர்க்கத்தனமாக அவன் முரண்டு பிடிக்கும்போது, சில வேளைகளில் என்னையே நான் இழந்துவிடுவதுமுண்டு. ஆக்ரோஷமாய்க் கொதித்தெழுந்து அவனைத் தண்டித்து விட்டுப் பிறகு வேதனைத் தீயினால் வெந்துபோவேன்.

எனக்கு நன்கு பரிச்சயமான ஒரு 'டாக்டரிடம்' கலந்தாலோசித்தபோது அவர் சொன்னார்:

"குழந்தையின் மனதில் ஏதோ ஒரு பொரிய நமைச்சல் இருக்கிறது. அவனோடு அனுசரித்துப்போய் அவனது மனதிலுள்ளதை அவன் மூலமாகவே அறிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். இதுதான் சிறந்த வழி. அவனை அன்போடு அணுகி அதற்கான பரிகாரத்தைத் தேடலாம்."

'டாக்டர்' சொன்னவற்றை நினைவு படுத்திக்கொண்டே, முகம் கழுவுவதற்காக கிணற்றடியை நோக்கி நடந்தேன். சாப்பாட்டை முடித்துக்கொண்டு ஆறுதலாய் நான் வந்து விறாந்தையில் இருக்கவும், அடுத்த வீட்டு நண்பர் சாரங்கன் பத்திரிகையும் கையுமாக வரவும் சரியாக இருந்தது.

"மாஸ்டர்! இன்றைக்குப் பேப்பர் பார்த்தனிங்களே?"

"இல்லை அண்ணை என்ன ஏதும் புதினம் விசேஷமாய் இருக்குதே?

"ஓம் மாஸ்டர். பைற்றர் ஹெலி ஒன்று எரிஞ்சு கொண்டே கடலுக்கை விழுந்திட்டுதாம். நீங்கள் கேள்விப்படேல்லையே?"

நான் ஆர்வத்துடன் அவரது கையிலிருந்த பத்திரிகையை வாங்கி வாசித்துக் கொண்டிருந்தேன். அம்மா ஏதோ ஞாபகம் வரப்பெற்றவளாய் என்னிடம் அவசரமாக வந்தாள்.

"தம்பி! அப்போதை கீதா வந்து 'ஹெலி விழுந்த புதினத்தைச் சொல்லிக் கொண்டிருக்கத்தான் ரவி வீரிட்டுக்கத்தத் துவங்கினவன். என்ன ஏதோ என்று கேட்டு நாங்களும் அலுத்துப்போனோம். அவனைச் சமாதானப்படுத்த கீதாவும் நானுமாய்ப் பட்டபாடு. அப்பப்பா போதுமென்று போச்சுது"

கீதா, சாரங்கனின் மனைவி.

இதற்கிடையில் அறைக்குள்ளிருந்து ரவியின் அழுகுரல் கேட்டது. அவனைச் சமாதானப்படுத்தும் நோக்கத்துடன் எழுந்து நான் அவனிடம் போனேன். என்னைக் கண்டதுதான் தாமதம் பெரிதாகக் குரலெடுத்து ஓ!......வென்று அழத் தொடங்கிவிட்டான்.

அவனை அணுகிய நான் அவனது முதுகைத் தடவியவாறு சமாதானப்படுத்த முயன்றேன்.

"ரவிக்குஞ்சு ஏன் ராசா அழுகிறாய்? பிள்ளைக்கு என்ன செய்யுது?" கேவலுடன் வந்தது பதில்,

"அப்பா! அம்மாவைச் சுட்ட ஹெலி விழுந்து போச்சுதாம்."

"பிள்ளைக்கு ஆர் சொன்னது?"

நான் எதுவுமே தெரியாததுபோல் நாசூக்காக அவனிடம் கேள்வி தொடுத்தேன். அவனது மனதில் உள்ளதை வெளிக்கொணரத்தான் இந்த முயற்சி.

"கீதா அன்ரி சொன்னவ."

"ஹெலி விழுந்து அழிஞ்சு போகட்டும். அதைப்பற்றி எங்களுக்கென்ன?" நான் அக்கறை இல்லாதவன்போல் கதை விட்டேன்.

"அப்பா! எங்கடை அம்மாவைச் சுட்டது பைற்றர் தானே?"

எனக்கு எல்லாமே புரிந்துவிட்டது.

"ஓம் ராசா, அதுவும் பைற்றர்தான் அது வேறை ஹெலி"

எனது கழுத்தை இறுகக் கட்டியவாறு ரவி கூறினான்.

"அப்பா! அம்மாவைச் சுட்ட பைற்றரை நான்தான் சுடுவேன்"

இப்போது நான் அவனது முதுகைத் தட்டிக் கொடுத்தேன்.

"அதுக்கென்ன ரவி! நீ பெரிசாக வளர்ந்து அதைச் சுடலாம் சரிதானே."

ரவி, கண்களை அகல விரித்துக் கைகளால் சுடுவது போன்று பாசாங்கு செய்தான்.

"டுஷ்!......டுஷ்!!"

அவனது வாய் சுட்டுக்கொண்டிருந்தது. நான் அவனை இறுக கட்டி அணைத்துக் கொண்டேன்.

ரவியின் கலகலப்பைக் கண்டு அறைக்குள் வந்த அம்மா, வியந்துபோய் நின்றாள். ✳

# சிட்னியில் தேனிசை செல்லப்பாவின் சுதந்திர தரிசனம்

சிட்னியில் தேனிசை செல்லப்பா அவர்களின் சுதந்திர தரிசனம் இசை நிகழ்ச்சி 14-3-98 சனிக்கிழமை நடைபெற்றது. தமிழர் ஒருங்கிணைப்புக் குழு சிட்னிக் கிளையின் கலை, பண்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். தனது கம்பீரக் குரலில் கலைமாமணி செல்லப்பா அவர்கள் கானமழை பொழிந்தபோது, விடுதலை உணர்வால் உந்தப்பட்ட மக்கள் தங்க நகைகளையும், பணத்தையும் அவரிடம் வழங்கினர். சுமார் ஐந்துமணிநேரம் நடந்த இந்நிகழ்ச்சியை மக்கள் மெய்மறந்து ரசித்தனர்.

இந்நிகழ்ச்சியில் கலைமாமணி செல்லப்பா, அவரது மகன் இளங்கோவன் ஆகியோர்களுடன் அவுஸ்த்திரேலியக் கலைஞர்கள் பாடகர்களாகவும், பக்கவாத்தியக் கலைஞர்களாகவும் பங்குகொண்டனர். மாலை 6 மணிக்கு தொடங்கிய இந்நிகழ்ச்சி இரவு 11-30 மணிக்கு நிறைவுபெற்றது. இந்நிகழ்ச்சியின் முடிவில் இறுதிப்பாடலாக "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்ற பாடலை தேனிசை செல்லப்பா அவர்கள் பாடிய போது மண்டபம் நிறைந்திருந்த மக்கள் அனைவரும் எழுந்துநின்று பாடலுக்கேற்ப கைதட்டினர். மறுநாள் 15-3-98 இல் நடந்த தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் மாதாந்தக் கூட்டத்தில் தேனிசை செல்லப்பா அவர்கள் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றிவைத்ததுடன், சிறப்புரையும் நிகழ்த்தினார். ✳

www.tamilarangam.net



# சகாப்தம் படைத்த ஸ்ராலின்கிராட்

1

ஸ்ராலின்கிராட்! இச்சொல் இரண்டாவது உலகயுத்தத்தின் உச்சக்கட்டத்தில் உலகெங்கும் மூலை முடுக்குகளில் எல்லாம் ஒலித்தது. சுதந்திர நாட்டமுடைய மக்களுக்கு இச்சொல், பாசிஸத்திற்கு எதிரான போராட்டத்தை வலுப்படுத்தக்கோரும் ஊக்கமிகு அறைகூவலாக - நெருங்கிவந்து கொண்டிருந்த பாசிஸ படுபாதகத்தின் அழிவைப் பறைசாற்றும் முழக்கமாக ஒலித்தது. ஜேர்மனியிலோ இச்சொல் கவலையையும் கலக்கத்தையும் ஏற்படுத்தியது. வெல்லவே முடியாதெனத் தோன்றிய பாசிஸ ஜேர்மானிய இராணுவத்தின் அழிவை, முன்னறிவித்ததைப் போலிருந்தது.

ஸ்ராலின்கிராட் அருகே நடந்த சமரில் பாசிஸ ஆக்கிரமிப்பாளர்களை செஞ்சேனை படுதோல்வியடையச் செய்தது. இந்த வெற்றி பாசிஸ ஜேர்மனியின் இராணுவத்தை முறியடித்ததில் பெரும் பங்காற்றியது. இரண்டாவது உலக யுத்தத்தின் முடிவை பெரிதும் முன்நிர்ணயித்தது. வொல்கா ஆற்றங் கரையில் இந்த வரலாற்றுச் சிறப்புள்ள வெற்றி, மிகக் கடினமான சூழ்நிலையில் அடையப்பட்டது. ஆபத்தான, வலிமையான எதிரியுடன் நடந்த மரணப்போரில் சோவியத் மக்கள் அனைவரின் பெரும் உதவியுடன் முன்பின் கண்டறியாத வீரம்மிகு வகையில் ஸ்ராலின்கிராடின் பாதுகாவலர்கள் எல்லாச் சோதனைகளையும் தாங்கி சமாளித்தனர். தற்காப்பு சண்டைகளில் எதிரியை அலைக்கழித்த செஞ்சேனை, 1942 இலையுதிர்க் காலத்தின் பிற்பகுதியில் ஸ்ராலின்கிராட் அருகே எதிர்த்தாக்குதலில் இறங்கியது. எதிரியின் துருப்புக்களைச் சுற்றி வளைத்தது. 1943இல் அவற்றை முறியடித்து சிறைப்பிடித்தது.

வொல்காவின் கரையில் நடந்த சமரில் ஆரம்ப நாள் முதல் இறுதிவரை நேரடிப் பங்கேற்ற மார்ஷல் சுய்க்கோவின் சண்டைகள் இங்கே தத்வரூபமாக வர்ணிக்கப்படுகின்றன.

ஸ்ராலின்கிராடில் நடைபெற்ற தற்பாது காப்புச் சண்டைகளைப்பற்றி எண்ணிப் பார்க்கும்போது, எங்களுடைய வெற்றியின் மூல ஊற்றுக்களைப்பற்றி என்னால் சொல்லாமல் இருக்கமுடியாது. ஸ்ராலின்கிராட் வாசிகளின் நெஞ் சுறுதியை உடைப்பதற்காக பாசிஸ்டுகள் மேற்கொண்ட எல்லா முயற்சிகளையும் எதிர்த்துச் சமாளிக்க எது உதவியது என்று என்னால் கூறாமலிருக்க முடியாது. முதலில், ஸ்ராலின்கிராட் வெற்றிக்கு அடித்தளமிட்டதில் கம்யூனிஸ்டுக் கட்சி, இந்த நடவடிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக சேவியத் மக்கள் அனைவரையும் அணிதிரட்டியது. வொல்கா அருகில் பாசிஸ யேர்மனியத் துருப்புகளை முறியடித்தது. இது இரண்டாவது உலகயுத்தத்தில் முக்கிய திருப்புமுனைக்கு வழியமைத்தது. நாங்கள் லெனிஸியக் கட்சிக்கும் அதன் மத்திய கமிட்டிக்கும் கடமைப்பட்டுள்ளோம்.

மிகவும் சிக்கலான சூழ்நிலைகளில், ஸ்ராலின்கிராட் சமர் துவங்குவதற்கு நீண்டநாட்கள் முன்னதாகவே கட்சி இத் திருப்புமுனையைத் தயார்ப்படுத்தியது.

யுத்தத்தின் முதல் ஆண்டில் நாட்டின் பல தொழிற்துறைப் பிரதேசங்கள் பாசிஸ்டுகளால் கைப்பற்றப்பட்டன என்பது தெரிந்ததே. கிழக்கே மாற்றி அமைக்கப்பட்ட பாதுகாப்புத்துறை தொழிற்சாலைகளை மிகவும் குறுகிய காலகட்டத்தில் இயக்குவிக்க வேண்டியிருந்தது. கிட்டத்தட்ட வெற்றிடத்தில் இந்த தொழிற்சாலைகளின் இயந்திரங்களை இறக்கி இயக்குவிக்கத் தேவையான ஆள்பலம், மின்சாரம், மூலப்பொருட்கள் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்ய, முழு உற்பத்தியை ஒழுங்கமைக்க தொழிலாளி வர்க்கம், விஞ்ஞானிகள், நிர்வாகிகளிடமிருந்து எவ்வளவு திறமையும் பொறுமையும் நெஞ்சுறுதியும் தேவைப்பட்டிருக்கும்!

பொருளாதார இடர்பாடுகளைச் சமாளிப்பது ஒருபுறமிருக்க, பாசிஜ ஜேர்மனியின் திடீர்ப் படையெடுப்பின் விளைவுகளை அகற்றுவதற்காக இராணுவ ரீதியில் கட்சி பெரும் சிக்கலான பணிகளைச் செய்ய வேண்டியிருந்தது.

மிகவும் ஆபத்தான, மிகவும் சிக்கலான இடங்களில் மக்களையும் போர் வீரர்களையும் அணிதிரட்டி வழிநடத்துவதற்காக, அங்கெல்லாம் கம்யூனிஸ்டுகள் அனுப்பப்பட்டனர்.

கட்சி அரசியல் பணியில் பேரனுபவம் உள்ள ஆயிரக்கணக்கான கமியூனிஸ்டுகள் சேனையின் துருப்புகளில் வந்து சேர்ந்தனர். நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலிருந்து 62வது படைக்கு வந்த 9,000 கம்யூனிஸ்டுகளில் 500க்கும் மேற்பட்டோர் வட்ட, மாவட்ட, நகராட்சி கமிட்டிகளின் செயலாளர்கள், பல்வேறு பிரிவுகளின் மேலாளர்கள், போதகர்கள், கூட்டுப் பண்ணைத் தொழிற்சாலை கமிட்டிகளின் செயலாளர்கள், மற்றும் கட்சித் தொண்டர்கள், கட்சி மத்திய கமிட்டிகளின் உறுப்பினர்களாகிய இ.வீ. கிரீலவ், அ.நி. குருக்லோவ், ருஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிசக் குடியரசின் அரசுப் பண்ணைகளுக்கான துணை மக்கள் கமிசார் அ.தி. ஸ்நூரப்பவ், இன்னும் சில தோழர்கள் ஆகியோர் படையின் அரசியல் பிரிவை வலுப்படுத்துவதற்காக வந்தனர். படையில் வலுவான கட்சி உட்கரு உருவாகியது. வலுவான கட்சிப் பிரிவு இல்லாமல் ஒரு கம்பனிகூட இருக்கவில்லை. 33வது, 37வது, 39வது கார்டு டிவிஷன்களிலோ பல பட்டாலியன்களில் முழுக்க முழுக்க கம்யூனிஸ்டுகளும் கம்சமோன் உறுப்பினர்களும் இருந்தனர்.

எல்லா முக்கிய இடங்களிலும் 62வது படை கட்சி உறுப்பினர்களை நிறுத்தியிருந்தது. "ஓரடி கூடப் பின்வாங்கக் கூடாது!" என்ற கட்சியின் – தாயகத்தின் கட்டளையை நிறைவேற்ற, எப்படிப் போரிட வேண்டுமென கம்யூனிஸ்டுகள் அணிநடைகளின் போதும் காப்பகழிகளிலும் சண்டைகளிலும் தம் உதாரணத்தின் மூலம் காட்டினர்.

"பின்வாங்குவதற்கு இனி இடமில்லை. எதிரியைத் தடுத்து நிறுத்துவது மட்டுமல்ல, எதிரியைப் பின்னுக்குத் தள்ளுவதும் சாத்தியமென நூற்றுக்கணக்கான, ஆயிரக் கணக்கான கம்யூனிஸ்டுகள் மக்களுக்கு விளக்கினர். அதற்கு நெஞ்சுறுதியும் திறமையும் மட்டும் இருந்தால் போதும். கம்யூனிஸ்டுகளின் உதாரணத்தையும் நெஞ்சுறுதியையும் எந்த அளவையாலும் அளக்க முடியாது."

துருப்புகளின் மீதும் ஒவ்வொரு போர்வீரனின் மனநிலை மீதும் இவர்கள் செலுத்திய செல்வாக்கை, இந்த யுத்தத்தைப் பற்றிய பெரும் நூல்களை இன்று மேற்கே எழுதித் தள்ளும் ஆசிரியர்களும் 2வது உலக யுத்தத்தில் கம்யூனிஸ்டுக்கட்சிதான் தீர்மானகரமான தாக்குதலுக்கு ஏற்பாடு செய்தது – செஞ்சேனைதான் இதை நிறைவேற்றியது என்பதை ஒப்புக்கொள்ள விரும்பாதவர்களும் என்றுமே புரிந்து கொள்ள மாட்டார்கள்.

எனவேதான், 62வது படையின் கம்யூனிஸ்டுகளுடைய போர்க்கள கட்சி – அரசியல் பணியின் அனுபவத்திலிருந்து சில உதாரணங்களைக் கூற விரும்புகின்றேன்.

படைகளின் எல்லா முக்கிய இடங்களிலும் கம்யூனிஸ்டுகள் இருந்தார்களென்று மேலே குறிப்பிட்டோம். அதாவது அரசியல் பணி, படையின் நோக்கங்களில் இருந்து தனியாகப் பிரிந்து இல்லாமல் போர்க்கள உத்தரவுகளை நிறைவேற்ற வகை செய்யும் பொருட்டு நேரடியாக துருப்புகளின் மத்தியில் நடைபெற்றதெனலாம்.

> "இறந்தாலும் இறப்போமே தவிர, இருந்த இடத்தைவிட்டு நகர மாட்டோம்" என்ற உறுதியுடன் ஸ்ராலின்கிராட்டின் பாதுகாவலர்கள் நின்றனர். இப்படிப் பட்டதொரு நெஞ்சுறுதியை மக்களிடம் ஏற்படுத்துவது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை.

புழுதி படர்ந்த சாலையின் வழியே வொல்காவை நோக்கி வரிசையில் செல்லும் ஒரு சாதாரண போர்வீரனை எண்ணிப் பாருங்கள்: அவன் களைத்துப் போயிருக்கின்றான். புழுதியும் வியர்வையும் கண்களை மறைக்கின்றன. தோளில் டாங்கி எதிர்ப்புத் துப்பாக்கியோ, கை இயந்திர பீரங்கியோ தொங்குகின்றது. இடுப்பில் தோட்டாக்களும் எறிகுண்டுகளும் அடங்கிய பை உள்ளது. முதுகில் தொங்கும் பையில் அவனுடைய மனைவியோ, தாயோ எடுத்து வைத்த சாமன்களும் சாப்பாட்டுப் பொருட்களும் இருக்கின்றன. அவன் தன் வயதான தாயை, மனைவியை, குழந்தைகளை எங்கோ தொலைவில் உள்ள கிராமத்தில் விட்டுவிட்டு வந்திருக்கின்றான். அவர்களைப் பற்றி அவன் எண்ணுகின்றான். அவர்களிடம் திரும்பிப் போவோமென்ற நம்பிக்கையோடு இருக்கின்றான். இதோ அவன் வொல்காவை நெருங்கி, நெருப்பாய் செம்பொன் நிறத்திலிருக்கும் வானத்தைப் பார்க்கின்றான். வெடியோசை கேட்கிறது. மீண்டும் வீட்டைப் பற்றிய, மனைவி – குழந்தைகளைப் பற்றிய நினைவு வருகின்றது. ஆனால் இப்போது அந்த நினைவு வேறுமாதிரியாக இருக்கிறது. நானின்றி எவ்வாறு அவர்கள் வாழ்வார்கள்? என்று அவன் யோசிக்கின்றான். அந்த நேரத்தில் தாயகத்தை எதிர்நோக்கியுள்ள மரண அபாயத்தைப் பற்றி, நாட்டின் முன் அவனுடைய கடமையைப் பற்றி அவனுக்கு நினைவுபடுத்தாவிடில், தன் எண்ணச் சுமையில் அவன் நின்றுவிடுவான் அல்லது தன் நடையின் வேகத்தைக் குறைப்பான். ஆனால் அவனோ நின்றுவிடாமல் நடை போடுகிறான். பாதையோரங்களில் உள்ள கோஷங்கள் அவனை முன்னோக்கி அழைக்கின்றன.



மார்ஷல் சுய்க்கோவ்

"தோழா! ஸ்டாலின்கிராடில் நீ எதிரியைத் தடுத்து நிறுத்தா விடின், அவன் உன் கிராமத்திற்கு வந்து உன் வீட்டைக் கொள்ளை அடிப்பான்."

"ஸ்ராலின்கிராடில் எதிரி ஒழித்துக் கட்டப்பட வேண்டும்".

"போர் வீரனே! நாடு உன் தியாகத்தை மறக்காது!"

"உன் குடும்பத்தை தாயகம் கைவிடாது"

மாலை நேரம் வருகிறது. இதோ ஃபெர்ரித்துறை. கரையோரமாக உடைந்து போன ஓட்டைவிழுந்த படகுகள். கரையோரமாக புதர்களின் அருகே குழிகளில் பள்ளங்களில் மனிதர் அமர்ந்திருக்கின்றனர். நூற்றுக்கணக்கானோர் அமர்ந்து இருந்தும் நிசப்தம் நிலவுகின்றது. வொல்காவின் மறுகரையில் தீப்பிழம்பால் சூழப்பட்ட நகரத்தையே எல்லோரும் மூச்சை அடைத்துக் கொண்டு பார்க்கின்றனர். அங்கே கற்கள் கூட எரிவதைப்போல் தெரிகிறது. சில இடங்களில் தீ நாக்குகள் வானம் வரை உயர்ந்திருக்கின்றன. அந்த நெருப்பின் மத்தியில் மனிதர்களால் நின்று போரிட முடியுமா என்ன! அங்கே அவர்கள் எதைச் சுவாசிக்கின்றனர். அவர்கள் இடிபாடுகளை, சாம்பலை, கற்குவியல்களையா பாதுகாக்கின்றனர்?..... ஆனால் மறு கரைக்குச் சென்று உடனடியாக சண்டையில் இறங்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

**தொடரும்.....**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






### சீறிவரும் சிறுத்தையோடு...

ஏர் எடுத்து நிலம் உழுது
ஏற்றம் மிகு கண்டவர்கள்
ஒதுங்க ஒரு இடம்தேடி-
சுருட்டுக்கும் தேனீருக்கும் -வீட்டு
திண்ணையிலே சுதந்திரம் கேட்டவர்கள்.
இன்று பொங்கிவரும் பகைகண்டு
சிறுத்தையோடு சேர்ந்து கொண்டோம்
தலைவனின் வழியில் தமிழீழ எல்லை காப்போம்.

-க. வி. தில்லையம்பலம், சுவிஸ்.

### கல்லாக இருக்கும்

பேரப்பிள்ளையுடன் கூடியிருந்து
குதூகலித்து வாழும்நேரம்
பெரும்படை சிங்களத்தை அழிக்க
பெரியோர்கள் புறப்பட்ட பின்னும்
கல்லாக இருக்கும் இளைஞர் சமூகமே
கணமேனும் கனியாத உன்மனதை
கொல்லாமல் கொன்றவர் இவர்
இதை கண்டேனும் கண்விழித்துக் கைகொடு.

-செ. ஜெயகரந்தன், யேர்மனி.

### மறுமலர்ச்சி

தாயக நேசத்திற்கு வயதேது-இதை எமக்கு
தந்துவைத்த தலைவனின் அறிவு இது.
ஏர் தாங்கித் தூக்கிய தோள் இது-இன்று
இயந்திரத் துப்பாக்கி ஏந்திப் போகுது.
உடலில் வலிமை குறைந்தாலும்-இவர்தம்
உணர்வு மங்கிப் போனாலும்
தமிழீழம் அங்கு மலரும்வரை-இவர்கள்
தாங்கிய ஆயுதம் கீழே வையார்.

-செல்வன் பி. ரஜீவ், யேர்மனி.

### விடியலுக்கு தொலைவேது

விடியலுக்குத் தொலைவேது-தமிழீழத்
தாகத்திற்குத் தளர்வேது
தம்பிபடை சேர எமக்குத் தடையேது
சிங்களப் படையின் சிறுமை கண்டோம்
எங்கள் இனங்காக்க உறுதிகொண்டோம்
பொங்கும் எங்கள் வீரமும்
மங்காத் தலைவன் தாகமும்
தந்திடுமோர் நாள் தமிழீழம்.

-புங்கையூர் ரூபாஷனி
பாலசுப்பிரமணியம், யேர்மனி.

### எல்லைகளைக் காப்போம்

ஈழம் காக்க-தமிழ் மண்ணில்
தென்றலும் புயலாகின
பூக்களும் புலியாகின
திண்ணையில் நாம் மட்டும்
தின்று-தூங்குவோமா?
தொல்லைகள் பல வரினும்
தமிழ் ஈழத்தின்
எல்லைகளை நாம் காப்போம்.

-சந்திரவதனா செல்வகுமாரன், யேர்மனி.

### அனைவரையும் புலிகளாக்கும்

ஆழ்ந்து சிந்தி, இரத்த ஆறு
அனைவரையும் புலிகளாக்கும்.
வாழ்ந்துகெட்டது போதும்
விடுதலைக்கு வாழ்வு கொடுப்போம்
வீழ்ந்துபடட்டும் எதிரி
வேங்கை சேரும் அணியால்
யாழ்முரசு ஒலிக்க
தமிழ் ஈழம் எமது ஆகும்.

-அனுசூயா இளையவன், யேர்மனி.

### ஈழமண்ணை மீட்பதற்காய்....

ஈழமண்ணை மீட்பதற்கு
விரைந்து சென்ற வேங்கைகளே
உங்கள்பின்னே நாங்கள் உள்ளோம்
எல்லைகளை காப்பதற்கு
கிழம் என்று எண்ணவேண்டாம்
உறுதி உண்டு எங்கள் நெஞ்சில்
உங்கள் எண்ணம் நிறைவேற
எல்லைவரை நாங்கள் நிற்போம்.

-ஜெயா, யேர்மனி.



### கதை முடியும்...

நேற்று எம்நிலத்தில் மூச்சுவிட அமர்ந்தபோது
வாழ்விடங்கள் சிதைத்து எலும்புகளை விதைத்தாய்
அனல்கனத்த இரவோடு எம்மை அகலவைத்தாய்
நாம் வனந்தனில் உரம்பெற்று எழுந்துவிட்டோம்
இருளைக் கிழித்தெறிய
மூத்தபரம்பரையினர் நிமிர்ந்துவிட்டோம்
பகையே எம்மண்ணில் நிலைகொள்ள முடியுமா
களந்தனில் உந்தன் கதை முடியும் - உறுதி!

-கரவை கலா, யேர்மனி.

### காவல் அரண்கள்

காலமும் அறிவும் எம்முதுமையின் கோலம்
சுதந்திர தாகத்தில் நாம் இளமையின் கோலம்
எம்பிள்ளைகள் உண்டு தாயகவாசலில்
உழைக்குமெங்கரம் ஆயுதம் ஏந்தும்
ஊர்தூங்கும் நேரம் நாம் தூங்கமாட்டோம்
வளையினுமெம் நெஞ்சம் அன்பிற்கு வளையும்
சுதந்திரம் வளையின் வேங்கைபோல் நிமிரும்.

-அருள், யேர்மனி.

### உறுதிகொண்ட உத்தமர்கள்

பத்துப்பேராய் பன்றி வேட்டையாடி
பகிர்ந்துகொண்ட காலம் ஓடி
படையணி ஒன்று பகலவன் தலைமையில்
படியேறி செல்கிறது சுதந்திரம்காண.

நரைத்த முடிகொண்டும் சளைக்காத உறுதி
இளைத்த உடல்கொண்டும் ஈகத்து வீரம்
கறைபடிந்த வாழ்வகற்றி கரையேறிவரும்வரை
உறுதிகொண்டு நிற்கும் உத்தம புருசர்கள்.

-சாவகச்சேரி சகுந்தன், சுவிற்சலாந்து.

**ஆக்கங்கள் அபிப்பிராயங்கள் அனுப்பியோர் அனைவருக்கும் நன்றி:**

### சுமை

எம் நெஞ்சிலுள்ள சுமையைவிட
தோளிலுள்ளது சுமையல்ல,
தள்ளாடும் வயதிலும்
தளராத நம்பிக்கை
அடுத்த சந்ததி
அகதியாக அலையாதிருக்க
தமிழீழம் மீட்க-நாங்கள்
புறப்பட்டோம் துணையாய்.

-திருமதி ரஜனி பாலா, யேர்மனி.

### இன்னுமா உயிருடன்....?

பிள்ளைகள் வாழவும் பெரும்புகழ் சூடவும்
உடலது வருந்த உழைத்துச் சேர்த்துமே
நல்மனை, பொன்னொடு நிதியமும் பொருளும்
நீள்வயல் புலமென வாரிக் குவித்துமே
எங்களின் தேசம் நினைத்திட மறந்ததால்......
இல்லிடம் அற்றதோர் அகதியாய் மாறினாய்
இன்னுமா உயிருடன் தேகம் சுமக்கிறாய்
இங்கிவர் கோலம் மனங்கொளக் கிளர்ந்திடு!

-பரதன், லண்டன்.

### வருக வெற்றி பெறுக

அன்று நெற்களத்தில்
களிறுவிரட்டிய கரங்களிவை
தாய் நிலம் தீண்டும் சிறு
நரிச் சேனைக்கா சிரம் தாழ்த்தும்.
தமிழ்படையின் துணைப்படையே
ஈழ வரலாற்றின் புதிய அத்தியாயமே
வருக வெற்றி பெறுக!

-கண்ணன், பிரான்ஸ்.

### எம் தமிழினமே!

வீரம் என்றால் என்னவென
உணர்ந்து கொள்ளுங்கள்
இன்றும் உறங்கிக்கொண்டிருக்கிறாய்
உம் கரங்கள் செயல் அற்றுவிட்டதா?

தள்ளாடும் வயதிலும் உள்ளம்
தமிழ் உணர்வு அற்று விடுமா
நீ, உறங்கியா கிடக்கிறாய்
துணை கொள் தமிழினமே.....

-நாவாந்துறை பிரேமானந்தன்,
யேர்மனி.

www.tamilarangam.net



# இரு வாரத்துக்கொருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

*அன்புச் சகோதரமே !*

தமிழீழத்தின் தந்தையெனப் போற்றப்படும் தந்தை செல்வநாயகத்தின் பிறந்தநாள் நூற்றாண்டு 31.03.98 உடன் பூர்த்தியடைகின்றது. இந்நேரத்தில் காலனித்துவ விலகலின் பின் 1949 முதல் 1976 வரையிலான 27 ஆண்டுகால தமிழீழ வரலாற்றின் செல்நெறியினைத் தீர்மானித்த வரலாற்றுத் தந்தையாக சாமுவேல் யேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் திகழ்கின்றார். இதனால் தந்தையின் வரலாறு ஒரு தனிமனிதனது வரலாறாக அல்லாது. தமிழீழத் தேச இனத்தின் வரலாறாக விமர்சிக்கப்பட வேண்டியதாக உள்ளது.

காலனித்துவம் விலகிய உடனேயே சிங்களப் பேரினவாதம் தனக்கு காலனித்துவ பிரித்தானியரால் கிடைத்த பாராளுமன்றப் பெரும்பான்மையை கொண்டு தமிழர் பிரதிநிதித்துவ விகிதாசாரத்தை வீழ்த்தத் தொடங்கியது. இது மலையகம் வாழ் தமிழருக்கு எதிரான குடியுரிமைப் பறிப்புடன் ஆரம்பமாகியது. இதனை இனங்கண்ட முதற்குரலாகத் தந்தை செல்வாவின் குரல் ஒலித்த பொழுதுதான் தந்தை செல்வா தமிழினத்தின் தந்தையாக உணரப்பட்டார்.

ஒடுக்குமுறைக்கு எதிராகச் செயற்படுதல் என்பதன் அவசியம் தந்தை செல்வாவால் தமிழரிடையில் வலியுறுத்தப்பட்ட பண்பு. அதனால்தான் அரசியல் ஒடுக்குமுறைகளுக்கு மட்டுமல்லாது. சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும். தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை. சமபந்தி போசனங்களை அவர் முன்னெடுக்கத் தொடங்கினார். பிரதேச வேறுபாடுகளை போக்கடிக்க மட்டுநகர் - அம்பாறை - திருகோணமலை - மன்னார் - வவனியாவைத் தனது அரசியல் பணிக்களமாகக் கொண்டு செயற்பட்டவர் தந்தை செல்வா.

தந்தையின் இந்தப் பணிகள் அனைத்தும் தமிழ்த் தேசியத்தை உறுதிப்படுத்துவதாக அமைந்து 'தமிழரசு' என்ற அரசியல் இயக்கமாக தமிழ் மக்களை உருவெடுக்க வைத்தது. 13.02.49ல் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் முன்றலில் தமிழரசுக் கட்சியின் ஆரம்பக் கூட்டத்தில் தந்தை செல்வநாயகம் தமிழீழத் தாயகக் கோட்பாட்டினை முதன் முதலில் இவ்வாறு கூறினார் :-

''16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர்கள் இலங்கைக்கு வருவதற்கு முன்னதாக இந்நாட்டு மக்களே தங்களுக்கென அரசுகள் அமைத்திருந்தனர். ஆதலால். நாங்கள் ஒரு விசயத்தை ஊன்றிப் பரிசீலனை செய்தல் வேண்டும். அதாவது. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருவதற்கு முன் இங்கு வசித்த மக்கள் பல நூற்றாண்டுகளாகச் சிங்களம் பேசும் இனம். தமிழ் பேசும் இனம் என இரு தேசிய இனங்களாகப் பிரிந்து வாழ்ந்து வந்தார்கள். விஜயன் காலம் தொடங்கிப் பல நூற்றாண்டுகளாகச் சிங்களம் பேசும் தேசிய இனத்தைப் பற்றியே பேசப்படுகிறது. இவர்களைச் சில காலங்களில் தமிழ் மன்னர்களும் அரசு புரிந்தார்கள். எனவே தமிழ் மக்கள் அவர்களிடையே எப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்பது புலனாகின்றது. பூமிசாத்திர சம்பந்தமான காரணங்களாலும் வேறு பல நியாயங்களாலும் இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதிகளில் வாழ்ந்தவர்கள் தமிழர்களே என்பது உறுதியாகிறது. தென்பகுதியில் இருந்த சிங்கள இராச்சியங்களுக்கும் இவர்களுக்கும் இடையே இருந்து வந்த முரண்பாடுகளுக்கு இறுதியான பரிகாரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. 9ஆம். 10ஆம் நூற்றாண்டளவிலே. வடபகுதித் தமிழ்ப் பிரதேசங்கள் பிரிந்து தனியரசாகின. இலங்கையின் தென்பகுதி. சில வேளைகளில் 2. 3 இராச்சியங்களாகப் பிரிந்திருந்தாலும் சிங்களப் பிரதேசமாகவே இருந்திருக்கிறது.''

இந்த தாயக உரிமையை இணைப்பாட்சி மூலம் மீள நிறுவுவதற்கான தமிழீழ மக்களின் பயணமே தமிழரசுக் கட்சியூடான தந்தையின் அரசியல் நடவடிக்கைகள். இதன் முதற் கட்டமாக தமிழர் தாயகக் கோட்பாட்டை மீள உலகுக்கு வெளிப்படுத்தும் செயற்பாடாக 03.09.49இல் நந்திக்கொடி. போர்த்துக்கேயரால் இறக்கப்பட்ட 330 ஆண்டுகளின் பின் அதே நல்லூர் சங்கிலித் தோப்பில் தந்தை செல்வாவால் ஏற்றிவைக்கப்பட்டது. இவ்வாறாக. மீளவும் விண்ணிலாடத் தொடங்கிய தமிழ்த் தேசக் கொடியை ஜனநாயக முறைமைகளூடாகச் சிங்களத் தேசக்கொடியுடன் சமத்துவமான இறைமையுள்ள கொடியாக இலங்கைத் தீவில் பட்டொளி வீசிப் பறக்கவைப்பதற்கான பாதையாகவே காலனித்துவ பிரித்தானியாவால் உருவாக்கப்பட்ட பாராளுமன்ற ஆட்சிமுறையைத் தந்தை செல்வா பயன்படுத்தினார்.

பாதயாத்திரைகள். சத்தியாக்கிரகங்கள். சிங்கள 'ஸ்ரீ' அழிப்புப் போராட்டங்கள் போன்ற பல ஜனநாயக வழிமுறைகளைக் கையாண்டு தமிழ் மக்களின் இறைமைக்கும் சிங்கள மக்களின் இறைமைக்கும் சமத்துவத்தைப் பெற முயன்ற தந்தை செல்வா. அண்ணல் காந்தியடிகளின் அகிம்சை வழிப் போராட்டங்களுக்குப் புத்துயிர் கொடுத்ததினால் ஈழத்துக் காந்தியெனவும் வரலாற்றுப் புகழ்கொண்டார்.

ஆனால். தமிழர்களை இரண்டாந்தர பிரஜைகளாகவோ நாடற்றவர்களாகவோ மாற்ற வேண்டுமென்ற அரசியல் நிகழ்ச்சி நிரலுடன் செயற்பட்ட சிங்களப் பெரும்பான்மை அரசுகள் தமிழர்களுடைய தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்களை நடாத்தி தமிழ் நிலத்தையும் பாராளுமன்ற விகிதாசாரத்தையும் பறிப்பதற்கும். தமிழர்களுடைய அரசியல்-பொருளாதார-சமூக உரிமைகளை ஒடுக்கி அவர்களை அடிமைச் சமுதாயமாக மாற்றுவதற்குமான ஒரு ஊடகமாகப் பாராளுமன்ற ஜனநாயக முறைமைகளை நெறிப்படுத்திய சிங்கள அரசுகள். தமிழர்களின் ஜனநாயக-அகிம்சைவழிப் போராட்டங்களை அலட்சியப்படுத்தியது மட்டுமல்லாமல். சிங்கள பௌத்த பேரினவாதத்தை நிலைப்படுத்தி தமிழர்கள் மேல் ஒரு முழுமையான ஆக்கிரமிப்பை வழிப்படுத்துவதற்கான கால அவகாசமாகவும் அதனை மாற்றிக் கொண்டனர்.

இதனை நன்குணர்ந்த தந்தை செல்வநாயகம் அவர்கள். 1972இல் சிறீமாவோ அரசு 'சிறீலங்கா' என்ற புதிய சிங்கள பௌத்த குடியரசாக இலங்கைத் தீவை மாற்றி - பிரித்தானிய காலனித்துவம் தமிழர்களும் சிங்களவர்களும் ஒற்றையாட்சியில் பங்குபற்றுவதற்கு விதித்த சோல்பரி அரசியல் அமைப்பு நிபந்தனைகளை வன்முறைப்படுத்திய பொழுது. தமிழர்களுடைய சுயநிர்ணய உரிமையைப் பின்வருமாறு சிறீலங்காப் பாராளுமன்றத்தில் 1975 காங்கேசன்துறை தேர்தல் வெற்றியை அடுத்துப் பிரகடனப்படுத்தினார் :- ''அந்நிய ஆட்சி ஏற்படும் வரை காலாதிகாலமாக தமிழர்களும் சிங்களவர்களும் இத்தேசத்தில் தனித்தனியான இறைமையுடன் வாழ்ந்து வருகின்றனர். தமிழர்கள் காலனித்துவத்திடமிருந்து சுதந்திரத்திற்காகப் போராடுவதன் மூலம் தங்களுடைய சுதந்திரத்தையும் மீளப் பெறலாம் எனும் முழு நம்பிக்கையுடனேயே போராடினர் என்பதை இங்கு நினைவு கூரவிரும்புகிறேன். நாங்கள் கடந்த 25 ஆண்டுகளாக ஐக்கிய இலங்கையில் சிங்கள மக்களுடன் சமத்துவமான அரசியல் உரிமைகளைப் பெறலாம் என்பதற்கான எல்லா முயற்சிகளையும் செய்தோம். மனவேதனைக்குரிய உண்மையென்னவென்றால். தொடர்ந்து வந்த சிங்கள அரசுகள் தமக்கு சுதந்திரத்தின் மூலம் கிடைத்த சக்தியைப் பயன்படுத்தி. எங்களுடைய அடிப்படை உரிமைகளை மறுத்து எம்மை அடிமை நிலைக்கு தள்ளியுள்ளனர். தமிழர்களுடைய இறைமையும் சிங்களவர்களுடைய இறைமையும் பொதுவாக வைக்கப்பட்டமையை தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தியே. இந்த அரசுகளால் இதனைச் செய்யமுடிந்தது. எனது தேர்தல் வெற்றியை தமிழீழத் தேச மக்களின் ஆணையாகக் கொண்டு தமிழீழ மக்கள் தம்மிடம் ஏற்கனவே நிலைகொண்டுள்ள இறைமையைக் கொண்டு விடுதலை பெற முடிவெடுத்துள்ளனர் என்பதை எனது மக்களுக்கும் இத்தேசத்திற்கும் அறிவிக்க விரும்புகின்றேன். தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பாக நாங்கள் இந்த ஆணையை முன்னெடுப்போம் என்பதை முழுமையாக உறுதிப்படுத்துகிறேன்.''

இவ்வாறு. தந்தை செல்வாவால் விடுக்கப்பட்ட தமிழீழ மக்களின் சுயநிர்ணயப் பிரகடனம். 1976 வைகாசி 14இல் வட்டுக்கோட்டை பண்ணாகம் தீர்மானம் மூலம் தமிழீழத் தேசப்பிரகடனமாக உயர்த்தப்பட்டு. 1977 தேர்தல் மூலம் இது தமிழ் மக்களால் அங்கீகரிக்கப்பட்ட குடியொப்பமாக மாற்றப்பட்டது. இந்தக் குடியொப்பத்திற்கான தேர்தல் விஞ்ஞாபனம். இத் தேர்தலால். தமிழீழத்திற்கான மக்கள் ஆணையைப் பெறும் தமிழ்ப் பிரதிநிதிகள் எவ்வாறு தமிழீழத்தை அமைப்பார்கள் என்பதையும் தமிழீழ மக்களுக்கு தெளிவாக பின்வருமாறு எடுத்து விளக்கியது :- ''தமிழ்த் தேச மக்கள் தங்களுடைய தாயகத்தில் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமது இறைமையை நிலைநாட்ட முடிவெடுத்துள்ளனர். இதனை உலகுக்கும் சிங்கள மக்களுக்கும் அறிவிப்பதற்கான ஒரே வழி தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்களிப்பதேயாகும். இந்த வாக்குகள் மூலம் இலங்கைத் தேசிய அரச பேரவைக்குத் தெரிவுசெய்யப்படும் தமிழ் பேசும் பிரதிநிதிகள் தம்மை தமிழீழத் தேசிய பேரவையாக மாற்றி. தமிழீழ அரசுக்கான அரசியல் சட்ட அமைப்பைத் தயாரித்து அதை அமைதியான முறைகளினாலோ அல்லது நேரடி நடவடிக்கைகளினாலோ அல்லது போராடியோ செயற்படவைப்பதன் மூலம் தமிழீழத்தின் சுதந்திரத்தை நிறுவிக்கொள்வர்.'

தந்தை செல்வாவின் மறைவுக்குப் பின். சிறீலங்கா விடுத்த தமிழீழ மக்கள் மீதான போர்ப் பிரகடனங்கள் தந்தையின் தமிழீழத் தேசப்பிரகடனத்தை போராடியே நிலை நாட்ட வேண்டிய சூழ்நிலைகளைத் தோற்றுவித்ததினால். தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் தலைமையில் தமிழீழ மக்கள் தமது தமிழீழத் தேசத்தை மீள நிறுவும் புனிதப் பணியைத் தொடர்கின்றனர்.

அன்புச் சகோதரமே! தந்தை செல்வநாயகம் சிங்களப் பெரும்பான்மை அரசின் மேலாதிக்கத்தில் இருந்து விலகுவது ஒன்றே தமிழீழ மக்களது அடிமைத்தனத்தினை இல்லாதொழிப்பதற்கான ஒரே வழி என்பதை தனது இறுதியாசையாக வெளிப்படுத்திச் சென்றவர். அதன்பின்னர் சிங்கள அரசுடன் ஒட்டியுறவாடிப் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தந்தை செல்வாவின் வழியிலிருந்து தவறியவர்களாகவே கொள்ளப்பட வேண்டியவர்களாக உள்ளனர். அது மட்டுமல்ல. தந்தை செல்வநாயகம் பேச்சுவார்த்தைகளூடாகத் தமிழ் மக்களின் தாயகம் -தேசியம் - தன்னாட்சி என்பவற்றை சிங்களத் தலைமைகளால் ஏற்க வைக்கப் பல வழிகளில் முயன்று. அவை எல்லாமே சிங்களப் பேரினவாதத்தால் தன்னை வளர்ப்பதற்கான கால அவகாசமாக மாற்றப்பட்ட வரலாற்றைப் பாடமாகக் கொண்டு. இனிமேல் தமிழீழ அரசியலமைப்பை செயற்படுத்துவதைத் தவிர வேறுவழியில்லை என்பதை உறுதியாக. இறுதியாக வெளிப்படுத்தியவர். இதனை அவமானப்படுத்தக் கூடிய முறையில். சிறிலங்காவுக்குப் புதிய அரசியலமைப்பைத் தயாரித்து தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் - சிறீலங்காவின் சட்டவாக்க - சட்ட அமுலாக்கம் -நிர்வாகம் என்பவற்றில் பங்கெடுத்து தமிழ் மக்களுக்கு நன்மைகள் செய்யலாம் எனக் கூறுகின்றவர்கள் யாராக இருந்தாலும் தந்தை செல்வாவின் தேசக் கனவுகளையும். தமிழ் மக்களின் இறுதியும் உறுதியுமான மக்கள் ஆணையான தமிழீழத் தேசப் பிரகடனத்தையும் அழிக்க முயலும் கயவர்களேயாவர். தந்தை செல்வா உயிருடன் இருந்த காலம் முழுவதும் தமிழ் மக்களின் வாக்குகளால் பிரதிநிதித்துவப்பட்ட எவரையுமே. சிங்கள அரசுகளின் மந்திரி சபையிலோ அல்லது சிங்கள அரசின் எதிர்க்கட்சி தலைமைப் பதவிகளிலோ அங்கம் வகிக்க அனுமதிக்காது. தமிழர்களின் இறைமையின் தனித்துவத்தைப் பேணியவர். டட்லி சேனநாயக்கா தேசிய அரசு அமைத்த பொழுது. தமிழ் மக்களின் தேசியத் தன்மையை அதில் பங்கேற்பதன் மூலம் வெளிப்படுத்தலாம் என்ற நிலை தோன்றிய பொழுதுகூட. தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் எவரையும் சிங்கள அரசின் அமைச்சரவையில் இடம்பெற அனுமதிக்காமை குறிப்பிடத்தக்க ஒன்று.

மேலும். சிறீலங்கா என்ற சிங்கள - பௌத்த பேரினவாத அரசு. தமிழீழ மக்களை ஆள்வதற்கான சட்ட அருகதையற்ற 'அந்நிய அரசு' என தந்தை செல்வாவால் பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னர். அதனுடனான எந்த உறவுகளும் தமிழீழ அரசின் நியாயப்பாட்டை சிறீலங்காவை ஏற்க வைப்பதற்கான இராஜதந்திர முயற்சியாக மட்டுமே அமையலாம் என்பதை நன்கு உணர்ந்த தந்தை செல்வா. இதற்கு தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறவர்களுக்கு வலிமை தேவை என்பதினாலேயே ''பிள்ளைகளுக்குத் தேவையான எல்லாவற்றையும் செய்யுங்கள்' என ஆயுதப் போராட்டத்திற்கான தனது ஆசியினையும் நல்கினார்.

இவைகளை எல்லாம் ஒப்பு நோக்கிப் பார்க்கும் பொழுது. தமிழீழ விடுதலைப் புலிகள் எனும் தமிழீழ மக்களின் தேச விடுதலை இயக்கம். தந்தை செல்வாவின் பணியைத் தொடர தங்கள் இன்னுயிர்களையே அர்ப்பணிக்கவும் தயங்காத தேச விடுதலை அமைப்பாக நம் கண்முன்னே தெரிகிறது. தந்தை செல்வா உச்சரித்த தாயகம் - தேசியம் -தன்னாட்சி என்ற தாரக மந்திரத்தை இன்று எங்கள் தமிழீழத் தேசத் தலைவன் உச்சரிப்பில் கேட்கின்றோம். நேற்று சாமுவேல் யேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் என்ற யாருக்கும் எதற்கும் விலைபோகாத் தந்தையின் தலைமையில் தமிழீழத் தேசத்தை மீள அமைக்கப் புறப்பட்ட தமிழீழ மக்களாகிய நாம். இன்று வேலுப்பிள்ளை பிரபாகரன் என்ற யாருக்கும் எதற்கும் விலைபோகாத் தலைவனின் உறுதியான வழிகாட்டலில் தமிழீழத் தேசவிடுதலையை யாராலும் தடுக்க முடியாத நிலையில் நெருங்கிக் கொண்டிருக்கின்றோம். இதனை விரைவுபடுத்த உழைப்பதே நாம் தந்தை செல்வாவுக்குக் காட்டும் பேரன்பாகவும் பெருமதிப்பாகவும் அமையும்.

-அன்பின் ஆசிரியர்

www.tamilarangam.net



# தீமைகள் ஒழிந்து போகட்டும்

உரு வளர்ந்து அறிவு பெருகி
உலகத்தின் ஓட்டத்தில்
உன்னை இணைத்துக்கொண்ட
உனக்குள் இருந்த மனிதம்
ஏன் உக்கிப்போனது?
தொலைவறுந்து தூரச்சென்ற
சிந்தனைக்குள் இது சிறுமையென
எப்படிப் புரியாமல் போனது?
இன்னமும் சரியாக வேர்விடாத
இந்தச் சிறுநாற்றை
எப்படித் தணலிலிடத் துணிந்தாய்?
பண்படுத்தப்பட்ட
ஒழுக்கம் கடைக்கொள்ளும்
சமூகத்துள் நச்சுமரமாய்
எப்படி நீ, முளைத்தாய்—உன்
உள்ளத்துள் எழுந்த வக்கிரங்கள்
உலகமறியாப் பூஞ்சிட்டின்
சிறகினை அறுத்ததே.

இணையிருந்தும்,
கூடிக்குலவி மகிழ்ந்து
எல்லா இன்பத்தையும்
பகிர்ந்தளிக்க உன்மனைவிமிருந்தும்,
இப்போதுதான்
வேர்விடத்தொடங்கிய
அந்த எட்டுவயதுப் பிஞ்சை
உனது உடற்பசிக்கு இரையாக்கினாய்.
உலகம் ஒளிமயமாகத்
தெரியத்தொடங்கியபோதே
அவளைக் குருடாக்கிய பாவி நீ,
உனது மனைவி
தருவதற்கு ஈடாகாத எதை
இந்தப் பிஞ்சிடம் எதிர்பார்த்தாய்?
கேவலம்!
உனது மூத்த புதல்விவிலும்
வயதில் குறைந்த பிள்ளையிவள்.
உருவம் வளர்ந்தும் வளராத மனிதம்.
அறிவு பெருகியும்
அடக்கத் தெரியாத மிருக உணர்வு,
மன்னிக்கவும்.
விலங்குகள்கூடப் பருவமறிந்து
இணையும் இப்புவி இயக்கத்தில்
மனிதனும் விலங்குமற்ற
ஏதோ ஒரு விநோதமாய்
இப்போது நீ,
செய்வதெதுவும் புரியாத
இச் சிறு தளிரை அடக்கி,
ஆசை வார்த்தை காட்டி,
இன்னவென்று விளங்காத
சேட்டைகள் புரிந்து,
இனிப்புக்கும் இரண்டொரு
உடுப்புக்கும் பணியவைத்து,
அவள் அறியமுடியாத உலகுக்குள்
உள்ளிழுத்து
நாளும் பொழுதும் நீ, களித்திருந்தாய்.
சின்னப்பிள்ளை
யாரிடம் சொல்லும் என்று
விளையாட்டுக்காட்டிய உனக்கு
விளையாகியபோதாவது
உறைத்ததா?

குடும்ப மானத்தை
நடுவீதிக்கு கொண்டுவந்து,
நீ, வகித்த பதவியெல்லாம்
காற்றில் பறக்கவிட்டு,
உற்றார் உறவினர் உனைத் தூற்ற,
சட்டத்தின் பிடியில் கழுத்துக்குக்
கயிறை எதிர்பார்த்து நிற்கின்ற
குற்றவாளியாய் இன்று நீ,

உன்னைத் தூக்கிலிட்டும்
துடைக்கமுடியாத அவப்பெயர்
ஒருபுறம் இருக்கட்டும்.
என்ன விலைகொடுத்தும்
வாங்கிவிட முடியாத
அந்தப் பிஞ்சின் எதிர்காலத்தை,
எந்த சிகிச்சைகளாலும்
செதுக்கிவிட முடியாத
அவளின் மனோநிலையை
யார் மீட்டுக் கொடுப்பார்?
இருட்டுக்குப் பின்னே ஒளிந்திருக்கும்
இந்தக் கறுத்துப்போன உணர்வுகள்
உனக்கு மட்டுமல்ல.
இன்னும் ஒளிந்துகிடக்கும்
மனிதப் பிண்டங்களில்
நீ, ஓர் உதாரணம்.
வேர்விட முன்பே
விழுங்கப்பட்ட வாழ்வுகள்
இங்கும் ஏராளம்.
உலகத்தை இன்று உலுப்புகின்ற
இக்கொடிய நோய்—தன்
வேர்களை இங்கும் விரித்துள்ளது.
சாவொறுப்போடு
முடிந்து போவதல்ல இந்தக் கொடுமை.
அந்தத் தளிருக்குள்,
அதற்குள்ளால் விரியப்போகும்
ஒரு புதிய உலகுக்குள்
ஊடுருவப் போகின்ற வடு
மறைவது எப்போது?
சுருக்குக் கயிற்றில்
முடிந்துவிடாத உனது பாவம்
ஏழேழு பிறப்புகள்
அல்ல
ஏழேழு தலைமுறைகள் தாண்டியும்
கூடவரும் என்பதை
உணர்வாயா நீ?
இப்போது
உன் மனைவியும்
இரண்டு பெண் குழந்தைகளும்
நடுவீதியில்.
யாரால் இந்த அவலம்?
இருண்ட உணர்வுகளால்
இல்லாது ஒழிந்துபோகும்
உனக்கும்
உன் போன்றவர்க்குமான
இப்பாடம்
எல்லோருக்குமே புரியட்டும்.
உன் இளங்குருத்துகளாவது
உன் போன்றவர்களால்
ஒடுங்கிவிடாது இருக்கட்டும்.

*—அம்புலி*

# தாய்மண்

கிளைகளை
வேண்டுமானால்
எங்கேயும் பரப்புங்கள்!

ஆனால்....
உங்கள் விழுதுகள் மட்டும்
வேர் பிடிக்கட்டும்
தாய்மண்ணில்!

சந்ததி செய்ததவறை
மீண்டும்
நாம் செய்யலாமா?

இந்த மண்ணை
இந்த இனத்தை
நாங்களும் நேசிப்போம்!

தேசத்தின் விடியலில்
பங்கு இல்லையா?

தாய்மண்
சிரிப்பதைப் பார்த்தால்
சந்தோசம் வராதா?

சுதந்திர பூமியில்
புழுவாய்ப் பிறக்கினும்
அந்நிய தேசத்தில்
அடிமை வாழ்வு சம்மதமா?

எந்தப் பளிங்குத்தரையிலும்
இல்லாத பாதசுகம்
எங்கள்
தாய் மண்ணில்தான் இருக்கிறது!

மல்லாந்து படுக்கும்போது
தாய்மடியிலும் பார்க்க
தாய்மண்ணில்தானே
சுகம் அதிகம்!

*— துறையூரான்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்